# நானிலம் போற்றும் நன்னகர்



ஆசிரியர்:

எம். இத்ரீஸ் மரைக்காயர்

# நானிலம் போற்றும் நன்னகர்

ஆசிரியர் :

**எம். இத்ரீஸ் மரைக்காயர்**

இந்நூல் 1990 டிஸம்பர் 29, 30, 31-ல் கீழக்கரையில் நடைபெறும் ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டினையொட்டி வெளியிடப்படுகிறது.

வெளியிடுவோர் :

**மரைக்காயர் பதிப்பகம்**

3, ரட்லண்ட்கேட் 2-வது தெரு,

சென்னை-600 006.

உரிமை பதிவு செய்யப் பெற்றது.

முதற் பதிப்பு : டிஸம்பர் 1990

★ அச்சிட்டோர் :
எம்கே பிரிண்ட்ஸ்
2, முதல் சந்து, அங்கப்ப நாயக்கன் தெரு
சென்னை-600 001.
☎ 517830

# சமர்ப்பணம் !

கீழக்கரைக்கு அருகாமையில் உள்ள மீசல் எனும் ஊரில் பிறந்து, தும்பளக் கோட்டையில் அடக்கமாகி யுள்ள முஹம்மது இப்ராஹீம் என்ற வண்ணக் களஞ்சி யப் புலவர் பாடிய இராஜ நாயகம் காப்பியத்திற்கு கொடை நாயகராகிய வள்ளல் சீதக்காதியின் வழித் தோன்றல் வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயரின் பெயரரும், எனது தந்தையின் பாட்டனாருமாகிய சேதுபதி அரசவையில் அமைச்சராக இருந்தவர்களு மான வள்ளல் பட்டத்து சுல்தான் அப்துல்காதிர் மரைக்காயர் அவர்களுக்கு இந்நூலை காணிக்கை யாக சமர்ப்பிக்கின்றேன்.

—எம். இத்ரீஸ் மரைக்காயர்.

# முன்னுரை

பழம்பெரும் பவித்திரமாணிக்கப்பட்டணமாகிய கீழக்கரையின் புகழையும் வரலாற்றுச் சிறப்பையும் இதுவரை உலகத்தினருக்கு எடுத்துக் காட்டாததால் இலைமறை காயாக இருந்து விட்டன. மேலும், இவ்வூருக்குரிய ஆதார சான்றுகளை மக்களுக்கு எடுத்துக்காட்டாவிட்டால், வரும் சந்ததியினருக்கு இப்புனிதமான கீழக்கரையின் கீர்த்தியும், சிறப்பும் மறைந்துவிடும் என்ற அச்சத்தினால் இன்று வரை கிடைத்துள்ள சான்றுகளை ஆதாரமாக வைத்து இந்நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முன் வச்சிர நாடாகிய கீழக்கரையில் அரசு செலுத்தி வந்த ஒரு முஸ்லிம் அரசரை 'பல்சந்த மாலை' எனும் நூலில் புகழ்ந்து பாடிய புலவர், "வானம் நாணும் அளவுக்கு கொடை கொடுக்கும் வள்ளல்கள்" எனவும், "மரக்கலங்களில் சென்று ஏழு கடல்களையும் கடந்து வர்த்தகம் செய்து பொருளீட்டும் சோனகர் வச்சிர நாட்டார்" எனவும் கூறுகிறார்.

கீழக்கரையில் பதினெட்டு மொட்டையர் பள்ளியில் 750 ஆண்டுகளுக்கு முன் அடக்கமாகியுள்ள சமாதி கல்லில் மாலிம் ரஷீது என குறிக்கப்பட்டுள்ளது. மாலிம் என்பது கப்பலின் தலைவர் (captain). 275 ஆண்டுகளுக்கு முன் வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயர், 'ஐத்ரூஸ்' என்னும் கப்பலைக் கட்டி, அதில் 120-க்கும் மேற்பட்ட உலமாக்கள், சூபிகள், புலவர்கள் போன்றவர்களை அழைத்துக் கொண்டு, உண்டி, உடை, குர்பானி மற்றும் கப்பல் செலவுகள் உட்பட சகலவற்றையும் தானே ஏற்று மக்கா சென்று புனித ஹஜ்கடமையை நிறைவேற்றி வந்தார்கள் என்று சான்று பகர்கின்றன.

சென்ற நூற்றாண்டிலும், இந்நூற்றாண்டின் முற்பகுதிலும் கீழக்கரையிலுள்ள வர்த்தக பண்டகசாலைகளுக்கு சொந்தமான கப்பல்கள் அனேகமிருந்தன. அதில் முக்கியமானது

வள்ளல் ஹபீபு மரைக்காயர் அவர்களின் கீழப் பண்டக சாலைக்கும், அன்னாரின் குடும்பத்தினருக்கும் 40 கப்பல்கள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது, அதில் முக்கியமாக, 'முகியித்தீன் பக்ஷ்'-'காதர் பக்ஷ்', என்ற இரு கப்பல்களும் அக்காலை புகழ் பெற்றதாக விளங்கின.

உ. சி. நூர் முகம்மது முதலாளியின் பண்டக சாலைக்குரிய பல கப்பல்களில், 'முகம்மது சமதானி' என்ற பெரிய கப்பல் இருந்தது, கா. தி. மு. அப்துல் காதிர் சாஹிபு முதலாளியின் பண்டக சாலைக்குரிய, 'சுலைமானி'- 'கரீம் பக்ஷ்'-'மீனாட்சி' என்ற மூன்று கப்பல்களில் சுலைமானி முக்கியமானது. இதே போன்று மேல பண்டகசாலை லெப்பைத் தம்பி மரைக்காயருக்குச் சொந்தமான பல கப்பல்கள் இருந்தன. நடுப்பண்டக சாலை அப்துல் காதிர் முதலாளிக்கும், செ. மு. முகம்மது சதக் முதலாளி பண்டக சாலைக்கும், அ. ச. வா. முதலாளி பண்டக சாலைக்கும், ப. அ. முதலாளியின் ஐந்து வாசல் பண்டக சாலைக்கும் பல கப்பல்கள் இருந்தன.

700 ஆண்டுகளுக்கு முன் கீழக்கரைக்கு வருகை தந்த உலகப் புகழ் பெற்ற பயணி இப்னு பதூதா, இவ்வூரின் முஸ்லிம் மக்கள் இஸ்லாமிய பக்தி உடையவர்களாக இருந்தனர் என்று கூறுவதுடன் கீழக்கரையின் இயற்கையான துறைமுகத்தின் சிறப்பை வருணித்து, கீழ்நாடு-மேல்நாடுகளில் இருந்து அனேக கப்பல்கள் இத்துறைமுகத்துக்கு வந்து போவதுடன் அரபு நாடுகளிலிருந்தும் ஏராளமான குதிரைகள் இத்துறை முகத்தில் இறக்குமதி ஆவதாகவும், இத்துறைமுகத்திலிருந்து எமன் தேசம் போகும் எட்டு கப்பல்களில் ஒன்றில் தான் கொல்லம் போனதாகவும் இப்னு பதூதா கூறுகிறார்.

கி. பி. 14-ம் நூற்றாண்டில் தென்னாட்டின் மீது படையெடுத்து ராமேஸ்வரம் வந்த 'மலிக்காபூர்' கீழக்கரையில் அரபிகள் குடியிருந்ததைப் பார்த்ததாகக் கூறுகிறார். அரபிகள் முதன் முதலில் வந்து குடியிருந்த ஊர் கீழக்கரையேயாகும்.

கிழக்கரையே மதுரைப் பாண்டியர்களின் கொற்கைத் துறை முகப்பட்டினம் என்று இருந்ததை உறுதிப்படுத்தும் ஆய்வாளர் களின் சான்றுகளைக் காண்போம். (1) Tirunelveli Gazetteer vol I. Page 431-1917-ல் கீழக்கரையை கொற்கை என கூறி யிருப்பதை Dr. Wilson Bowden Prof. of Sanskrit at Oxford. கீழக்கரையை கொற்கை என குறிப்பிடுகிறார். (2) Von Christian Lassenதமது Indische Alter Thomskunde-Vol I 1852 கீழக்கரையை கொற்கை என குறிப்பிட்டு, தாம் வரைந் துள்ள படத்திலும் கீழக்கரையை கொற்கை என்பதாக காட்டு கிறார். (3) கி. பி. 1886-ல் London Imperial Gazetteer of India இரண்டாம் பதிப்பு தொகுதி எட்டு பக்கம் 216-ல் கீழக்கரையை தாலமி கொற்கை எனக் குறிப்பிடுகிறார். (4) S. Arunachalam The History of pearl Fishery of the Tamil coast பக்கம் 15-ல் Lassen-னின் கருத்தினை "Kolkhoi referred to by Ptolemy is identified with Kilakkarai of the Ramanathapuram District by Lassen" என குறிப்பிடுகிறார். (5) சதாசிவப் பண்டாரத்தாரின் பாண்டியர் வரலாறு பக்கம் 6-7-ல் கீழக் கரையை கொற்கை எனக் குறிப்பிடுகிறார்.

1990 டிஸம்பர் 29, 30, 31 தேதிகளில் கீழக்கரையில் நடை பெறும் ஐந்தாம் உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில், 'நானிலம் போற்றும் நன்னகர்' எனும் இந்நூல் வெளியிடப் படுகிறது.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் டாக்டர் அல்ஹாஜ் ம. முகம்மது உவைஸ் அவர்களுக்கும், இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த எம். கே. பிரிண்டர்ஸ் நிறுவனத்தாருக்கும், மேலும் இந்நூல் உருவாவதற்கு உறு துணையாக இருந்த என் நண்பர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

—எம். இத்ரீஸ் மரைக்காயர்

# வாழ்த்துரை

ஐந்தாவது உலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடு கீழக்கரையில் நடைபெறுவதை முன்னிட்டுப் பல நூல்களும் சஞ்சிகைகளும் வெளியிடப்படுகின்றன. மாநாடு நடைபெறும் பொழுது மாநாட்டுச் சிறப்பு மலர் வெளியிடப்படுவது மரபாகும் கீழக்கரை மாநாட்டைப் பொறுத்தவரையில் மூன்று மலர்கள் வெளியிடப்படுகின்றன. பொதுவாக அமையும் மாநாட்டுச் சிறப்பு மலரோடு வேறு இரண்டு சிறப்பு மலர்களும் வெளியிடப் படுகின்றன. சிறப்புமலர்கள் இரண்டும் கீழக்கரையின் புகழைப் பற்றி எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளன.

கீழக்கரை சிறப்பு மலர்கள் இரண்டும் அவ்வூர் மக்களின் வாழ்க்கையின் அமைப்பை இரண்டாகப் பிரித்து ஆராய்கின்றனவாய் அமைந்துள்ளன. அரசர், இறைநேசர், புரவலர், புலவர் மெய்ஞ்ஞானியர், ஆகிய ஐம்பெருங் குழுவினர் பற்றிய விவரங்கள் முதலாம் மலரில் தரப்பட்டுள்ளன. இரண்டாவது மலரில் கீழக்கரை மக்களின் கல்வி, கலை, சமயம், லோசாரம், பொருளியல் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி பேசப்படுகிறது.

இந்த மலரில் ஐந்து பாண்டிய மன்னரோடு ஆறாவது பாண்டியனாக கடமை புரிந்த கருப்பாறு காவலர் தக்கியுத்தீன் போன்ற அரசர்கள், அரபுக் கவிதை படைத்த சதக்கத்துல்லா அப்பா போன்ற இறைநேசச் செல்வர்கள், 'ஐதுரூஸ்' என்னும் பெயரில் கப்பல் அமைத்த லெப்பை நயினார் மரைக்கார் போன்ற புரவலர்கள், சீறாப்புராண ஆசிரியர் உமறுப்புலவர், திருமணக்காட்சி ஆசிரியர் சேகாதி நயினார்ப் புலவர் போன்ற புலவர்கள் சையது ஆசியா உம்மா போன்ற சூபி மெய்ஞ்ஞானியர் பற்றிய செய்திகள் இங்கு தரப்பட்டுள்ளன.

அழகு தமிழில் இனிய நடையில் உள்ளங்களைக் கவரும் பாணியில் சொற்சுவை, பொருட்சுவை ததும்பும் வகையில் அமைந்துள்ளது இந்நூல். கீழக்கரையின் புகழைப் பாடுவதையே பேச்சும் மூச்சுமாகக் கொண்ட அல்ஹாஜ் முகம்மது இத்ரீஸ் மரைக்காயர் இதன் ஆசிரியராவார். முன்பு வணிகத் துறையில் ஈடிணையற்றவராகத் திகழ்ந்த இத்ரீஸ் ஹாஜியார் அவர்கள் இப்பொழுது இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மறு மலர்ச்சியில் ஆர்வங் காட்டி வருவதோடு அத்தகைய ஆர்வத்தை செயல் முறைப்படுத்தியும் வருகிறார். அவர்தம் மூதாதையரின் நற்பணியையே இன்று அவர் பின் பற்றி வருகிறார் என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது.

அத்தகைய பெரியாரின் தொண்டு பாராட்டப்பட வேண்டியதோடு பின்பற்றப்படவேண்டியதொன்றுமாகும். அவர்தம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பணி வளர்க என வாழ்த்துகிறேன். எல்லாம் வல்லஅல்லாஹுத் தஆலா நல்லருள் பாலிப்பானாக.

15-11-1990
'மர்கஸி'
ஹேனமுல்லை
பாணந்துறை
இலங்கை

ம. முகம்மது உவைஸ்



# பொருளடக்கம்


1. சீர்த்திமிகும் கீழக்கரையின் சிறப்பு வரலாறு 1
2. மார்க்கோபோலோ 2
3. இப்னு பதூதா 7
4. முத்துக் குளித்தல் 12
5. சுல்தான் தகீயுத்தீன் 17
6. வள்ளல் சீதக்காதி 21
7. கொடை வள்ளல் அபுல்காசிம் மரைக்காயர் 29
8. வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயர் 31
9. அவ்வாகாரு மரைக்கார் என்ற அப்துல் காதிர் மரைக்காயர் 37
10. வள்ளல் ஹபீபு அரசர் என்ற ஹபீபு மரைக்காயர் 39
11. பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர் 49
12. அஷ்ஷெய்கு மகுதூம் சின்னெயினா வலியுல்லாஹ் என்ற அப்துல் காதிர் (ஒலி) 52
13. இமாம் ஷெய்கு சதக்கத்துல்லா அப்பா (ஒலி) 54
14. தொண்டி அப்பா என்ற அபூபக்கர் (ஒலி) 59
15. அப்துல் காதிர் (ஒலி) 61
16. ஜமால் முஹம்மது (ஒலி) 73
17. கீழக்கரை தைக்கா சாஹிபு என்ற அஷ்ஷெய்கு அப்துல் காதிர் (ஒலி) 81
18. மூஸா லெப்பை ஆலிம் (ஒலி) 84
19. வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் (ஒலி) 85
20. சீனி முஹம்மது லெப்பை ஆலிம் (ஒலி) 87
21. அஷ்ஷெய்கு இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ஒலி) 89

22. கல்வத்து நாயகம் எனும் செய்யிது
அப்துல் காதிர் (ஒலி) 93
23. பல்லாக்கு ஒலி என்ற ஹபீப் முஹம்மது
சதக்கத்துல்லாஹ் (ஒலி) 95
24. செய்கு அலாவுதீன் (ஒலி) 97
25. ஜல்வத்து நாயகம் எனப் புகழ் பெற்ற
ஷாஹுல் ஹமீது ஆலிம் (ஒலி) 99
26. தைக்கா ஷெய்கு நாயகம் எனப் புகழ் பெற்று
விளங்கிய அஹ்மது அப்துல் காதிர் ஆலிம் (ஒலி) 100
27. மகானந்த பாவா எனப் புகழ் பெற்று விளங்கிய
முஹம்மது அப்துல் காதிர் (ஒலி) 102
28. ஆமினா உம்மா 103
29. ஆயிஷா உம்மா 104
30. குணங்குடி உம்மா என்ற முஹம்மது
பாத்திமா நாயகி 105
31 மக்கத்து உம்மா என்று புகழ் பெற்று
விளங்கிய செய்யிது பாத்திமா நாயகி 107
32. கருத்த உம்மா என்ற முஹம்மது உம்மா 109
33. ஆமினா உம்மா 110
34. சூபி செய்யிது ஆசியா உம்மா 111
35. பல்சந்த மாலை 113
36. ஆயிர மசலாவெனும் அதிசய காப்பியம் 116
37. சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவர் 120
38. திருமணக் காட்சி 126
39. சின்ன சீறா 128
40. நூறு நாமா 130
41. அடைக்கல மாலை 132

42. ஷுஅபுத்தீன் மாலை 133
43. கருத்த சதக் தம்பி புலவர் 134
44. தமிழ்ச் சங்க வித்வான் செய்யிது முஹம்மது ஹாஃபிலு ஆலிம் புலவர் 137
45. அப்துல் மஜீது மரைக்காயர் புலவர் 139
46. அப்துல் ஹன்னான் புலவர் 140
47. ஜமால் முஹம்மது ஆலிம் புலவர் 141
48. K. T. M. S. அஹ்மது புலவர் 141
49. சேது நாடும் தமிழும் 142
50. திருப்புல்லாணிக் கோயில் கல்வெட்டு கூறும் பௌத்திர மாணிக்கப்பட்டினம் 143
51. கல்வத்து மாலை 147
52. மேற்கோள் - பார்வை நூற்பட்டியல் 148
53. கீழக்கரையின் மறுபெயர்கள் சான்றுகளுடன் 152
54. அச்சிற் பதிப்பித்த வரலாறு 154

# நானிலம் போற்றும் நன்னகர்

## 1

## கீர்த்திமிகும் கீழக்கரையின் சிறப்பு வரலாறு

கீர்த்திமிகு கீழக்கரைக்கு அனேக சிறப்பு வரலாறுகள் இருந்தும் அவற்றை கவனிக்காததால் அவை மறைந்தும், பலரால் மறைக்கப்பட்டும், அதன் உண்மை சிறப்புகளை வெளி உலகு அறிய இயலாநிலை ஏற்பட்டுவிட்டது இதன் உண்மை நிலையை இவ்வுலகிற்கு எடுத்துக் கூறவேண்டியது நம் கடமை யாகிறது.

முதற் சங்க கால பாண்டியரின் தலைநகரம் தென் மதுரை என்பதாகும். இது குமரியாறு கடலில் சேருமிடத்தில் இருந்த தெனக் கூறுவர். கடற்கோளொன்றினால் இந்நகரம் அழிக்கப் பட்டதாக வரலாறு கூறுகிறது.

இடைச் சங்க கால பாண்டியரின் தலைநகரம் கபாடபுரம் என்பர். இது தாமிரபரணி ஆற்றுக்கும், குமரியாறு கடலில் சேருமிடத்திற்குமிடையில் கடற்கரை பட்டணமாக இருந்தது என வரலாறு கூறுகிறது. இரண்டாவது கடற்சீற்றத்தினால் கபாடபுரமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் அழிந்துவிட்டன ஆனதால், பாண்டியர்களின் தலைநகரமாக இன்றுள்ள மதுரை மாநகர் மாற்றப்பட்டது. மதுரை நகரை தலைநகராக்கி ஆட்சி புரிந்த முதற் பாண்டிய மன்னன் முடத்திருமாறன் ஆவான். கபாடபுரம் அழிந்த பின் கடைச்சங்க காலத்தில் சோழ நாட்டில் பூம்புகார் என்னும் துறைமுகப்பட்டினம் ஏற்பட்டது. இது தமிழ் நாடு முழுவதற்கும் கடல் துறைமுகப்பட்டினமாக விளங்கியது. பூம்புகார் துறைமுகப்பட்டினமும் கடற்கோளால் அழிந்து போனபின் பாண்டிய மன்னர்களுக்கு கடல் துறைமுகப்பட்டினம் இருக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கருதி பாண்டியர்களின்

ஆட்சித் தலைநகராகிய மதுரைக்கு சமீபத்தில், அறுபது மைல் தொலைவிற்குள் உள்ள இயற்கைத் துறைமுகமாகிய இன்றைய கீழக்கரையை பெரும் கடல் துறைமுகமாக விரிவுபடுத்தி *கொற்கை துறைமுக நகரமாக கி.பி. இரண்டாவது நூற்றாண்டில் பாண்டியர்கள் அமைத்தனர். (சதாசிவப் பண்டாரத்தா பாண்டியர் வரலாறு, பக்கம் (6-7-ல் பார்க்க)

பாண்டியரின் தலைநகரான மதுரைக்கு அண்மையில் வேறு இயற்கைத் துறைமுகம் இல்லாததாலும், மற்ற கடற்கரை பகுதிகள் மணற்பாங்காக இருந்ததால் கொற்கை (கீழக்கரை)த் துறைமுகம் மதுரைக்கு 60 மைல் தூரத்தில் கற்பாறைகள் நிறைந்து விரோதிகளின் கப்பல்கள் ஆள்காட்டிகளின் (pilot) உதவியில்லாமல் துறைமுகத்திற்குள் இலகுவில் கப்பல்கள் புக முடியாமல் இயற்கையாக அமைந்திருப்பதால் (கீழக்கரை) கொற்கையைத் தமது துறைமுகப்பட்டினமாக பாண்டியர்கள் தேர்ந்தெடுத்தார்கள். கீழக்கரை துறைமுகத்தினை பழம் பெரும் கொற்கை**யென ஆய்வாளர்கள் ஏற்றுக்கொண்டு கூறு வதைப் பார்ப்போம்.

இத்துறைமுகத்துக்கு சமீபத்தில் சங்கிலித் தொடர்களாக சிறிய தீவுகள் அதிகம் உள்ளன. அவைகள் அப்பாத் தீவு, முயல் தீவு, வாழைத்தீவு, நல்ல தண்ணீர்த்தீவு, நெய்னாத்தீவு போன்ற 22 தீவுகள் இருப்பதால் கடல்கோளுக்கு வாய்ப்பு இல்லாதிருப்பதை கருத்தில் கொண்டு ஏற்கனவே சிறிய துறை முகப் பட்டினமாக இருந்த ***இக்கொற்கை எனும் கீழக்கரை துறைமுகத்தை தேர்ந்தெடுத்து விரிவு படுத்தி, மேல் நாட்டு கீழ் நாட்டுக் கப்பல்கள் போக்கு வரத்திற்கு வசதிகளை செய்து பாண்டியர்கள் கொற்கையை பெருந்துறை முகப்பட்டினமாக்கினார்கள் என்பதை வரலாறு கூறுகிறது.

---

*Korkai referred to by Ptolemy is identified with Kilakkarai of the Ramanathapuram District by Lassen. S. Arunachalam. The History of the Pearl Fishery of the Tamil Coast, Page 15.

**"Dr. Wilson Bowden, Professor of Sanskrit at Oxford, had in the thirties of the last century, identified Korkai of Tamil writers with the Korkai of the Greeks and concluded that the place to which both sets of writers

# 2. மார்க்கோபோலோ

மார்க்கோபோலோ இத்தாலியில் உள்ள வெனீஸ் எனும் அழகு பொருந்திய நகரத்தில் 1254-ல் பிறந்தார். அவரின் 20-வது வயதில் வர்த்தக குழுக்களுடன் சீனா சென்று 20 ஆண்டுகள் பீக்கிங்கில் தங்கி விட்டு தனது சொந்த ஊராகிய வெனீஸ் நகரத்திற்கு திரும்பி வந்து சுமார் 30 ஆண்டுகள் ஜீவித்திருந்த பின் வெனீஸ் நகரத்தில் 1324-ல் இறந்து விட்டார்.

*மார்க்கோபோலோ 1292-ல் சீனாவிலிருந்து புறப்பட்டுச் சுமாத்ரா, மலாக்கா, அந்தமான் வழியாக இலங்கை வந்து சிறிது காலம் தங்கியபின் மாபரில் காயல் எனும் கீழக்கரைக்கு வந்த வரலாற்றைக் காண்போம்.

---

referred was Kilakkarai Seaport in the present Ramnad District''.

Gazetteer of Tinnevelly, Vol. 1, Page 431, 1917.

---

***' Fathan was the Port of Madura from which people embarked on their voyages elsewhere and in which normally they would disembark for getting into the country' என S. Krishna Swamy Iyengar தனது South India and Her Muhammadan Invaders — நூலில் பக்கம் 192-இல் எழுதுவதனைக் காணலாம்.

---

* Leaving the island of Zeilan, and sailing in a westerly direction sixty miles, you reach the great province of Maabar (Kayal) which is not an island, but a part of the continent of the greater India, as it is termed being the noblest and richest country in the world. It is governed by five kings, of whom the principal is named Sender-bandi Within his dominions is a fishery for pearls in the gulf of a bay that lies between Maabar and the island of Zeilan, where the water is not more than from ten to twelve fathoms in depth and in some places not more than two fathoms. The greater proportion of the pearls obtained from

செய்லான் (Ceylon) தீவை விட்டகன்று மேற்கு வழியாக அறுபது மைல் கப்பல் பிரயாணம் செய்தால் மாபரில் காயல் என்ற பெரும் நாட்டை அடையலாம். இத்திரு நாடு இந்தியாவில் ஒரு பாகமே ஆகும். இது செல்வமும், வளமும் மிக்க நாடாக இருந் துவருகிறது. இந்நாட்டினை ஐந்து மன்னர்கள் அரசு புரிந்து வருகின்றனர். ஆயினும் அவர்களில் செந்தர் (சுந்தர்) பாண்டியன் என்றவனே முக்கியமான அரசனாவான். அவன் ஆளும் நாட்டின் எல்லைக்கும் செய்லானுக்கும் (Ceylon) இடையே முத்துக் குளிக்கும் இடங்கள் உண்டு. அது வளைகுடா போல் தோற்றமளிக்கும். அக்கடலின் ஆழம் 10லிருந்து 12 பாகம் (ஒரு பாகம் 6 அடி) வரையிலிருக்கும். முத்துச் சிப்பிகள் மிகப் பெரும் அளவில் எடுக்கப்படும் இடம் வேதாளை (Betala) இது பெருநிலப் பரப்பில் கடற்கரையில் உள்ளது. அவ்விடத்திலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் கடல் தொழில் நல்ல முறையில் நடந்து வருகிறது. வேதாளை கடல் வழியாக 20 மைல் தொலைவில் கீழக்கரை இருக்கிறது.

மார்க்கோபோலோ மேலும், " 'காயில்' (கீழக்கரை) எனும் பெருமையுடைய நகரத்தினை ஐந்து அரசர்களில் ஒரு சகோதரன் ஆண்டு வந்தான். அவன் பெயர் அஸ்தியர். அவனிடத்தில் பொன்னும் மணியும், முத்தும் ஏராளம் இருக்கின்றன. அவனுடைய நாட்டில் பூரண அமைதி நிலவுகிறது. இதனால் அயல் நாட்டு வணிகர்களுக்கு வசதியாகவும், பாதுகாப்புள்ள புகலிடமாகவும் விளங்குகிறது. *அயல் நாட்டு வணிகர்களுக்கு அரசனால் நல்ல வரவேற்பும், பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. ஆகையால், மேலை நாடுகளிலிருந்து ஆர்மஸ் (Ormus), சிஸ்தி (Chisti), அதன் (Aden) மற்றும் அரேபியாவின் பல பாகங்களிலிருந்து வரும் கப்பல்களில் அதிகமான குதிரைகள் மற்றும் பல வகையான வர்த்தக பொருள்களை இக்காயலில் கொண்டு வந்து இறக்குமதி செய்கின்றனர். வர்த்தகத்திற்கு

---

the fisheries in this gulf, are round of a good lustre. The spot where the oysters are taken in the greatest number is called Betala, on the shore of the mainland, and from thence the fishery extends sixty miles to the southward"

—The Travels of Marco Polo
Introduction by John Masefield
Chapter XX of the Province of Maabar Page 350

இத்துறைமுகம் மிகவும் ஏற்றமாகவும், வசதியாகவும் அமைந்துள்ளது'' என்று குறிப்பிடுகிறார்.

''மாபர்'' அல்லது ''மாபிர்'' என்பது அறபுச் சொல், இச் சொல், ''கடந்து போகிற இடம்''. ''பாதை'' கப்பல்துறை, தோணித்துறை, படகுப் பயணப்பாதை எனப் பொருள்படும். யாகூத்என்பவர் (கி. பி 1176-1229) இந்தியாவின் கிழக்குக் கடற் கரைப்பகுதியைக் குறிக்க, தமது பூகோள அகராதியில் இச் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தியுள்ளார்.

''செய்லான் (இலங்கை) தீவில் மன்னாருக்கு அருகிலுள்ள அரிப்போவிலிருந்து கடல் வழியாக மேற்குத் திசையில் அறுபது மைல் பயணம் செய்தால் மாபர் பகுதியில் உள்ள காயலை அடையலாம்'' என்று மார்க்கோபோலோ குறிப்பிடுகிறார்.

இப்பகுதி அப்போது பாண்டிய மன்னர் ஐவரால் ஆளப் பட்டது. இவர்களுள் சுந்தர பாண்டியன் தலைசிறந்த மன்னராகவும் மற்ற அரசர்கள் அவனுக்குக் கட்டுப்பட்டவர் களாகவும், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஆட்சி புரிந்ததை இராமனாத புரம் மாவட்ட கெஜட்டியரும், வரலாற்று அறிஞர் R. C. மஜூம்தார்* போன்றவர்களும் குறிப்பிடுகிறார்கள்.

---

* Kael is a considerable city governed by Astiar. One of the five brothers, kings of the country of Maabar, who is rich in gold jewels, and preserves his country in a state of profound peace. On this account it is a favourite place of resort for foreign merchants who are well received and treated by the king. Accordingly all the ships coming from the west-as from Ormus, Chisti, Aden and various parts of Arabia—laden with merchandise and horses make this port which is besides well suited for commerce.

—The Travels of Marco Polo: Introduction by John Masefield Chapter XXIV of the City of Kael Page 375.

---

* Majumdar R. C. The Delhi Sultanate, Bomby 1960 Page 230-234

காயலில் குதிரை வணிகம் நிகழ்ந்ததையும் மார்க்கோ போலோ குறிப்பிடுகிறார். "பாண்டிய அரசர்கள் ஆர்மஸ், ஏடன் போன்ற நாடுகளிலிருந்து கீழக்கரையில் இறக்குமதியாகும் குதிரைகளை வாங்குவதற்காகப் பாண்டியர்கள் அதிகமான பொருள்களைச் செலவு செய்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஐந்து ஆயிரம் குதிரைகளை அரபிகளிடமிருந்து தருவிக்கிறார்கள். குதிரை ஒன்றின் விலை 500 சக்கி (saggi of gold) என்று வாங்கப்படுகிறது. இதனால் குதிரைகளை விற்கும் அரேபிய வியாபாரிகள் பெரும் செல்வந்தர்களாக இருக்கிறார்கள்.*

---

* No horse being bred in this country. the king and his three royal brothers expend large sums of money annually in the purchase of them from merchants of Ormus. Diufar Pecher. and Aden who carry them thither for sale. and become rich by the traffic. as they import to the number of five thousand and for each of them often five hundred saggi of Gold, being equal to one hundred marks of silver.

—The Travels of Marcopolo Page No. 356.

# 3. இப்னு பதூதா

மார்க்கோபோலோவின் தமிழக வருகைக்கு 23 ஆண்டு களுக்குப் பின் வந்தவர் உலகப் பயணி இப்னு பதூதா. இவர் முஸ்லிம் பயணி என்பதும் இவரின் பயணக் குறிக்கோள்களும் இலட்சியங்களும், இஸ்லாத்தோடு இணைந்ததாக உள்ள தென்பது குறிப்பிடத் தக்கது

முரோக்கோ நாட்டில் தஞ்சீர் என்னும் பட்டணத்தில் முஹம்மது என்பவரின் மகனாக கி. பி. 1304-ம் ஆண்டு பிப்ரவரி 24-ம் தேதி இப்ராஹீம் அல்ஹவானி பிறந்தார். இதுவே இப்னுபதூதாவின் இயற் பெயர் ஆகும். இவர் மூர் இனத்தைச் சேர்ந்தவர். இப்னு பதூதா என்பது இவரின் குடும்பப் பெயர். இன்று இக் குடும்பப் பெயர் முரோக்கோவில் காணப்படுகிறது. இவரது மறைவு கி.பி. 1368 அல்லது கி.பி. 1369 எனத் தெரிகிறது.

இவர் பிரயாண காலங்களில் கண்ட கேட்ட அனுபவங் களை அரபியில் அர்ரிஹ் லத்து இப்னு பதூதா (இப்னுபதூதா வின் பயணங்கள்) (Rihlath of Ibnu Battuta) என்றும், துஹ்ஃபத் துன் நுள்ளார் ஃபீ கராயிபில் அம்ஸார் வ அஜாயிபில் அஸ்ஃபார்" (Tuhfathun Nuzzaar fi Gharaibil Amsar wa Ajaibil Asfar), "வாசகர்களுக்கு நாடு, நகர விசித்திரங்கள், பிரயாண அற்புதங்கள் குறித்த அன்பளிப்பு" (A Present to the Readers of the strange cities and wonders) எனும் பெயரில் நூல்களாக வெளிவந்துள்ளது. இந்நூல் கி. பி. 1928-ல் கெய்ரோவில் அச்சிடப்பட்டுள்ளது.

இப்னு பதூதா தனது 22 வது வயதில் தன் சொந்த ஊரான தஞ்சீரை விட்டு பல நாடுகளுக்கும் சென்று பின் இலங்கை வந்து சேர்ந்தார். அங்கு சில நாட்கள் தங்கி இந்தியா வரும் வழியில் கப்பல் உடைந்து கீழக்கரைக்கு அருகாமையில் உள்ள ஆத்துக்காடு வந்தடைகிறார். அங்கிருந்து நான்குமைல் தொலைவிலுள்ள பதன் என்கிற கீழக்கரைக்கு வந்து சுல்தான் கியாதுத்தீன் தம்கானியை சந்தித்ததாகக் கூறுகிறார். மேலும், இப்னு பதூதா கீழக்கரையின் சிறப்பையும், அதன் இயற்கைத் துறைமுகத்தைப்பற்றி கூறுவதையும் காண்போம்.

"பதன் *அழகிய பெரும் பட்டணம் அது முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் நகரம். இவ்வூரில் கருங்கற்களால் கட்டப்பட்ட பார்ப்பதற்கு அழகான பள்ளிவாசல் ஒன்று இருக்கிறது. அப் பள்ளியில் நிஷாப்பூரிலிருந்து வந்த மஜ்தூப் ஷேக் முஹம்மது தர்வேஷ் முப்பது பக்கீர்களுடன் தங்கி இருந்தார். அவரிடம் ஒரு சாதுவான சிங்கமும், மற்றொருவரிடம் ஒரு மானும் இருந்தன. அவ்விரண்டும் அன்போடு பழகி வந்தன. இங்குள்ள திராட்சையும், மாதுளம் பழமும் மிக ருசியாக இருப்பதுடன் அதிகமாகக் கிடைக்கின்றன. இவ்வூரில் உள்ள முஸ்லிம்கள் நல்ல மார்க்க சீலர்களாக இருந்தனர். **இந்த ஊர்த்துறைமுகம் இயற்கையான அமைப்பு உடையது. இத்துறை முகத்தில் அரபு நாடுகளிலிருந்து ஏராளமான குதிரைகள் வந்து இறங்குகின்றன.

---

* I left the camp and reached Fattan (KILAKARI), which is a large and fine city on the coast, with a wondeful harbour. There is a great wooden pavilion in it, erected on enormous beams and reached by a covered wooden gally when an enemy attacks the place they tie all the vesselse in port to this pavilion, which ia manned by soldiers and archers, so that the enemy has no chance (of capturing them.) In this city there is a fine mosque, built of stone, and it has also large quantities of grapes and excellent pomegranates. I met here the pious Shaykh Mohammed of Nishapur, one of the crazy darwishes who let their hair hang loose over their shoulders. He had with him a lion which he had tamed, and which used to eat and sit along with the darwishes. Accompanying him were about thirty darwishes One of whom had a gazelle. Though the gazelle and the lion used to be together in the same place the lion did not molest. While I was staying at Fattan (Kilakarai) the Sultan fell ill and came to the city. I went out to meet him and made him a present; When he had taken up his residence there he sent for the admiral and said to him "Take no business in hand except to equip) the ships which are to make the expedition to he islands (Maldive)" He wished also to give me the Value of my present, but I refused it. Afterwards I was



''பத்தன்'' என்று இப்னு பதூத்தா குறிப்பிடும் கீழக்கரையில்
அவர் பார்த்த பழைய குத்பாபள்ளிவாசல் இது.

***இத்துறைமுகத்தில் உறுதியான மர உத்திரங்கள் மீது கட்டப் பட்ட விதான மண்டபம் ஒன்று இருக்கிறது. பகைவர்கள் தாக்க வரும் அறிகுறி தெரிந்தால் கப்பல்களை அம்மண்டபத் திற்குள் கட்டி விடுவார்கள். எதிரிகள் இத்துறை முகத்திற்குள் இலகுவில் வந்து தாக்க முடியாது.

இப்னு பதூதா கீழக்கரையில் சில வாரங்கள் தங்கி விட்டு, அறுபது மைல் தொலைவில் உள்ள மதுரை சென்று அச்சமயம் மதுரையில் ஆட்சிபுரிந்து வந்த சுல்தான் ஜலாலுத்தீன் அஹ்ஸன் ஷாவின் விருந்தினராக மூன்று மாதம் தங்கிய பின்

---

sorry for this, because he died and I received nothing. He stayed a fortnight at Fattan (Kilakarai) and then set out for his capital, but I stayed there for another fort night.

I then journeyed to his capital the city of Mutra (Madura) a large town with wide streets. He (The Sultan) wrote on my behalf to Fattan, that I might sail in any ship I wished.

I returned to Fattan, and found eight vessels sailing to Yemen, on one of which I embarked.

— Ibn Battuta, Travels in Asia and Africa.
Translated and Selected by H. A. R. Gibb. P. 263-267.

---

** The Muslim of the District are the descendants of the early colonists from Arabia. They first settled along the sea coast, chiefly in kilakkarai, Devipatnam, Mantapam, Pamban and other places which enabled them to trade freely with Ceylon and gradually extended their colonies into the interior of the District. They have adopted Tamil as their language. Some great Tamil poets hail from them.

Gazetteer of India-Tamil Nadu State-Ramanathapuram District

Preface-Page VII]

பதன் (கீழக்கரைக்கு) திரும்பி வந்து முஹல்லதீவுக்குப் போகும் வழியில் அங்குள்ள துறைமுகத்திலிருந்து எமன் தேசம் போகும் எட்டு கப்பல்களில் ஒன்றில் தாம் கொல்லம் போன தாசவும், இத்துறை முகத்தில் சீனக் கப்பல்களும், அரபு கப்பல்களும் அதிகம் வந்து போவதாக கூறுகிறார் இப்னு பதூதா.

இப்னு பதூதாவின் தென்னாட்டுப் பயணத்தில் ஆத்துக்காடு, பதன் (கீழக்கரை), மதுரை ஆகிய மூன்று ஊர்களைத் தவிர வேறு எங்கும் போனதாகக் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

* Traders from the Middle East countries assembled in this port (Kilakarai) from very early times. Horses were imported from Arabia. Since the climate here was not conducive to the breeding of these animals, they were usually imported in large numbers even by the Pandya Kings. Many Arabs settled down here. When Malik Kafur came to Rameswaram on his raid in 1311 A.D., he found a number of Arab settlements here. Even now Kilakkarai is predominantly Muslim in population and there are a few very old mosques here.'.

Gazetteer of India—Tamil Nadu State—Ramanathapuram Dist. Page No. 458.




700 ஆண்டுகளுக்கு முன் மார்கோபோலோவும், இப்னு பதூதாவும் இலங்கையிலிருந்து காயல்-பதன் என்னும் கிழக்கரைக்கு வந்த பாதை,

# 4. முத்துக் குளித்தல்

சர்வலோக இரட்சகர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்பிருந்தே தென்னகத்திற்கும், அரபு நாடுகள், மேலை நாடுகள் இவைகளுக்கிடையே வர்த்தக தொடர்புகள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. சுலைமான் நபி (அலை) (SOLOMON) தன் மனைவி பல்கீஸுக்கு (Queen of sheba) தென்னகத்தின் விலை உயர்ந்த முத்துக்களை பரிசளித்த தாக பைபிளில் கூறப்பட்டுள்ளது. அகநானூறு, புறநானூறு கலித் தொகை, சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் இலக்கியங் களில் முத்துத் தொழில் பற்றி செய்திகள் காணப்படுகின்றன. கீழ்க்காணும் குறிப்பில் காண்க. ★

---

★ The pearl industry of the District attracted foreign merchants and travellers from far off European countries. These foreigners found the pearl industry in a fully developed state and wrote in praise of the high skill employed in the different processes of pearl extraction. Kilakarai on the Ramanathapuram coast was an important emporium for pearls. A large number of colonies of fishermen who specialised themselves in pearl fishing were found near this place. The fishers dived in the deep sea as the pearls of deep sea were considered to be of great value. The fishers dived with their fishing nets in their hands with which they caught the shoal. The Sangam works like the Agananuru, the Purananuru, Kalithogai. Silapathikaram etc. also testify to the flourishing state of this industry. The fishers after their divig operation collected the oysters on the sea bed. Abouts the 6th Century A. D., Cosmos Indico Pleusters (530-550 A. D ). an Egyption traveller, makes reference in his account to the chank and pearl market at

கீழக்கரையில் வெகு காலத்திற்கு முன்பிருந்தே முத்து, சங்கு குளித்தெடுப்பது பற்றி அரபு நாட்டு பயணிகள் மூலமாகவும் ஐரோப்பியர், எகிப்தியர் மூலமாகவும் மற்றும் பல சான்று களாலும் நமக்குக் கிடைத்திருக்கும் குறிப்புகளை வைத்துப் பார்ப்போம்.

இராமனாதபுரம் கடற்பகுதியில் (கீழக்கரை) முத்துத் தொழிலுக்கு முக்கியமான வர்த்தகஸ்தலம் என ஐரோப்பிய பயணிகள் கூறுவதுடன், முத்து குளித்தெடுக்கும் இப்பகுதியில் உள்ள மீனவர்கள் நல்ல பக்குவப்பட்டவர்கள் எனவும், ஆழிய கடலில் குளித்து எடுக்கும் முத்து விலை உயர்ந்தது என்றும் குறிப்பிடுகிறார்கள். இவ்விபரங்களை கி. பி. 530-550-ல் ஒரு எகிப்து பயணி சங்கு முத்து இவைகளைப் பற்றி கூறுவதை கீழே காண்போம்.

இராமனாதபுரம் கடற்பகுதியில் கீழக்கரைக்கு அருகில் முத்து குளிப்பதையும், அதன் சிறப்புகளைப் பற்றி ஒன்பதாம் நூற்றாண்டில் இரு அரபிகளும், மார்க்கோபோலோவும் கூறுவதைக் காண்போம்.

முத்தும், சங்கும் கீழக்கரைப் பகுதியில் அதிகமாகக் கிடைப்பதாகவும், அப்பகுதியில் உள்ள அரசர்களிடம் ஏராள மான விலை உயர்ந்த முத்துக்கள் இருந்ததாகவும், இரு அரபி களும் கூறுகிறார்கள்.

மேலும், கி. பி. 12-13-ம் நூற்றாண்டுகளில் இப்பகுதி பாண்டிய மன்னர்கள் வசம் விலை உயர்ந்த முத்துக்கள் ஏராள மாக இருந்ததாகவும், இப்பகுதியிலிருந்து நல்ல முத்துக்களை

---

Marallow. which has been identified with the chank and pearl fishery of the Ramanathapuram coast. P. 326.

...Gazetteer of India Tamilnadu State Ramanathapuram Dt. Page 326.

வெளியில் யாரும் எடுத்துச் செல்லக்கூடாது என பாண்டிய மன்னர்களால் தடை விதிக்கப்பட்டிருந்தது என மார்க்கோ போலோ கூறுவதை கீழ்க்காணும் குறிப்பில் பார்ப்போம். ★

முத்து சலாபமும் சங்கும் கீழக்கரையிலும், அடுத்த இலங்கைக்கரை மரிச்சுக்கட்டியிலும் எழுபது ஆண்டுகளுக்கு முன்வரை தொடர்ந்து நடந்துவந்ததால் முத்தும் சங்கும் குளிப்ப வர்கள் கீழக்கரையில் பல ஆயிரம் பேர் இருந்தனர். 1925 க்குப் பின் முத்து சலாபம் ஏற்படாததால் அத்தொழிலில் ஈடுபட்டவர் கள் இன்று சங்கு குளிப்பதுபோன்ற இதரத் தொழில்களில் 1500

---

★ About the middle of the 9th century, the Arabs came into contact with the pearl fishery of Ramanathapuram coast and had noticed the pearl and chank industries thri ving well. Two of the Arabs writers Sulaiman and Abu Za'd have recorded that pearls were valusd as greatest trea sures by the local kings. During tha 10th and 11th centu ries the Imperial Cholas were in possession of the coast and there are no records to give authentic information on pearl industry. Only a few of their inscriptions record grants of pearls to the temples. During the period of the later Pandyas (12th and 13th centuries) the pearl industry in this regjon was a flourishing one Marco Polo (1260-1300), who travelled in South India during this period, says in his account that the later Pandyas monopolised the pearl industry and did not allow any one to take pearls out of the kingdom. He also gives a description of the pearl fishery in the Tamil Coast.

(Gazetteer of India—Tamil Nadu State— Ramanatha puram Dist. Chap. V-Industries—Old Time Industries.

(Page 326, 327)

முதல் 2000 பேர் வரையில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்விபரங்களைப் பற்றி அமெரிக்காவில் 1908-ல் வெளியான குறிப்பினின்றும் சில முக்கியமான விவரங்களைக் காணலாம். ★

---

★ In 1874, the boats were arranged in three divisions, the red, blue and green, with fifty boats in each in 1879. and again in 1881, there were two divisions, the red and the blue. and likewise in 1880, in 1903 and in 1906 there were two, the red and the white divisions. Of the 318 boats employed in the 1905 fishery, 143 were from Kilakarai, seventy-four from Jaffna, thirty-five from Tuticorin, thirty-four from Paumben, nine from Manaar six from Nagapatam, five from Colombo four each from Tondi and Kayalpatam. and one each from Devipatam, Adirapatam, Ammapatam, and Kottaipattam.

Of the 4991 divers employed in 1905, 2649 were Moormen or Lubbais from Kilakarai, Tondi, etc, on the Madura coast, 923 were Arabs 424 were Erukkalampitti Moormen from Ceylon, and the remaining 995 were Tamils from Tuticorin, Rameswaram and elsewhere on the Madras coast, Malayalans from the Malabar coast, with small numbers from other localities on the Asiatic coasts.

THE BOOK OF THE PEARL Page: 113 George Frederic. Kunz Charles Hugh Stevenson A. M., Ph. D., LL.M, D. C. L. NEW YORK THE CENTURY Co., 1908.

மதுரை வரகுணப்பாண்டிய அரசன் அவையில் அமைச்சராக இருந்த மாணிக்கவாசகர் குதிரை வாங்குவதற்காக கீழக்கரைக்கு வந்த சமயம் கட்டப்பட்ட *சொக்கநாத சாமி கோயில் கீழக்கரையில் இருக்கிறது. அக்கோவிலின் மண்டப முகப்பில் கல்வெட்டு குறிப்பில், 'கீழக்கரையில் விற்கும் முத்துச் சிப்பிகளில் 100 க்கு ½ பணம்வீதம் கோவில் திருப்பணிக்கு கொடுக்க வேண்டும்' என குறிப்பிடப்பட்டுள்ளது. ★

---

★. "On the door-post of the Mantapa in front of the Sokkanathaswami temple. Register in S. 1453 expired Vikrita, an agreement by which half a panam was to be given on every 100 pearls oysters sold in Kilakkarai and the proceeds to be utilised for worship and repairs to the temple of Ninaittadumuditta Pillaiyar".

—396 of 1907. Reg. S. 1453. A topographical list of the Inscriptions of the Madras Presidency collected till 1915 by V. Rangacharya. Vol. ii 1919.

# கீழக்கரையில் வாழ்ந்த மன்னர்களும், கொடை வள்ளல்களும்

## 5. சுல்தான் தகீயுத்தீன்

பாரசீக வளைகுடாவின் ஹர்மூஸ் ஜலசந்தியில், 'கீஷ்தீவு' இருக்கிறது. அங்கு கி. பி. 13-ம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்து வந்த மலிக்குல் இஸ்லாம் சுல்தான் செய்யது ஜமாலுத்தீனும், இவரின் இளைய சகோதரர் மலிக்குல் அஃலம் சுல்தான் தகீயுத் தீனும் ஆவர். மூத்தவரான சுல்தான் ஜமாலுத்தீன் கீஷ் தீவின் சிற்றரசராக இருந்ததோடு கடல் வாணிபத்திலும் மன்னராக விளங்கினார்.

கீஷ்தீவு மேற்கு ஆசியப் பகுதியில் கீழ் நாட்டார்-மேல் நாட்டாரின் வர்த்தக கேந்திரமாக விளங்கியது. அப்பகுதியில் உள்ள பண்டங்களை தனது கப்பல்களில் ஏற்றி பாண்டிய நாட்டிற்குக் கொண்டு வந்து விற்று, பாண்டிய நாட்டிலுள்ள முத்துக்களையும், கீழ்நாட்டார் கப்பலில் கொண்டு வந்த பொருள்களையும், வாங்கி தன் தேசம் சென்று விற்று, அதிக லாபமடைந்து வந்தார் சுல்தான் ஜமாலுத்தீன். கீழக்கரை கீஷ் தீவைப்போல் கீழ்நாட்டாரும், மேல்நாட்டாரும் கூடும் வர்த்தக சந்தையாக இருந்தது என வரலாறு கூறுகிறது.

கி. பி. 13-ம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் மதுரையில் அரசாட்சி செய்து வந்தான். சுல்தான் ஜமாலுத்தீனுக்கு அம்மன்னரோடு வர்த்தக தொடர்புகள் ஏற்பட்டன. பாண்டிய

நாட்டு மன்னர்களுக்கும், இதர சிற்றரசர்களுக்கும் மத்தியில் அடிக்கடி சண்டைகள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. போருக்குத் தேவையான குதிரைகள் கிடைக்காமல், விலைகளும் அதிகமாக இருந்ததை அறிந்த சுல்தான் ஜமாலுத்தீன், தன் நாட்டில் குதிரைகள் மலிவான விலைக்கு அதிகமாக கிடைப்பதை உணர்ந்து தம் கப்பல்களில் குதிரைகளை ஏற்றி வந்து பாண்டிய மன்னனுக்கு விற்று வந்தார். இதையறிந்த இதர பாண்டிய மன்னர்களும் தங்களுக்கு குதிரைகளை தரும்படியாகவும், கேட்டு வாங்கி சுல்தான் ஜமாலுத்தீனின் நட்பையும் பெற்று வந்தனர். மேலும், பிரதி ஆண்டும் ஆறு ஆயிரம் குதிரைகளை இறக்குமதி செய்து மன்னர்களுக்கு விநியோகித்து, அதிகமான பொருளை ஈட்டியதுடன் பாண்டியர்களின் அன்பையும் பெற்று, பாண்டியர்களில் ஒருவராக ஆகிவிட்டார்.

★ உலகப் பயணி இப்னு பதூதா கீழக்கரை துறைமுகத்தில் குதிரைகள் இறக்குமதியாவதைப் பற்றிக் கூறுவதைக் காண்போம்:

---

★ The horses in this country are very numerous and the price of them is negligible. A good one costs about a dinar of our money. The livelihood of the people depends on them, and they are as numerous as sheep in our country or even more so. A single Turk will possess one or two hundred of them or less or more. For each fifty they hire a keeper, who looks after their pasturage. He rides on one of them, carrying a long stick with a rope attached to it, and when he wishes to catch any horse he gets opposite on the horse, which he is riding, through the rope over its neck and draws it towards him, mounts it and sets the other free to pasture. On reaching Sind the horses are fed with forage, because the vegetation of Sind will not take the place of the barley and the great,

மூத்தவரான சுல்தான் ஜமாலுத்தீன் தன் நாடு திரும்பியதும் பாரசீக மன்னர் அவரை பாரசீக நாட்டின் "ஷிராஸ்" பகுதிக்கு ஆளுநராக இருக்கும்படி கட்டளையிட்டதற்கிணங்க, அங்கு சென்று பதவி ஏற்று நல்லாட்சி நடத்தி வரும் காலை, சுல்தான் ஜமாலுத்தீன் கி. பி. 1306-ஆம் ஆண்டில் 'ஷிராஸ்' நகரில் காலமானார். அவருக்கு அங்கு அழகிய சமாதி எழுப்பப் பட்டுள்ளது.

சுல்தான் தகீயுத்தீன் வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு பாண்டியர்களுடன் கீழக்கரையில் தங்கி விட்டார் பவித்திரமாணிக்கப்பட்டணமாகிய கீழக்கரையில் ஆட்சி புரிந்து வந்ததாக சான்றுகள் கூறுகின்றன.

---

part of them die or are stolen. The owners pay a duty of seven silver dinar on entering Sind and a further duty at Multan. Formerly they were taxed a quarter of the value of their imports, but Sultan Mohammed abolished the tax and ordered that Muslims merchants should pay the legal tithe (2½% Tax) and infidel merchants a tenth. Neverthless, the merchants make a handsome profit, for last that a horse fetches is a hundred dinar (That is twenty five dinars in Moroccan money) and it often sells for twice or five hundred or more. The Indians do not use them as racehorse, for in the battle they wear coats of mail and cover their horses with ar mour; what they prize in horse is its strength and length of pace. Their race horses are brought from Yemen, Oman and Fars and they cost from a thousand to fourthouand dinar each

—Selections from the Travels of
IBN BATTUTA in Asia and Africa
1325—1354., H.A.R. GIBB Page No.145

சுல்தான் தகியுத்தீன் போர் வீரராகவும், ராஜதந்திரியாகவும் இருந்ததால் பாண்டிய நாட்டு கடல் ஆதிக்கமும் (கறுப்பாறு காவலர்) அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. பாண்டிய மன்னரின் அன்புக்கும் நட்புக்கும் ஆளாகி அரசவையில் இணைந்து ஐந்து பாண்டியர்களுடன் ஆறாவது பாண்டியனாக அமைந்து பாண்டிய அரச குடும்பத்தில் ஒரு பெண்ணையும் திருமணம் செய்து கொண்டதாக வரலாறு கூறுகிறது. இதனை உறுதிப்படுத்தும் கீழ்க்காணும் சீதக்காதி திருமண வாழ்த்துப் பாடலில் கூறுவதைக் காண்போம்:

" மைவருக்கஞ் சூழ்சோலை மாமதுரைப் பாண்டியர்கள்
ஐவருக்கு மாறாக ஆறாம் பேர் கொண்டபிரான்" 47

" நிலமகளுஞ் சயமகளும் நிற்ப வழுதி செல்வக்
குலமகளைக் கைப் பிடித்துக் கொண்ட மணவாளன்" 48

" மாறடங்கார் போற்றும் வழுதி மனையாட்டி
வீறடங்க வேலைக்கு வேல்கொண்ட தாட்டீகன்" 50

" விருப்பினா லைங்காதம் மீனவன் பெண்வீடு மட்டுங்
கருப்பினால் பந்தலிட்டு கல்யாணம் செய்த பிரான்" 51

(சீதக்காதி திருமண வாழ்த்து)

இப்பாடல்களால் நாம் அறிவது சுல்தான் தகியுத்தீன் ஐந்து பாண்டியர்களுடன் ஆறாம் பாண்டியனாக இருந்ததோடல்லாமல் பாண்டிய அரச குடும்பத்தில் ஒரு பெண்ணை திருமணம் செய்ததாக இப்பாடல் மூலம் தெரிய வருகிறது.

மேற்காணும் பாடல் சம்பவங்கள் நடைபெற்ற காலம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் மதுரையில் ஆட்சிபுரிந்த கி. பி. 13ம் நூற்றாண்டாகும். சுல்தான் தகியுத்தீனின் வழித் தோன்றலாய் வந்தவர் தாம் முடிசூடா மன்னர் சீதக்காதி ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.



கல்வெட்டில் கண்ட செய்தியின் சுருக்கம்

கொல்லம் 790-ஆம் ஆண்டு ஆனந்த வருடம் கார்த்திகை மாதம் 26-ஆம் தேதி வெள்ளிக்கிழமை (கி. பி. 1614-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ஆம் தேதி) வாவாலி மரைக்காயர் இறந்ததாகக் குறிக்கப் பட்டிருக்கின்றது, இவர் சீதக்காதியின் தாயைப் பெற்ற பாட்டனார்.

ஹிஜ்ரி 1023-ஆம் வருடம் துல்கஃதா மாதம் 3-ஆந்தேதி ஆகிறது.



வள்ளல் சீதக்காதியின் அடக்கத்தலம். அவரின் கடைசி விருப்பத்திற்கு இணங்க கப்ரு கட்டப்படாமலும் மேற் கூரை அமைக்கப்படாமலும் இருப்பது இதன் தனிச் சிறப்பாகும்

# 6. வள்ளல் சீதக்காதி

வள்ளல் சீதக்காதியின் பெயர் ஷெய்கு அப்துல் காதிர் என்பதாகும். பல சமூகத்தினரும் இவரைப் பெயர் சொல்லி அழைப்பதற்கு எளிதாக 'சீதக்காதி' என சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தார். பதின்மூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த ஐந்து பாண்டியர்களுடன் ஆறாம் பாண்டியனாக ஆட்சி புரிந்த சுல்தான் தகியுத்தீன் பாண்டிய நாட்டின் இயற்கைத் துறைமுகமாகிய பவித்ர மாணிக்கப்பட்டணம் என்னும் கீழக்கரை பகுதியில் கடலாதிக்க (கறுப்பாறு காவலர்) அதிபதியாகிய சுல்தான் தகியுத்தீனின் பாரம்பரியத்தில் வந்த மலிக் சுல்தான் அப்துல் காதிர் மரைக்காய ருக்கும், கீழக்கரை வாவாலி மரைக்காயரின் மகள் பாத்திமா நாச்சியாருக்கும் செல்வப் புதல்வராக கீர்த்தி மிகும் கீழக்கரையில் பிரபுக்கள் தெருவில் வள்ளல் சீதக்காதி பிறந்தார்.

வள்ளல் சீதக்காதியுடன் பிறந்தவர் இரு சகோதரர் ஆவர். மூத்தவர் மாமுநெய்னா என்ற பட்டத்து முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயரும், இரண்டாமவர் ஷெய்கு இப்ராஹீம் மரைக்காயரும் ஆவர். இவர்களுடன் பெண் மகவு இருந்ததாகத் தெரியவில்லை.

வள்ளல் சீதக்காதியின் தாய்வழி அரச பரம்பரை என்பதற்கு சான்றாக கீழக்கரை பழைய குத்பா பள்ளி முகப்பில் தாயைப் பெற்ற பாட்டன் வாவாலி மரைக்காயரின் அடக்க ஸ்தலத்தில் உள்ள மீஜான் கல்லில், அரசர்களுக்குள்ள அடையாள சின்ன மாகிய பல்லக்கு, வெண்சாமரை சின்னங்கள் பொறிக்கப் பட்டிருப்பதால், அரச பரம்பரையைச் சார்ந்தவர் என்பது புலனாகிறது. இன்னும் இவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு பல அரச அடையாளமுடைய சமாதிக் கல்களும் சான்று பகர்கின்றன.

தந்தை வழியினைக் காண்போம்: இவரின் இரண்டாவது தம்பி மலிக் ஷெய்கு இப்ராஹீம் மரைக்காயர் வேதாளை கூரைப்

பள்ளியில் அடக்கமாகியிருக்கும் சமாதிக் கல்லில் அரச அடை யாளக் குறிப்புகளில், கிழவன் சேதுபதி அரசனின் சேனையில் தளபதியாக இருந்து போர்ச்சுக்கீசியருடன் சமர் புரிந்து வீர மரணம் அடைந்ததாகவும், இவரின் மூதாதையர்களின் நான்கு தலைமுறைப் பெயர்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

அப்பெயர்களாவன : (1) மலிக் சுங்கக் கட்டளை செய்யது மரைக்காயர் (2) மலிக் முளம்மர் மரைக்காயர் (3) மலிக் மஹ்மூது நெய்னா மரைக்காயர் (4) மலிக் பெரிய தம்பி மரைக் காயர் என்ற சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர்.

இஸ்லாத்தில் நான்கு தலைமுறைகளை அறிவது முக்கியம் என்பதை இதன் மூலம் அறிகிறோம். பெயர்களுக்கு முன் மலிக் என குறிப்பிடப்படுவது, அரபியில் அரசர் என்பதாகும்.

## வள்ளல் சீதக்காதியின் வழித்தோன்றல்கள் :

(1) சுல்தான் தகியுத்தீன்

(2) சுல்தான் சிராஜுத்தீன்

(3) சுல்தான் நிஜாமுத்தீன் (இதற்குப் பின் மூன்று தலை முறையினரின் விபரம் கிடைக்கவில்லை)

(4) மலிக் சுங்கம் கட்டளை செய்யது மரைக்காயர்

(5) மலிக் முளம்மர் மரைக்காயர்

(6) மலிக் மஹ்மூது நயினார் மரைக்காயர்

(7) மலிக் பெரிய தம்பி மரைக்காயர் என்கிற சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர்

(8) சீதக்காதி என்கின்ற ஷேக் அப்துல் காதிர் மரைக்காயர் (இவருக்கு ஆண் சந்ததி இல்லை) இவரின் தம்பி மாமு நெய்னா வென்ற பட்டத்து முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயர்

(9) பட்டத்து அபூபக்கர் மரைக்காயர்

(10) பட்டத்து லெப்பை நெய்னா மரைக்காயர்

(11) பட்டத்து முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயர்



கீழக்கரை ஜும்ஆ பள்ளியின் ஹவ்லுக்கு கிழக்கில் வில் மச்சு கட்டடத்தில் அடக்கமாகியிருக்கும் பட்டத்து மாமு நெய்னா என்ற பட்டதது முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயரின் சமாதியாகும். வலது புறம் காணப்படுவது வள்ளல் சீதக்காதியின் மேற்கூரை இல்லாத அடக்கத்தலமாகும்.



வேதாளையில் சமாதியாகியிருக்கும் வள்ளல் சீதக்காதியின் தம்பி மலிக் ஷெய்கு இப்ராஹீம் மரைக்காயரின் கப்ரு. இவர் போர்ச்சுகீசியருடன் சமர் புரிந்து வீர சுவர்க்கம் அடைந்ததாக மீஜான் கல்லில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

(12) பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர்

(13) பட்டத்து லெப்பை ஸாஹிப் மரைக்காயர்

(14) பட்டத்து அதாவுல்லாஹ் மரைக்காயர்

(15) பட்டத்து முஹம்மது இத்ரீஸ் மரைக்காயர்

பட்டத்து சுல்தான் அப்துல் காதர் மரைக்காயருக்கு சேதுபதி அரசவையில் முதலாவதாக ரவிகுல ரகுநாதமுத்து விஜய என்ற விருது அளிக்கப்பட்டது. அவ்விருது அவரின் சந்ததியினருக்கு வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

சிலோன் மேனியூலின் குறிப்பில் Twentieth century Impressions of Ceylon என்னும் நூல் பக்கம் 824-1909 South Indian King Seyad Kadir Marikar எனவும் East India Company கி. பி. 1686-ல் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து சீதக்காதி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் your Government எனக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

காயல் பட்டணத்து புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் அவர்கள் கீழக்கரை வள்ளல் ஹபீபு மரைக்காயரின் மகன் ஷெய்கு சதக்கத்துல்லா மரைக்காயரின் தம்பி மகன்முஹம்மது காசீம் மரைக்காயர் ஆகிய இருவருக்கும் எழுதிய நிருபத்தில் குறிப்பிடுவதாவது :

வையமெலாந் தனிகீர்த்தி வழங்க வருங்
கருணைமுகில் வகுதை வேந்தன்
செய்யவளுங் களித்திருக்கு மணிமுன்றில்
ஷெய்கு சதக் குவப்ப நின்றீர்
மெய்யன் வினைத்திறன் வென்றிபடைப்போனிம்
மேதினியை விளக்கு மேது
பொய்யோ மற்றுரை பெயர்த்தோவிவை யாய்ந்தும்
புத்தியொடு புகலு வீரே.

(வெண்பா)

தென்காய வோம்புந் திருநபிநா மக்குரிசில்
பொன்காவல் செய்யும் புகழ்முகமே-நன்காய்க்
கருணையொடு ஷெய்கபுதுல் காதி றெழுதுஞ்செந்
திருமுகமே பூமுகமே சீர்.
சீர்வளர் கீழக்கரையின் செல்வரிரு மாமுகமே
நீர்வளர் செங்கஞ்ச நேரொக்கும்—பேர்வளரும்
காத்தொழுகு ஷெய்கப்துல் காதிர் விடுநிருபம்
பூத்தொளிரும் கண்கண்ட போது

புலவர் நாயகம் தென்காயல் என்பதாக கீழக்கரையைத் தவிர வேறு எந்த ஊரையும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை.

மேலும், இலங்கை மட்டகளப்பு அகமது குட்டிப் புலவர் 150 ஆண்டுகளுக்கு முன் கீழக்கரை சீனி முகம்மது ஆலிம் அவர்கள் பெயரைக் குறிப்பிடுகையில் 'இசுவா அம்மானையில்' கீழக்கரையை தென்காயல் என குறிப்பிட்டு பாடிய பாடலைக் காண்போம்:

தேமருவுஞ் சோலைசெறி தென்காயல் நன்னாட்டில்
காமருவுங் கீழக் கரையாமெனும் பதியில்
மிகுதியிறையோனை மென்மேற் றவம் புரியும்
மகுதூம் கிளையில் மருவுதலாய் வந்துதித்தார்
வேதநெறி தவறார் வேண்டுவதெல் லாமுணர்ந்தோர்
ஆதியரு ளிபுறாகீ மாலிமவர் தன்தவத்தால்
மானிலத்திற் றீனின் வழியை விளக்கி வைக்கும்
சீனி முகம்மதென்னுஞ் சொந்தத் திருநாமமுள்ள



கீழக்கரையில் சீதக்காதியின் தர்பார் மண்டபம்
(இப்போது பழுதடைந்த நிலையிலுள்ளது)

வள்ளல் சீதக்காதியின் பெயரில் பாடிய இரு பாடல்களை இங்கு காண்போம்.

காய்ந்து சிவந்தது சூரிய
காந்தி கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார்
நெடுங்கண்க டொல்பலநூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர்
நெஞ்ச மனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக்
காதி யிருகரமே.

ஓர்தட்டி லேபொன்னு மோர்தட்டி
லேநெல்லு மொக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி
லேதங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னுந்தட்டு வாராம
லேயன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக்
காதி வரோதயனே.

படிக்காசுப் புலவர் இப்படி பாடியுள்ளார்,

## ஒரு தாசி பொருள் கேட்டுப் பாடியது

தினங்கொடுக்குங் கொடையானே
தென்காயற் பதியானே சீதக் காதி
இனங்கொடுத்த வுடைமையல்ல
தாய்கொடுத்த வுடைமையல்ல எளியா ளாசை
மனங் கொடுத்து மிதழ் கொடுத்து
மபிமானந் தனைக் கொடுத்தும் மருவி ரண்டு
தனங்கொடுத்தும் தேடுதனங்
கள்ளர்கையிற் பறிகொடுத்துத் தவிக்கின்றேனே



கீழக்கரை பழைய கொத்பா பள்ளியின் கீழ்புறத் திண்ணைக் குறட்டில் உள்ள வள்ளல் சீதத்காதியின் தாயைப் பெற்ற பாட்டனார் வாவாலி மரைக்காயரின் கப்ரும், அக்குடும்பத்தினர்களின் கப்ருமாகும்.



கீழக்கரையில் கடலோரத்தில் உள்ள சீதக்காதியின்
"வசந்த மாளிகை"

இன்னும் இது போன்ற அனேகப் பாடல்களும் உள்ளன.

வள்ளல் சீதக்காதியின் முன்னோரின் சமாதி (மீஜான்) கல்லின் சான்றுகளும், அவரைக் குறிப்பிடும் பாடல்களும், கீழக்கரையில் அரச குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவர் என ஐயமற அறிந்தும், அவர் பெயரில் சரித்திரம் படைப்பவர்கள் கவனியாது, அவர்களின் கருத்துக்கு இசைந்தபடி தப்பும் தவறுமாக எழுதிவருகின்றனர். வள்ளல் சீதக்காதி பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் எனவும், அவரின் தாய் வீடுகளில் பணிபுரிந்து அவரை வளர்த்ததாகவும் சரித்திரம் எழுதியிருப்பது வியப்புக்கும் நகைப்புக்கும் உரியதாகும். இனிமேலேனும் மக்களின் மனதை திசை திருப்பமாட்டார்கள் என நம்புகிறோம்.

# 7. கொடை வள்ளல் அபுல்காசிம் மரைக்காயர்

அபுல் காசிம் மரைக்காயர், சீதக்காதி மரைக்காயரின் பொக்கிஷதாரராக இருந்ததாக பல சான்றுகள் மூலம் அறியலாம். கீழக்கரை உமறுப் புலவர் சீறா பாடுவதற்கு அபுல் காசிம் மரைக்காயர் புரவலராக இருந்தார் என்பதை சீறாவில் இசுறா காண் படலத்தில் இவ்வாறு கூறப்பட்டிருப்பதைக் காண்போம் :

மடலவிழ் வனசவாவி வைகையம் பதிக்கு வேந்த
னடலுறை யபுல்கா சீம்தம் மருங்குடிச் செல்வம் போலப்
புடைபரந் தலர்கள் சிந்திப் பொங்குதேன் கனிக டூவிச்
சுடரவன் கதிர்கடோன் றாச் சோலைவாய் விளங்கிற் றன்றே

வைகையம் பதிக்கு வேந்தன் என குறிப்பிட்டிருப்பது கீழக்கரையைத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வைகை நதி மதுரையிலிருந்து மானாமதுரை பரமக்குடி வழியாக ராமனாத புரம் பெரிய கண்மாயில் வந்தடைந்து, மீண்டும் சக்கரைக் கோட்டை கண்மாய் வழியாக கீழக்கரைக்கு அருகாமையில் கடலில் சங்கமமாகிறது. இதை யாவரும் அறிவர். இவ்வாறு இருக்க அபுல்காசிம் மரைக்காயர் பரங்கிப் பேட்டையைச் சேர்ந்தவர் எனக் கூறுவது பொருத்தமற்றது; ஏனெனில், வைகை நதிக்கும், தென்னாற் காட்டில் உள்ள பரங்கிப் பேட்டைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை யாவரும் அறிவர். மேலும் சீறாவில் 22 இடங்களில் வகுதை அபுல் காசிம் எனக் குறிப்பிடு கிறது, பரங்கிப் பேட்டையை வகுதை என எந்த சரித்திர சான்று களிலும் கூறப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. வகுதை என்பது கீழக்கரையை குறிப்பிடுவதாகும். சீறாவுக்கு கொடை வள்ளல்,

கீழக்கரை அபுல் காசிம் மரைக்காயர் தான் என்பது ஐயமற தெரிய வருகிறது.

பன்னூலாசிரியர் திருவாளர் கா. சு. பிள்ளை அவர்கள் எழுதியுள்ள தமிழ் இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம் (பக்கம் 93) நூலில் உமறுப் புலவர் யாத்துள்ள சீறாப் புராணத்தை கி. பி. 1665-ஆம் ஆண்டில் வள்ளல் சீதக்காதியின் அமைச்சரான அபுல்காசீம் மரைக்காயரின் முன்னிலையில் பாடி அரங்கேற்றினார் என குறிப்பிடுவதிலிருந்து சீறாவை அரங்கேற்றியது கீழக்கரையில் என்பது உறுதியாகிறது.

# 8. வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயர்

இவர்கள் வள்ளல் சீதக்காதியின் தம்பி மாமுநெய்னா என்ற பட்டத்து முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயரின் குமாரர், பட்டத்து அபூபக்கர் மரைக்காயருக்கும், இறை நேசர் மாதிஹுர் ரசூல் சதக்கத்துல்லா அப்பா (ஒலி) யின் கடைசி மகளாகிய சாரா உம்மாவுக்கும் பிறந்த சிரேஷ்ட குமாரராவார்கள். இவர்கள் தம் மூதாதையர்களைப் போல் மன்னர் சேதுபதியின் அரசவையில் அமைச்சராக இருந்து வந்ததுடன், வர்த்தக மன்னராகவும், கொடை வள்ளலாகவும், பல தமிழ் காப்பியங் களுக்கு கொடை நாயகராகவும் இருந்து வந்தார்கள்.

கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயர் பாடிய சின்ன சீறாவுக்கு புரவலராக இருந்ததை கொடை நாயகர் இன்னார் என்பதை சின்ன சீறாவில் கூறப்பட்டுள்ளது.

ஆதிநூல் உபநிடதம் தேர்சுலையுமான் இலப்பை
ஆலீம் சேய்சொல்

போதம்உறு மெய்ஞ்ஞானச் சதகத்துல் லாஆலீம்
புதல்வி பாலன்

சாதிநாயகன் வகுதை இலப்பைநயி னான் இதயத்
தடத்திற் பூத்த

பாததாம ரைஇறசூல் புகழ்பாடக் கனகமழை
பரிவில் பெய்தான்

நிலவுமணிப் பரிட்சைஅறி பவர்கள் சிரோ மணிமாமு
நயினான் ஈன்ற

குவவுநெடும் தடம்புயமால் அபூபக்கர் இலப்பைதரு
கோமான் சீத

உவவுமதி நிகர்வதனன் இலப்பை நயினான் மகிபன்
உவரி சூழும்
நவஉலகு தொழும் இறசூல் கதைபாட அளவறுசீர்
நல்கி னானே
ஆரணத்(து) உள் பொருள்தேரும் அப்துல்கா திர்நயினா
ஆலீ முக்கும்
தாரணிக்கண் அறிவுசெறி செய்யிதுமு கம்மதென்போன்
தனக்கு முன்னோன்
பூரணத்தண் மதிமுகத்தான் இலப்பை நயினான்மகிபன்
பொருவில் வெள்ளை
வாரணத்தின் நபிஇரசூல் காதைசொல வேட்டதெல்லாம்
வழங்கி னானே.

கீழக்கரை சேக்காதி நெய்னாப் புலவர் பாடிய திருமணக் காட்சி நூலுக்கும் வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயர் அவர்களே கொடை நாயகராக இருந்திருக்கிறார்கள். இது வல்லாமல் தன் மூத்த பாட்டனார் வள்ளல் சீதக்காதி அவர்களைப்போல் தமிழ், அரபி, நூல்களின் வளர்ச்சிப் பணியில் பெரிதும் ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள் என்பது இதன் மூலம் தெரிகிறது.

வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயர் அவர்கள் வர்த்தக மன்னராக இருந்ததால் பல வர்த்தக கப்பல்கள் இருந்தன. புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவான் வேண்டி '**ஐதுரூஸ்**'

என்னும் பிரம்மாண்டமான கப்பலைக் கட்டி, அதில் நூற்றுக்கும் மேற்பட்ட உலமாக்கள், சூபியாக்கள், புலவர்கள் யாவருக்கும் ஹஜ் செய்ய போய் வரும் கப்பல் கட்டணம் இல்லாமலும் உணவு, உடை, குர்பானீ மற்றும் சகல செலவுகளையும் தன் சொந்தத்திலேயே செலவு செய்து ஐதுரூஸ் என்னும் கப்பல் முதல் யாத்திரையாக கீழக்கரை துறைமுகத்திலிருந்து பிரயாண மாகி, ஹஜ் கடமையை நிறைவேற்றிய பின், கப்பலில் சென்ற வர்கள் அனைவரும் எவ்வித குறைவுமின்றி கீழக்கரை வந்து சேர்ந்தார்கள்.

மேற்கூறப்பட்ட விபரத்தை மகான் கீழக்கரை கல்வத்து நாயகம் (ஒலி) அவர்கள் 1909-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் திருநெல்வேலி பேட்டையிலிருந்து வெளிவந்த 'இஸ்லாமிய நேசன்' எனும் மாத இதழில் வெளிவந்ததை எடுத்து ஷெய்கு சதக்கத்துல்லா அப்பா (ஒலி) அவர்களின் சரித்திர சுருக்கமாகப் போட்டுள்ள நூலில் பார்க்கவும்.

ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஹைதராபாத் நிஜாம் அறுபது பேர்களுடன் மக்கா சென்று புனித ஹஜ்ஜை நிறை வேற்றி வந்ததாக செய்தித் தாளில் வெளிவந்தது. வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயர் அவர்கள் வசதிக் குறைவான அக்காலத்தில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் தன் சொந்தக் கப்பலில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை ஹஜ்ஜுக்கு அழைத்துச் சென்று வந்துள்ளதைப் பார்க்கும்போது, அன்னாரின் செல்வமும் செல்வாக்கும் எவ்வாறு இருந்திருக்கக் கூடும் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயரின் பிறப்பு ஹிஜ்ரி 1105, இறப்பு நாள் தெரியவில்லை. பல சான்றுகளால் 80 வருட காலம் ஜீவித்திருந்ததாகத் தெரிகிறது.

‘‘ஐதுரூஸ்*’’ கப்பலை வாழ்த்தும் அரபிப் பாடல் (பைத்து)

بسم الله الرّحمن الرّحيم

## للمركب المبارك المسمّى بالعيدروس وهي هذا

تجلّى بأعلام الكمال مجلّلا — على كتف الرّحمن في شامخ العلا
فيا عيدروس السّعد لازلت مسعدا — ولازال منك الفضل فخرا مكمّلا
حويت كمالا لا يضاهي ورفعة — وأضحى لك الفخر الجليل مبجّلا
فيا مركبا قد شاع في النّاس فضله — بعزّ تسامى في المعالي مجلّلا
لشيخ حوى من كلّ فضل مناره — فعلما وعزّا قد حماه مفضّلا
إمام له في المجد أسنى فضائل — حوى كلّ فنّ ما إليه توصّلا
فإن جئت في ناديه لازلت مكرما — بكلّ جميل فيك يبدي مجمّلا
جليل له مجد عظيم مؤثّل — وناهيك من أصل كريم له اعتلا
ومركبه يسدي الفقير مكارما — فمن أمّه نال الكمال المجمّلا
فإن سار بالحجّاج فأكرم بمابه — يقوم بها في كلّ شأن تحوّلا
وإن دار في هند البلاد فحبّذا — رئيس به في كلّ أمر تحفّلا
وناهيك بالشّيخ الأجلّ مكارما — وناخوذة أيضا أمير تبجّلا
كأنّ سطاحا فيه حاكت مساجدا — ومولده في كلّ عام ترتّلا
وخيراته تبدي نظاما مجوهرا — تفيض على الرّكّاب درّا تهلّلا
تسمّى باسم القطب يرجو تفاؤلا — فيا عيدروس الفضل منكم قد انجلا
فيا ربّ سلّم مركب العزّ دائما — فلازال في حفظ الإله مكفّلا
بسرّ رسول الله والغوث في الملا — بعين إله العرش يجري مهرولا

## 'ஐதுரூஸ்' எனும் கப்பலைப் புகழ்ந்து பாடிய அரபிப் பாடலின் தமிழுருவம்

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

அருளாளன் காவலிலே அதியுச்சி யின்மீது
பாருலகில் தோன்றியதே பரிபூர்ணக் கொடியேந்தி 1

பேறுடைய ஐதுருஸே பேருதவி உபகாரம்
சீருடைய பெருமையெலாம் சிறப்புடனே நிலைத்திடுக 2

நிகரில்லா உயர்வுடனே நிறைவனைத்தும் பொதிந்துள்ள
சிகரமாம் பெருமையுடன் சீர்மதிப்பு வாய்த்திடுக 3

மக்களிடை சிறப்பதனை விரித்துள்ள மரக்கலமே
எக்கணமும் எட்டாமல் எழுந்துயர்க நின்சிறப்பு 4

கனக்கல்வி சிறப்புடனே கவிஞரும் ஒளிபரப்பும்
மனராவைப் போல்விளங்கும் மேதையவர்
உடைமையன்றோ 5

தனியான சிறப்பனைத்தும் தலைமையை அவர்க்கீந்து
அணியான இமாமாக்கி அரும்புகழே சூழ்ந்துளது 6

நல்லா ரவரவையில் நலமுடனே நீதோன்றி
எல்லா சிறப்புடனும் எழில்பெறவே ஓங்கிடுவாய் 7

பெருந்தகைக்கோ உறுதியுள பெருஞ்சிறப்பு வாய்த்துளது
பெருமரபில் பிறந்துளது பெருமையன்றோ உன்றனுக்கு 8

இயலாதார் தேவைகளை இனிமையுடன் நிறைவுசெயும்
முயன்றதனை இயக்கிடுவோர் முழுநிறைவு பெறுகின்றார் 9

ஐதுருசாம் கப்பலுனை அளப்பரிய செல்வத்தால்
செய்தளித்துச் செகமெலாம் சென்று வலம்வரச்
செய்தான் 10

ஈந்திடவே இருந்தவனாம் ஈடில்லா சிறப்பினனாம்
ஆய்ந்தோரும் அறிஞர்க்கே அகமகிழ அளிப்போனாம் 11

நேர்மை மிகுஇலப்பை நெயினானெனப் பெயர்பூண்டோன்
சீர்மையதாம் செல்வங்கள் செலவிடவே சேர்த்திட்டோன் 12

பாக்கியமே பெற்றிட்டாய் பாரோர்தாம் போற்றிடவே
யோக்கியனைச் சொந்தமதாய்க் கொண்ட திருப்பேறாலே 13

மாக்கடலில் செல்லுகையில் மதிப்பளிப்பாய் ஹாஜிகட்கு
ஆக்குபுகழ் சிறப்பனைத்தும் அவரிடமே செல்வனவாம் 14

இந்தியத் திருநாட்டை இனிதுவலம் வருகையிலே
ஒன்றித்த தலைவனென ஒளிர்ந்துநீ விளங்குகின்றாய் 15

பேரான பெருந்தகைபால் பிணைப்புறுதல் பண்புகட்கு
சீராகப் போதுமவர் சிறப்பான தலைவரன்றோ? 16

அதன் தளமோ பள்ளிகள்போல் அருவணக்கக் கூடமன்றோ
அதன்பிறப்பு ஆண்டுதொறும் அருங்கீதம்
இசைப்பதன்றோ? 17

முறையாகக் கோத்துவிட்ட முத்துச் சரத்தினைப்போல்
நிறைவாக ஹாஜிகட்கு நெடு வாழ்த்துச் சொரிந்திடுமே 18

நற்பேறு நீகுத்பு நாயகத்தின் நற்பெயரால்
பொற்புறுவாய் ஐதுருஸே பொலிவனைத்தும்
உன்னின்றே 19

இறையவனே இக்கலத்தை என்றும்சீ ராக்கிவைப்பாய்
இறையவனின் காவலிலே என்றுமது இயங்கிடுக 20

கண்மணியாம் ரசூலுல்லாஹ் கவுதுநா யகர்பொருட்டால்
விண்ணிறையின் பார்வையிலே வலம்வருவாய்
மரக்கலமே 21



கீழக்கரை ஜும்ஆ பள்ளிவாசல் முகப்பில் அடக்கமாகி யிருக்கும் அவ்வாக்கார் மரைக்காயர் என்ற அப்துல் காதிர் மரைக்காயரின் கப்ரு. புகழ்பெற்ற இந்த ஜும்ஆ பள்ளியை கட்டி முடித்தவர் இவர்களே.

# 9. அவ்வாகாரு மரைக்கார் என்ற அப்துல் காதிர் மரைக்காயர்

இவர்கள் வள்ளல் சீதக்காதியின் இளவல் மாமு நெய்னா என்ற பட்டத்து அப்துல் காதிர் மரைக்காயரின் திருக்குமாரர் பட்டத்து அபூபக்கர் மரைக்காயருக்கும் மாதிஹுர் ரசூல் சதக்கத்துல்லா அப்பா (ஒலி) யின் மகள் சாரா உம்மாவுக்கும் இரண்டாவது மகனாவார்கள்.

இவர்களின் மூத்த சகோதரர் வள்ளல் பட்டத்து லெப்பை நெய்னா மரைக்காயர். தமது மூதாதையர்களைப் போல் பெரும் கொடை வள்ளலாகவும், ஆலிமாகவும் இருந்ததாக இவர்கள் பேரில் பலரால் சொல்லப்பட்டிருக்கும் பல அரபி பைத்துகளால் அறியமுடிகிறது.

முக்கியமாக கீழக்கரை சீனி முஹம்மது லெப்பை ஆலிம் (ஒலி) இவர்களின் பேரில் சொல்லியிருக்கும் மர்தியாவில், 'உங்கள் பள்ளி வாசலின் முகப்பில் அடங்கப்பட்டிருக்கிறீர்கள், வலப்புறத்தில் உங்கள் மனைவி ஆயிஷா உம்மாவின் கப்ரும், இடப்புறம் ஆயிஷா உம்மாவின் சகோதரர் ஜமால் நெய்னா மரைக்காயரின் கப்ரும் இருக்கிறது' என கூறப்பட்டுள்ளது.

தென்னகத்திலேயே கம்பீரமாகத் தோற்றமளிக்கும் இப் பள்ளி, அன்று சீதக்காதி மரைக்காயரால் அடிக்கல் நாட்டப் பட்ட பின், இப்பள்ளி முகப்பில் அடங்கப்பட்டிருக்கும் அவ்வா காரு மரைக்காயரால் கட்டி முடிக்கப்பட்டது.

இந்த ஜும்ஆ பள்ளி கருங்கற்களால் மிக அபூர்வமான வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டு தரைக்கு சலவைக் கற்கள் போடப்பட்டுள்ளது. பார்ப்பவர்கள் மனதைக் கவரக் கூடிய அழகு பொருந்திய இது போன்ற வேறு பள்ளிவாசல் தென்ன கத்திலேயே இல்லை எனலாம். இப்பள்ளியின் முகப்பில் இவர்கள் அடங்கப் பெற்றிருக்கும் அழகு பொருந்திய மண்டபம் மேலும் அழகூட்டுவதாக அமையப் பெற்றுள்ளது. சுமார் 275 ஆண்டு களுக்கு முன் இப்பள்ளி வாசல் கட்டப்பட்டதாக சான்றுகள் பகர்கின்றன.

இவர்கள் இப்பிரமாண்டமான பள்ளியை கட்டியதோடல் லாமல், கீழக்கரை மேலத் தெருவில் உள்ள புதுப்பள்ளி வாசலையும் காயல்பட்டணத்தில் உள்ள புதுப்பள்ளி வாசலையும் இவர்களே கட்டியுள்ளார்கள்.

இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1105-மறைவு 1180





கீழக்கரையில் வள்ளல் சீதக்காதியால் அஸ்தி வாரமிடப்பட்டு அவரின் தம்பி பட்டத்து மாமு நெய்னா என்ற முகம்மது அப்துல் காதிர் மரைக்கா யரின் மகன் அபூபக்கர் மரைக்காயரின் இரண்டாவது மகனான அவ்வாக்காரு மரைக்காயர் என்ற அப்துல் காதிர் மரைக்காயரால் கட்டி முடிக்கப்பட்ட புகழ் பெற்ற ஜும்ஆ பள்ளிவாசல்.

# 10. வள்ளல் ஹபீபு அரசர் என்ற ஹபீபு மரைக்காயர்

இவர்கள் முஹம்மது இஸ்மாயில் லெப்பை மரைக்காயருக்கும், சீதக்காதியின் வழித்தோன்றல் அவ்வாகாரு மரைக்காயர் என்ற அப்துல் காதிர் மரைக்காயரின் மகள், முஹம்மது இப்ராஹீம் உம்மாவுக்கும் செல்வக் குமாரராக கீழக்கரையில் பிறந்தார்கள்.

இவர்கள் ஐந்து வயது குழந்தையாக இருக்கும் சமயம் சவ்வாது புலவர் கீழக்கரை வந்து இவர்களின் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பள்ளி வாசல் முகப்பில் உறங்கி எழுந்து தன் படுக்கையைச் சுற்றும்போது ஒரு தங்கக் காசு பவுன் இருப்பதைப் பார்த்த புலவர் ஆச்சரியமுற்று இப்பவுனை யார் வைத்தது என வினவியபோது ஹபீபு மரைக்காயர் என்ற குழந்தை வந்து போனதை அறிந்த புலவர் இவ்வாறு பாடினார்.

'முளைக்கையி லேதுளசிக்கன்று வாசனையால் முயன்று
தழைக்கையி லேயுனைச் சீமானென் றேயமைத்தான்
இறையோன்

மழைக்கர னான இஸ் மாயீலப் பைமைந் தனருள்
கிளைக்கும் நல்ல ஹபீபு முகம்மது கீர்த்தி மன்னே'

ஹபீபு மரைக்காயர் இளம்வயதிலிருந்தே தன் முன்னோர்களைப் போல் தர்மசீலராக இருந்தார். சிறுவயதில் குர்ஆன் முழுவதையும் மனனம் (ஹிப்ளு) செய்த பின், கீழக்கரை தைக்கா சாஹிபு (ஒலி) அவர்களிடம் மத்ரஸதுல் அரூஸியாவில் அரபி மார்க்கக்கல்வி பயின்று சனதும் பெற்று சிறந்த ஆலிம் ஆனார்கள், தனது 18-வது வயதில் தொண்டி அபூபக்கர் (ஒலி)யின் மகன் லெப்பைக்கனி (ஒலி) யின் மகள் சாரா உம்மாவை மணமுடித்து

(1) வாப்பா சாஹிபு (2) அப்துல் காதிர் (3) ஷெய்கு சதகத்துல்லா (4) லெப்பை நெய்னா என்ற நான்கு ஆண் மக்களையும், ஆயிஷா உம்மா தங்கச்சி என்ற ஒரு பெண்ணையும் பெற்றார்கள். மனைவி சாரா உம்மா இறந்த பின் அவரின் சகோதரி பாத்திமாவை மணமுடித்து (1) முஹம்மது அப்துல் காதிர் (2) முஹ்யித்தீன் அப்துல் காதிர் என்ற இரு ஆண் மக்களையும், உம்முஹானி உம்மா, கதீஜா உம்மா என்ற இரு பெண் மக்களையும் பெற்றார்கள்.

இவர்களின் மூதாதையர்களால் நடத்தி வந்த வர்த்தகத்தை சிறந்த முறையில் நடத்தி வந்தார்கள். இலங்கை மரிச்சுக்கட்டியில் முத்துக்குளிப்பு சலாபம் நடந்து வந்ததில் இவர்கள் அந்நாள் அரசாங்கத்தாருடன் ஒத்துழைத்து இவர்களின் மேற்பார்வையில் நடத்தியதால் அதிகமான லாபம் கிடைத்தது. முத்து வர்த்தகத்தில் பிரபல்யமானவர்களாக இருந்தார்கள். பம்பாய் மற்றும் வெளியூர்களிலிருந்து வரும் முத்து வியாபாரிகள் பாதுகாப்பாக தங்கவும், மற்றும் வசதிகளுக்காகவும் மதுரையிலும், இராமேஸ்வரத்திலும் முத்துச் சாவடிகளைக் கட்டினார்கள்.

இராமனாதபுரம் சேதுபதி அரசுக்கு சொந்தமான தென் பகுதி கடலில் சங்கு குளித்தெடுப்பதை பல ஆண்டுகள் குத்தகைக்கு எடுத்து அந்த சங்கு விற்பனைக்காக கல்கத்தா சென்று வருவார்கள். அக்காலை கல்கத்தாவில் வர்த்தகம் செய்து கொண்டிருந்த நம் இனத்தவர்களின் நலம் கருதி மச்சுவா பஜாரில் ஒரு இடத்தை கிரயத்திற்கு வாங்கி இவர்களின் சொந்த செலவில் பள்ளிவாசலைக்கட்டி வக்ஃபு செய்து அதற்கு 'சோலியா மஸ்ஜித்' எனப் பெயரும் வைத்தார்கள். அங்குத் தொழில் செய்து வந்த கீழக்கரை, காயல்பட்டணம், நாகூர், சென்னை, காலி (இலங்கை) இந்த ஐந்து ஊரினரான ஷாபி மதஹபைச் சேர்ந்தவர்களை மட்டும் பள்ளிவாசல் நிர்வாகிகளாகவும், அதில் ஒருவரை முத்தவல்லியாகவும் தேர்ந்தெடுத்து நடத்தி வரும்

படியாக செய்து வைத்தார்கள். அப்பள்ளியில் தொழுவதற்கான இடம் போக மீதியிருக்கும் விசாலமான இடத்தில் மேற்குறிப்பிட்டஐந்து ஊர்வாசிகளில் யாரேனும் இறந்து விட்டால் அதில் அடக்கம் செய்ய அரசாங்கத்திடம் அனுமதி பெற்றிருந்தார்கள்; இன்றும் அதுபோல் அந்த சோலியா மஸ்ஜித் இயங்கிவருகிறது. கீழக்கரையில் ஓடைக்கரைப் பள்ளி வாசலை இவர்களே கட்டினார்கள்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக தனது சொந்தக் கப்பலில் பல உலமாக்களை தன்னுடன் அழைத்துச் சென்று ஹஜ்ஜை நிறைவேற்றி வந்தார்கள். ஜித்தாவுக்கும் மக்காவுக்குமிடையில் ஹஜ்ஜாஜிகள் தண்ணீர் வசதி இல்லாமல் சிரமப்படுவதைக் கண்ணுற்ற இவர்கள் மனம் சகியாது ஒரு கிணற்றை தம் செலவில் வெட்டி ஹஜ்ஜாஜிகள் அனைவருக்கும் தண்ணீர் கிடைக்கச் செய்தார்கள்.

கீழக்கரை உமறுப் புலவர் பாடிய சீறாப் புராணம் கைப்பிரதியாக இருந்ததை காயல்பட்டினம் புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் அவர்கள் பரிசீலித்து கி. பி. 1842-ல் அச்சில் பதிப்பிக்க பொருள் உதவி செய்ததும் இவர்களே. புலவர் நாயகம் பாடிய திருமணி மாலை காப்பியத்துக்கும் கொடை நாயகராக இருந்திருக்கிறார்கள். புலவர் நாயகத்தின் நிருபச் செய்யுள் மூலம் அறிவதில் ஹபீபு மரைக்காயருக்கு சொந்தமான நாகூர் பண்டக சாலையிலும் கொழும்பு பண்டக சாலையிலும் புலவர் நாயகம் ஹபீபு மரைக்காயரின் காரியஸ்தராகவும், குடும்பத்தில் நெருங்கியவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது. ஹபீபு மரைக்காயர் குடும்பத்திற்கு சொந்தமாக 40 வர்த்தகக் கப்பல்கள் இருந்ததாக அறியப்படுகிறது. ஒரு புலவர் பின்வருமாறு பாடியுள்ளார்.

''வணிகராம் ஹபீப் அரசர் வாழ்வு கண்ட வளபதி
அணி அணியாய் அவர் கப்பல் உலகம் பூரா சென்றதாம்
துணிவுடன் ஹபீப் அரசர் வியாபாரம் செய்து
கனிவுடன் மக்கள் குறை நீக்கினார்.''

ஹபீப்அரசரின் 40 கப்பல்களில் முக்கியமானவை, 'முஹ்யித்தீன் பக்ஷ்' என்றும், 'காதர் பக்ஷ்' என்றும் இரு கப்பல்களாகும். முஹ்யித்தீன் பக்ஷ் எனும் கப்பல் ஜாவாவுக்கு சரக்கு ஏற்றி போன சமயம் புயலில் அகப்பட்டு திரும்பவில்லை என்பது வரலாறு. சமீபத்தில் காலஞ்சென்ற இலங்கை தனி நாயகம் அடிகளார் நியூசிலாந்து சென்றிருந்த சமயம் அவ்வூர் மியூஸியத்திற்கு பார்வையிட சென்ற போது ஒரு பெரிய வெண்கல மணியின் முகப்பில் தமிழில் முஹ்யித்தீன் பக்ஷ் என்றும், அதன் கீழ் மரைக்காயர் என்றும் குறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து வியந்து புகைப்படம் எடுத்து சென்னை பத்திரிகைகளில் படத்துடன் தகவல் வெளியிட்டார்.

காதர் பக்ஷ் எனும் கப்பல் நாகப்பட்டணம் துறைமுகத்தில் கட்டப்பட்டது. இக்கப்பல் எந்தவித சிரமமுமில்லாமல் கடலில் இறங்கியதற்காக, நாகூர் ஷாஹுல் ஹமீது நாயகம் தர்கா சென்று பாத்திஹா ஓதி ஆண்டவன்பால் நன்றி கூறி, தர்காவின் மேல்புறம் அலங்கார வாசலுக்கு தென்புறமாக உள்ள ஒன்பது கடைகளை காணிக்கையாக ஹபீபு மரைக்காயர் சட்டிக் கொடுத்தார்கள்.

பிரிட்டிஷ் அரசுக்கு அவசர தேவையை முன்னிட்டு ஹபீபு மரைக்காயரின் கப்பல்களில் சிலவற்றை தந்து உதவும் படியாக கேட்டதால், அது சமயம் கிழக்கரை துறைமுகத்தில் இருந்த அவர்களின் கப்பல்களில் ஒன்பது கப்பல்களைக் கொடுத்து உதவியதற்காக விக்டோரியா மகாராணியின் Star of India எனும் உயர் பதவி பதக்கத்தை ஹபீப் மரைக்காயருக்கு கொடுத்ததாக வரலாறுகள் கூறுகின்றன.



இந்த மணி வள்ளல் ஹபீபு மரைக்காயருடைய "முஹிய்யதீன் பக்ஷ்" கப்பலில் இருந்த மணியாகும். இது இப்பொழுது நியூசிலாந்து மியூசியத்தில் இருக்கிறது.

இந்தியா, இலங்கை, மலேசியா, ஜாவா, பர்மா போன்ற நாட்டின் துறைமுகங்களில் இவர்களின் கப்பல்கள் தங்குவதற்கு சொந்த இடங்கள் இருந்ததாக வரலாறு உண்டு. இலங்கையில் புத்தளத்திற்குப் பக்கத்தில் ஏத்தாளை என்னும் துறைமுக இடமும் இதே போல் சிங்கப்பூர் பக்கத்தில் அந்துபார் என்னும் கப்பல் தங்குமிடமும் இவர்களுக்கு சொந்தமாக இருந்ததாகத் தெரிகிறது.

எட்டயபுரம் அரசருக்கு நிதித் தேவையை முன்னிட்டு வள்ளல் ஹபீப் மரைக்காயரிடம் 2 லட்சம் ரூபாய் கடனாகக் கேட்டதற்கு சம்மதித்து கொடுத்துள்ளார்கள். கடன் பெற்றத் தொகையை திருப்பிக் கொடுக்கும்போது சைனா நாட்டு அபூர்வமான வேலைப்பாடுகள் அமைந்த பல வண்ணங்கள் உள்ள கண்ணாடி பதித்த தங்க மூலாம் பூ வேலை செய்த கற்பூரப் பெட்டகங்கள் இரண்டில் கடன்பட்ட 2 லட்சத்திற்குரிய பவுன்களும், விலை உயர்ந்த பல பரிசுப் பொருள்களையும் அப்பெட்டகத்திற்குள் வைத்து எட்டயபுரத்து ராஜா வள்ளல் ஹபீபு மரைக்காயருக்கு அனுப்பி வைத்திருக்கிறார். அந்த இரு பெட்டகங்களும் அழகு மாறாமல் அவர்கள் சந்ததியினரிடம் இருப்பதை இன்றும் காணலாம்.

அவர்களுக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் வர்த்தகப் பண்டக சாலைகள் இருந்தன. அவற்றில் இலங்கையில் பேங்கு சாலைத் தெருவில் கீழப்பண்டக சாலையும், கீழக்கரையில் இன்று அமைந்திருக்கும் பேருந்து நிலையமும், அதையொட்டிய கலங்கரை விளக்கப் பகுதியும் அன்று வள்ளல் ஹபீபு மரைக் காயரின் கீழ் பண்டக சாலை இருந்த இடமாகும்.

வள்ளல் ஹபீபு மரைக்காயருக்கும், அவர்கள் மகன் ஷெய்கு சதக்கத்துல்லா மரைக்காயருக்கும் அவர்களின் தம்பி அப்துல் காதர் மரைக்காயருக்கும் இவர்களின் வள்ளல் தன்மைக்கும்



கீழக்கரையில் உள்ள வள்ளல் ஹபீபு மரைக்காயரின் அடக்கத்தலம்.

வர்த்தக நேர்மையையும் புகழ்ந்து அது சமயம் இலங்கை கவர்னர் கொடுத்த நற்சாட்சி பத்திரங்களின் நகல்களை இங்கே காணலாம்.

இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1191 மறைவு ஹிஜ்ரி 1232. இப்புகழ் பெற்ற ஹபீபு அரசர் எனும் ஹபீபு மரைக்காயரை காயல் பட்டணம் பாளையத்து முஹம்மது அப்துல்காதர் லெப்பை ஆலிம் இயற்றிய காயல் பட்டணம் காரண சரித்திரம் எனும் அரபுத் தமிழ் புத்தகத்தில் ஹபீப் மரைக்காயர் காயல்பட்டணத்தில்பிறந்தவர்கள் என கூறப்பட்டிருப்பது நகைப்புக்குரியதாகும்.

வள்ளல் ஹபீபு மரைக்காயர் அவகர்ளுக்கு - இலங்கை கவர்னர் கொடுத்த நற்சாட்சிப் பத்திரம்.



Colombo Jany 22
1809

Permit Abba Mahomed
Marcaire to pass thro' the
Gates of the Fort of Colombo
in a Palanquin

To the Officer H. Vaughan
Comg the Main, Town Major
& South Gate Guard.

வள்ளல் ஹபீபு மரைக்காயர் அவர்கள் மகன் சேகு சதக்கத்துல்லா மரைக்காயர் அவர்களுக்கு இலங்கை கவர்னர் கொடுத்த நற்சாட்சி பத்திரம்


This is to Certify that the
Followers of Seygo Sadekkathulla
Maekar of Kilcarre have been
permitted to travel in Ceylon
armed as follows Four Muskets
Four Swords, Four Daggers, Twelve
Pakenteen Boys each a Pike, and
his Peons wearing Belts with
Silver Badges

By His Excellency's Com.d
[illegible]
Deputy Secy

Chief Secretary's Office
Colombo 30th December
1825

வள்ளல் ஹபீபு மரைக்காயர் அவர்களின்
தம்பி அப்துல் காதிர் ஸாஹிபு மரைக்காயருக்கு
இலங்கை கவர்னர் கொடுத்த நற்சாட்சிப் பத்திரம்.

To all whom it may Concern

Whereas Abdul Cauder Sahaid Markar, Merchant of Kilekarry who is about to proceed to the Coast of Arabia on a pilgrimage to the Tomb of Mohomet at Mecca, has applied to us the Lieutenant Governor of the Island of Ceylon for a Certificate of our Knowledge of his Character and respectability for the greater Security of himself, his Vessel and his retinue during his said pilgrimage. We have granted this our Pass - and we do hereby also certify that Abdul Cauder Sahaid Markar is a Merchant, whose fair and honest dealings in all the Extensive Concerns he has had with his Majesty's Government of Ceylon render him deserving of its Countenance and protection, - requiring and requesting of all, or any, Subjects, Friends or Allies to His Majesty George the Fourth, by the grace of God of the United Kingdoms of Great Britain and Ireland King, defender of the faith, that may meet the said Abdul Cauder Sahaid Markar not to give the least hindrance or molestation, during his intended pilgrimage.

Given at Colombo this day of February 1824

(R. Granville)

Acting Depy Secy

# 11. பட்டத்து சுல்தான் அப்துல் காதர் மரைக்காயர்

பட்டத்து சுல்தான் அப்துல் காதர் மரைக்காயர் வள்ளல் சீதக்காதியின் வழித் தோன்றல், லெப்பை நெய்னா மரைக் காயரின் பேரன் ஆவார். இவர்களின் மூதாதையர்களைப் போல் வர்த்தக மன்னராக, புரவலராக இருந்ததுடன், ஆலிமாக வும் இருந்ததாக பல வரலாறுகளால் தெரியவருகிறது. மன்னர் சேதுபதி அரசவையில் முன்னோர்களைப்போல் அமைச்சராக இருந்ததை குறிப்பிடும் வகையில், புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் நெயினார் லெப்பை ஆலிம் அவர் களின் நிருபச் செய்யுட்களில் இவர்களைப் புகழ்ந்து பாடிய செய்யுட்களில்,

''தருவினிலை சேதுபதி யரசுரிமை தாங்குசுல்
தானப்துல் காதிர் துரைதன்.''

எனப்பாடியிருப்பதிலிருந்து இவர்கள் அரச குடும்பத்துடன் நெருங்கிய உறவினராக இருந்திருப்பதால், இவர்கள் 'பட்டத்து மரைக்காயர்' என சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு வந்தார் கள். சேதுபதி அரசருடன் நெருங்கிய உறவினராக இருந்த படியால் மன்னரின் உயர்ந்த விருதாகிய 'ரவிகுலரகுநாத முத்து விஜய' எனும் விருது இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவர் கள் முத்து இரத்தின வர்த்தகத்தில் புகழ் பெற்றவர்களாக இருந்தார்கள். அதை நிரூபிக்கும் வகையில் காயல்பட்டணம் புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் அவர்கள், இவர்களின் குமாரன் பட்டத்து செய்யிது முஹம்மது லெப்பை ஆலிம் மரைக்காயருக்கு சென்னையிலிருந்து கீழக்கரைக்கு எழுதிய கடிதத்தில் முத்து, சிகப்பு, பச்சை, வைரம் இவைகளை தனக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டு எழுதியநிருபத்தைக் காண்போம்:

(இரட்டையாசிரிய விருத்தம்)

ஆதியொரு வன்கருணை பெறுகநபி நாயகத்
தரியமன் றாட் டம்பெறுக
அன்புள்ள நபிமார்கள் மகிழ்பெறுக பேரிமா
மானவர்க ளருள் பெறுகவும்

அறிவாளர் துதிபெறுக வென்னாளு மெய்த்தவத்
ததிகாரர் மதி பெறுகவும்
அவுலியாக் களின்வரிசை பெறுகநீ தித்தகுதி
யரசர்பால் வரிசை பெறுக

சோதியுள மேபெறுக மற்றுள்ள குறுமன்னர்
தொண்டுசெய் வினை பெறுகவும்
தோற்றுமெளி யோர்துஆப் பெறுகநன் னிதிபெருகிச்
சொல்வரிசை பெறுக பெறுக

தூயநபி நாமமுறை பெறுகவென் பிறவியின்
சோதரம் பெறுக மகிழ்வின்
சொரியுமழை முகில்போலு முரியகொடை பெறுகயான்
சொல்வதொன் றுண்டு பெறுக

மாதமாம் றஜபுநா லைந்துவரை யும்மிட
நானுமற் றுள்ள பெயரு
மகிமையொடு தங்களின் சுகமொடு மிருந்தன
மாசிலா தவிட மணிசீர்

வரிசையொடு தாங்கள்மற் றுள்ளவர்கள் வாழ்சுக
மணத்தோ டுண ரத்தேடினேன்
வருமிந்த மகராஜ னதிகமோ கங்கொண்ட
மணிமுத்து மாலை யொடுமேல்

ஏதமில் செகப்புமறு விலபச்சை வயிரமிவை
யிங்கண்வரு கிற் பெருமையாய்
ஏற்றிநகை செய்துமுறை போலதிக லாபமிக
வேற்கலா மக மிருந்தால்

இசையும்விலை கண்டிஅத் தளமே யனுப்பிடுகி
லெஎிலயோர்க்கு முப காரமாம்
என்மனைகள் சுத்தமிக வன்பொடு வியாபக
மியற்றுவது தங்கள் கடனே.

(பட்டத்து செய்யிது முகம்மது லெப்பை ஆலிம் மரைக்காயர் அவர்கள் எனது பாட்டனார் பட்டத்து லெப்பை சாகிபு மரைக்காயரின் மூத்த சகோதரர் ஆவார்கள்)

இவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக மூதாதையர்களைப் போல் புரவலராகவும் இருந்திருக்கிறார்கள். முக்கியமாக கீழக்கரைக்கு அருகாமையில் மீசல் எனும் ஊரைச் சேர்ந்த ஹமீது இபுராஹீம் என்னும் பெயருடைய வண்ணக் களஞ்சியப் புலவர் சுலைமான் நபி அவர்கள் பெயரில் பாடிய இராஜ நாயகம் எனும் புகழ் பெற்ற காவியத்திற்கு பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயர் அவர்கள் கொடை நாயகராக இருந்திருக்கிறார்கள்.

இவர்களுக்கு சொந்தமான பல வர்த்தக கப்பல்கள் இருந்ததாக வரலாறுகள் மூலம் தெரிய வருகிறது. இவர்களின் அடக்க ஸ்தலம் இறைநேசர் சதக்கத்துல்லா அப்பாவின் தர்காவுக்கு மேல் புறம் இருக்கும் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான மைய அடக்க ஸ்தலத்தில் இருக்கிறது.

# கீழக்கரையில் வாழ்ந்து மறைந்த இறைநேசர்கள்

## 12. அஷ்ஷெய்கு மகுதூம் சின்னெயினா வலியுல்லாஹ் என்ற அப்துல் காதிர் (ஒலி)

அஷ்ஷெய்கு மகுதூம் சின்னெயினா வலியுல்லாஹ் அவர்கள் அபூபக்கர் சித்தீக் (ரலி)அவர்களின் வம்சத்தில் தோன்றியவர்கள். இவர்களின் மூதாதையர்களில் ஒருவர் முல்லா ஹாபில் மக்தூம் என்பவர் எமன் தேசத்திலிருந்து கப்பலில் தென்னாட்டிற்கு வந்த சமயம் கப்பல் பழுதடைந்து இங்குள்ள புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அண்டக்குளம் எனும்சிற்றூரில் வந்தடைந்ததாக வரலாறு கூறுகின்றது.

அக்காலை இராமனாதபுரம் ஜில்லாவில் எமனேஸ்வரத்தில் முஸ்லிம்கள் மார்க்க பேணுதல் உடைய சீலர்களாக இருந்தமையால் அங்கு திருமணம் முடித்ததாக கொடிவழி ஜாபிதா கூறுகின்றன. அன்னாருக்குப் பிறந்த மக்கள்களில் பலர் பரவலாக பல ஊர்களில் குறிப்பாக தஞ்சை மாவட்டப் பகுதிகளில் வசித்து வந்தனர். அதில் நமது அஷ்ஷெய்கு மகுதூம் சின்னெயினா வலியுல்லாஹ் என்ற அப்துல் காதிர் (ஒலி) அவர்கள் அதிராம்பட்டினத்தில் வசித்து வந்ததாக அறியப் படுகிறது. அதிராம் பட்டினத்தில் உள்ள ஜும்ஆ பள்ளி வாசல் ஷெய்கு மகுதூம் சின்னெயினா (ஒலி) என்னும் மாமேதை அவர்களின் திருக்கரத்தால் அஸ்திவாரமிடப்பட்டு கட்டப்பட்ட தாக வரலாறு கூறுகின்றது.

அக்காலை கீழக்கரையில் வாழ்ந்த வள்ளல் சீதக்காதியின் மூதாதையர்களால் பழைய ஜும்ஆ பள்ளி வாசலில் நடத்தப் பட்டு வந்த தாருல் உலூம் எனும் அரபி மதரஸாவிற்கு பொருத்த

மான உஸ்தாது (ஆசான்) தேவையின் நிமித்தம், அதிராம் பட்டினத்தில் இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களில் கல்விக் கடலாக இருந்த நமது மகுதூம் சின்னெயினா (ஒலி) அவர்களை குடும்ப சகிதம் வரவழைத்து கீழக்கரையில் சகல வசதிகளுடன் குடியிருக்கச் செய்து தாருல் உலூம் எனும் மதரஸாவிற்கு தலைமை உஸ்தாதாக நியமிக்கப்பட்டார்கள்.

இவர்கள் கீழக்கரை வந்து மதரஸாவை நடத்திய செய்தி தென்னாடு பூராவும் மலைமேல் இட்ட தீபம் போல் பிரகாச மானதை அறிந்த கல்வியில் ஆர்வமுள்ளவர்கள் இம் மதரஸா விற்கு வந்து கல்வி கற்களாயினர். இதனை கேள்வியுற்ற சதக்கத் துல்லா அப்பா அவர்கள், காயல் பட்டணத்திலிருந்து கீழக்கரை வந்து மகுதூம் சின்னெயினா (ஒலி) அவர்களிடம், பல ஆண்டுகள் கல்வி பயின்று சனதும் பெற்றார்கள்.

மகுதூம் சின்னெயினா(ஒலி) அவர்களுக்கு மக்தூம் உதுமான், மக்தூம் இஸ்மாயீல் என இரு புதல்வர்கள். மக்தூம் உதுமானின் சந்ததியினர் அதிராம்பட்டினம் திருச்சிராப்பள்ளி, சம்பைப் பட்டினம் போன்ற ஊர்களில் ஆலிம்களாகவும், ஹாபில்களாகவும் இருந்து வருகிறார்கள். மக்தூம் இஸ்மாயீல் தனது தந்தையுடன் கீழக்கரையில் தங்கிவிட்டார்கள். அவர்களின் சந்ததியினர் கீழக் கரையில் ஆலிம்களாகவும், காழிகளாகவும், வர்த்தகர்களாகவும் இன்னும் சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள்.

மகுதூம் சின்னெயினா வலியுல்லாஹ் தனது இறுதி காலம் வரை மத்ரஸா தாருல் உலூமில் தலைமை ஆசிரியராகவும், தென்னாட்டின் ஷரீஅத் சட்டங்களின் தீர்ப்பு (பத்வா) கூறுபவர்க ளாகவும் இருந்து,தனது 90வது வயதில் காலமாகி, தான்தலைமை தாங்கி வந்த மதரஸா இருந்த பழைய ஜும்ஆ பள்ளி தென் புறத்தில் அடக்கமாகி இருக்கிறார்கள். இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 982 மறைவு ஹிஜ்ரி 1072.

# 13. இமாம் ஷெய்கு சதக்கத்துல்லா அப்பா (ஒலி)

காயல்பட்டணம் இமாம் அஷ்ஷெய்கு சுலைமான் லெப்பை ஆலிம் (ஒலி) அவர்களுக்கும் முகவை மாவட்டம் பரமக்குடிக்குப் பக்கத்தில் உள்ள எமனேஸ்வரத்தில் அக்காலத்தில் இஸ்லாமிய ஷரீஅத் முறைகளில் சிறப்புற்று விளங்கிய குடும்பத்தில் உள்ள பாத்திமா என்னும் மாதரசிக்கும் தவப்புதல்வராக சதக்கத் துல்லா (ஒலி) பிறந்தார்கள்.

சதக்கத்துல்லா அப்பா (ஒலி) அவர்களுடன் பிறந்த சகோதரர்கள் நால்வர். (1) ஷம்சுத்தீன் (ஒலி) காயல் பட்டணம். (2) அஹ்மது (ஒலி) தஞ்சை மாவட்டம் மஞ்சக் கொல்லை, (3) ஷாம் ஷிஹாபுத்தீன் (ஒலி) காயல் தட்டணம். (4) ஸலாஹுத் தீன் (ஒலி) நெல்லை மாவட்டம் களக்காடு ஏர்வாடி ஆகிய ஊர்களில் அடக்கமாகியுள்ளார்கள். இவர்களில் சதக்கத்துல்லா அப்பா (ஒலி) சிறு வயதில் தன் தகப்பனார் சுலைமான் லெப்பை (ஒலி) அவர்களிடம் கல்வி கற்றார்கள்.

கீழக்கரையில் சீதக்காதியின் முன்னோர்களால் நடத்தி வரப் பெற்ற தாருல் உலூம் அரபி மதரஸாவிற்கு அதிராம்பட்டினத்தி லிருந்து சுலைமான் லெப்பை (ஒலி) அவர்களின் பள்ளித் தோழரான ஷெய்கு மக்தூம் சின்னெயினா (ஒலி) உஸ்தாதாக வந்து கல்வி புகட்டி வருவதைக் கேள்வியுற்று சதக்கத்துல்லா அப்பாவை கிழக்கரைக்கு கல்வி பயில சுலைமான் லெப்பை ஆலிம் அனுப்பி வைத்தார்கள். சதக்கத்துல்லா அப்பா மக்தூம் சின்னெயினா (ஒலி) அவர்களிடம் மார்க்கக் கல்வியை கற்று னதும், ஞான தீட்சையும் (முரீது) பெற்று அவர்களின் தாயக மாகிய காயல் பட்டணம் சென்றார்கள்.

மேலப் பாளையத்தில் இஸ்லாமிய மார்க்கத்தில் ஒழுக்க முடைய குடும்பத்தில் உள்ள மரியம் உம்மா என்ற மாதரசியை சதக்கத்துல்லா அப்பா (ஒலி) திருமணம் முடித்தார்கள்.

மகுதூம் சின்னெயினா (ஒலி)யின் மூதாதையர்களில் மக்தூம் முல்லா ஹாபிள் என்பவர் எமனேஸ்வரத்தில் திருமணம் முடித்து இருப்பதும், சதக்கத்துல்லா அப்பா (ஒலி)யின் தகப்பனார் சுலைமான் லெப்பை ஆலிம் அதே எமனேஸ்வரத்தில் திருமணம் செய்ததையும் நோக்குமிடத்து, அக்காலத்தில் இஸ்லாம் அந்த எமனேஸ்வரத்தில் சிறப்புடன் இருந்ததாக தெரிய வருகிறது.

சதக்கத்துல்லா அப்பா தன் குடும்பத்துடன் காயல்பட்ட ணத்தில் தங்கி மார்க்கக் கல்வியையும், நேர்வழிகளையும் மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்கள்,

அவர்களுக்கு முஹம்மது லெப்பை ஆலிம் (ஒலி) என்னும் ஓர் ஆண்மகவும், கதீஜா, ஆமினா, ஜெயினபு, உம்முஹானி. ஸாரா என்ற ஐந்து பெண் மக்களும் பிறந்தனர். இதில் ஸாரா உம்மா என்ற கடைசி மகளைத் தவிர மற்ற நான்கு பெண் மக்களையும் காயல்பட்டணத்தில் திருமணம் செய்து வைத் தார்கள்.

அக்காலத்தில் காயல் பட்டணத்தில் நெய்னா வம்சத்தில் வாழ்ந்த தலைவராக உள்ளவரை இரு பெருநாட்களிலும் குத்பா தொழுகை முடிந்த பின் விருதுகளுடன் அதிவிமரிசை யாக நெய்னாவின் இல்லத்திற்கு மக்கள் அழைத்துச் சென்று விட்டு வருவது வழக்கமாக நடைபெற்று வந்தது.

சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் கல்வி கற்றவர்களும், அவர்கள் பேரில் நல்லெண்ணம் கொண்டவர்களும், இரு பெரு நாட்களிலும் நெய்னாவுக்கு மரியாதை செலுத்தி வந்தது போல் சதக்கத்துல்லா அப்பா (ஒலி) அவர்களையும் சகல மரி யாதைகளுடன் அவர்கள் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல முற்பட்டனர். இதையறிந்த நெய்னாவைச் சேர்ந்தவர்கள்,

எங்கள் நெய்னாவுக்கு சமமாக மற்றவர்களுக்கு எந்த மரியாதை யும் செய்யக் கூடாது' எனத் தடுத்து, சதக்கத்துல்லா அப்பா அவர்களை மரியாதைக் குறைவான வார்த்தைகளையும் கூறி விட்டார்கள். இதை அறிந்த சதக்கத்துல்லா அப்பா அவர்கள் மன வேதனையடைந்து இனிமேல் அவ்வூரில் தமக்கு மரியாதை இருக் காது என்பதை உணர்ந்து, தன் மனைவி மரியம் உம்மாவையும், திருமணம் ஆகாது இருந்த தன் கடைசி மகள் சாரா உம்மா வையும் அழைத்துக்கொண்டு தான் கல்வி கற்ற ஊராகிய கீழக்கரைக்கு வந்து விட்டார்கள்.

கீழக்கரையில் இப்பொழுது உஸ்வதுன்ஹஸனா முஸ்லிம் சங்கம் இருக்கும் இடம், அப்பா அவர்கள் வசித்த வீடு, அதற்கு எதிரே உள்ள அவர்களுடைய கல்விக் கூடம், இப் பொழுது பெண்கள் ஐந்து நேரமும் பள்ளி வாசலும் சிறுவர்களுக்கு குர்ஆன் ஓதிக் கொடுக்கும் மதரஸாவுமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சதக்கத்துல்லா அப்பா (ஒலி) அவர்களின் மணமாகாத இளைய மகள் ஸாரா உம்மாவை வள்ளல் சீதக்காதி மரைக்கா யரின் இளவல் மாமு நெய்னா என்ற பட்டத்து முஹம்மது அப்துல் காதர் மரைக்காயரின் குமாரர் பட்டத்து அபூபக்கர் மரைக்காயருக்குத் திருமணம் செய்து வைத்தார்கள். இவ்விரு வருக்கும் பிறந்தவர்கள் மூன்று ஆண்மக்கள்.

(1) ஐதுரூஸ் என்னும் பிரம்மாண்டமான கப்பலைக் கட்டி நூற்றுக்கு மேலிட்ட உலமாக்களையும், சூபியாக்களையும் தன் சொந்த செலவில் மக்கா சென்று புனித ஹஜ்ஜு செய்து வர அழைத்துச் சென்றவர்களும், சின்னசீறா, திருமணக்காட்சி ஆகிய இரு காப்பியங்களுக்கும் கொடை நாயகராக இருந்தவருமான வள்ளல் லெப்பை நெய்னா மரைக்காயர். (2) அவ்வாகாரு மரைக்கார் என்ற அப்துல் காதிர் மரைக்காயர் இவர்கள் தென்னகத்திலேயே சிறப்பு மிக்க ஜும்ஆ பள்ளியை கட்டிய

துடன் கீழக்கரையிலும். காயல்பட்டணத்திலும் புதுப்பள்ளி என்ற இரு பள்ளி வாசல்களையும் கட்டியவர்கள், (3) செய்யிது முஹம்மது மரைக்காயர். இவர்கள் கொடைவள்ளலாகவும், மார்க்க மேதையாகவும் விளங்கினார்கள்.

சதக்கத்துல்லா அப்பா (ஒலி) அவர்களுக்கு முஹம்மது லெப்பை என்ற ஒரே மகன். அவர்களுக்கு மூன்று ஆண் மக்கள் (1) (மலிக்குல் உலமா) சதக்காஹ் (ஒலி) (2) (அமீருல் உலமா) சுலைமான் லெப்பை (ஒலி) (3) அஹ்மது (ஒலி).

சுலைமான் லெப்பை (ஒலி) யின் மகன், செய்யிது முஹம்மது (ஒலி) யின் மகன் சின்ன தம்பி என்ற செய்யிது முஹம்மது (ஒலி). இவர்களின் மகனார் ஹபீப் முஹம்மது லெப்பை ஆலிம் (ஒலி) இவர்கள் தான் அப்பா அவர்களின் ஆண் சந்ததியில் காயல் பட்டணத்திலிருந்து முதலாவது கீழக்கரை வந்து குடிபதியாக தங்கியவர்கள். இவர்கள் மார்க்கப் பிரசாரத்திற்காக இலங்கை சென்ற இடத்தில் கல்பிட்டி என்ற ஊரில் இறையடி சேர்ந்து ஹிஜ்ரி 1300 ஸபர் பிறை 13-ல் அடக்கமாகி உள்ளார்கள்.

சதக்கத்துல்லா அப்பா (ஒலி) கோர்வை செய்து பாடிய பைத்துகளும், மற்றியாக்களும், இறை வேட்டல்களும் மட்டி லடங்கா. அதில் மிகவும் தலை சிறந்து விளங்கியது நபிகள் நாயகம் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களைப் புகழ்ந்து பாடிய வித்ரியாவெனும் காவியமாகும். இதனாலேயே அவர்கள் மாதிஹுர் ரசூல் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்று வந்தார்கள்.

சதத்கத்துல்லா அப்பா (ஒலி) தமது 73-வது வயதில் ஹிஜ்ரி 1115 ஸபர் மாதம் பிறை 5-ல் வபாத்தாகி, அப்பா அவர்களின் சந்ததியினருக்கு சொந்தமான தர்கா இருக்கும் இடத்தில் நல்லடக்கம் ஆகியுள்ளார்கள். இன்றும் இத்தர்கா இவர்களின் சந்ததியினரால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது.



கீழக்கரையில் உள்ள மாதிஹுர் ரசூல் சதக்கத்துல்லா அப்பா அவர்களின் தர்கா.

# 14. தொண்டி அப்பா என்ற அபூபக்கர் (ஒலி)

தொண்டி அப்பா என்ற அபூபக்கர் (ஒலி) கீழக்கரை ஷெய்கு முதலியார் ஒலியின் மகன். பாட்டனார் பெயர் நெய்னா முஹம்மது. இளமையில் கீழக்கரையில் மார்க்கக் கல்வி பயின்று ஆலிமாக விளங்கினார்கள். அப்பால் தொண்டி மாநகர் சென்று சிலகாலம் தங்கி, மாமுனா லெப்பை என்பவர்களின் குடும்பத்தில் திருமணம் செய்து, அங்கு மக்களுக்கு மார்க்க நல்லுபதேசம் செய்து வந்தார்கள்.

அக்காலத்தில் இவர்கள் நன்னடத்தை உடையவராகவும், கஷ்புகராமாத்துக்கள உடையவர்களாகவும் இருந்து வந்தது டன், மக்களுக்கு மார்க்க நல்லுபதேசம் செய்து வந்ததால் இவர்களை குத்புஜ்ஜமான் என அழைத்தனர். இவர்களின் மகிமையைக் கேள்வியுற்ற வாலாஜா நவாப் முஹம்மதலி இவர்களிடம் தீக்ஷை (முரீது) பெறவேண்டுமெனக் கருதி, நவாப் தன் பரிவாரங்களுடன் தொண்டியை நோக்கி வரும் வழியில் இவர்கள் குத்புஜ்ஜமானாக இருந்தால் எனக்கொரு அற்புத கராமாத்து காட்ட வேண்டுமென தன் மனதில் நினைத்தார்.

தொண்டி வந்து அபூபக்கர் (ஒலி)யை சந்தித்ததும் நவாபின் தாகம் தீர்ப்பதற்காக அருகில் இருந்த தென்னை மரத்தில் ஒரு இளநீரை வெட்டி நவாபை குடிக்கும்படியாக கொடுத்தார்கள். அந்த இளநீரை அருந்துவதற்காக எடுத்த தும், அதிலிருந்து ஒரு சிறிய மீன் நவாபின் மேல் குதித்தது. இந்த அற்புதத்தைக் கண்ட நவாபு, அவர்களின் இரு கரங் களைப் பிடித்து தனக்கு தீக்ஷை தர வேண்டுமென மன்றாடி தீக்ஷை பெற்றார் என வரலாறு கூறுகின்றது. அவர்களுக்கு சில கிராமங்களை மானியமாகக் கொடுத்ததுடன் அவர்களின் சந்ததியாரும் சிரமமின்றி குடும்ப வாழ்க்கை நடத்த கணிசமான பொருள் பிரதி மாதமும் அரசாங்கத்திலிருந்து கிடைக்க உத்தரவிட்டார். அன்று முதல் இப்பொழுது இருக்கும்

அரசாங்கம் மூலம் அந்தத் தொகையை வலியுல்லாஹ் அவர்களின் சந்ததியினர் பெற்று வருகிறார்கள்.

இவர்களின் திருப்புதல்வர் லெப்பைக்கனி (ஒலி) காயல் பட்டணம் சொர்க்கத்துப் பெண் என்ற ஆயிஷா நாயகியின் மகன் மலாக்கா அப்துல் காதிர் (ஒலி)யின் மகள் ஆயிஷா நாயகியை மணமுடித்தார்கள். இவர்களின் இரு பெண் மக்களை ஒருவர் இறந்த பின் மற்றவரை கீழக்கரை வள்ளல் ஹபீபு அரசர் என்ற ஹபீபு மரைக்காயர் திருமணம் செய்திருந்தார்கள். லெப்பை கனி (ஒலி) தன்பாட்டனார் ஷெய்குமுதலியார் (ஒலி) யின் கப்ருக்குப் பக்கத்தில் கீழக்கரை கிழக்குத் தெருவில் அப்பா பள்ளியின் தென்புறத்தில் அடக்கமாகி இருக்கிறார்கள்.

இவர்கள் இப்பள்ளியில் அடங்கிருப்பதனால் அப்பா பள்ளி எனபெயர் வழங்கலாயிற்று. சமீபத்தில் இப்பள்ளியில் இடவசதி குறைவாக இருப்பதால் முழுவதுமாக உடைத்து விரிவாக கட்டப்பட்டிருக்கிறது.

தொண்டி அப்பா அவர்கள் தொண்டியில் அடக்கமாகியிருக்கிறார்கள். இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1130 மறைவு ஹிஜ்ரி 1203 ஆகும்.



# 15 அப்துல் காதிரு (ஒலி)

இவர்கள் மாதிஹுர் ரசூல் சதக்கத்துல்லா அப்பா (ஒலி)யின் தவப் புதல்வி சாரா உம்மாவின் மகன் வள்ளல் பட்டத்து லெப்பை நெய்னா மரைக்காயரின் தவப் புதல்வர். இவர்கள் பெயரில் பலரால் மற்றியாக்கள் சொல்லப்பட்டிருப்பதன் மூலம் இவர்கள் கஷ்பு கராமாத்து உள்ளவர்களாகத் தெரிகிறது.

இவர்கள் அரபியில் பைத்துகளும், தமிழில் பலமாலைகளும் பாடியுள்ளார்கள். அதில் முக்கியமானது நம் பகுதியில் இன்னல் கள் ஏற்படும் சமயங்களில் இறை வேட்டலான 'அடைக்கல மாலை' எனும் அபூர்வ மாலையை பாடியிருக்கிறார்கள். இவர்கள் வெளியூர் சென்றிருந்த சமயம் தனக்கு அந்திய காலம் நெருங்கி விட்டதை உணர்ந்து தாமதிக்காமல், தனது பல்லக்கில் சொந்த ஊராகிய கீழக்கரைக்கு விரைந்து வரும்பொழுது, பல்லக்கைத் தூக்கி வருபவர்களிடம் பல்லக்கின் கதவை வழியில் எக்காரணம் கொண்டும் திறக்கக்கூடாதென்றும் ஊர் சென்று தனது மகனின் கையால் திறக்கும்படியும் உத்தரவிட்டார்கள், அதன்படி ஊர் வந்து சேர்ந்ததும் மகனாரின் கையால் திறந்து பார்க்க உயிர் பிரிந்து இருப்பதை அறிந்து ஆச்சரியப்பட்டதாக கூறப்படுகிறது. (இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்).

இவர்கள் கீழக்கரையில் சதக்கத்துல்லா அப்பா (ஒலி)யின் குடும்பத்திற்கு சொந்தமான மைய அடக்கஸ்தலத்தில் அடக்க மாகியுள்ளார்கள். பிறப்பு இறப்பு தெரியவில்லை.



வகுதை மண்டலத்தில் வளம் பொருந்திய
பௌத்திரமாணிக்கப்பட்டினமாகிய கீழக்கரை
*அப்துல் காதிறுப் புலவரவர்கள்
ஹக்குபேரிற்பாடிய

# அடைக்கலமாலை

இதனை முனாஜாத்தென்று சொல்லினும் பொருந்தும்
கட்டளைக் கலித்துறை.

மருவுரு வாகி மலருரு வாய்த்தினம் வாழ்த்துஞ்சிந்தைக்
கொருவுரு வாயொளி வுக்கொளி வாயுயி ருக்குயிராய்க்
கருவுரு வாயமை யாப்பொரு ளாய்த்திருக் காட்சிதரும்
அருவுரு வாய்நின்ற மெய்ப்பொரு ளேயுன் னடைக்கலமே (1)

துவக்க முகம்மது வேதாம் பர்க்குமற்றத் தூதருக்கு
முவக்கு மபூபக்கர் சித்தீக் குமறுது மானலியா
ரிவர்க்கு மிவர்கிளை யெல்லார்க் கும்மிசு லாமுமீ
னவர்க்கும் றகுமத்துச் செய்தருள் வாயுன் னடைக்கலமே. (2)

மனத்தையுங் காத்தென் சினத்தையுங் காத்தெனை வந்தடைந்தோ
ரினத்தையுங் காத்தருள் செய்திடு வாயுனை யெண்ணினபேர்
சனத்தையுங் காத்து மகுஷறி லேசொர்க்கந் தந்திரட்சித்
தனைத்தையுங் காத்தரு ளல்லா வுன்பக்க லடைக்கலமே. (3)

கல்லாத கல்வி பலகோடி கற்றுநின் கற்பனைக்கு
ணில்லா தகல வலிமையுண் டோநித்த நம்பிறகு
லுல்லா ஷபா அத்தி லீடேற்று வாய்மறை நூலுதவும்
அல்லா வுனைநம்பி னேனம்பி னேனுன் னடைக்கலமே. (4)

விடியேன் விடிந்தந்தி பட்டாலு மாசை விரகவெள்ள
மடியேனைக் காக்கக் கடனுனக் கேயுன்னை வாழ்த்தறியாக்
கொடியே னுனக்கு நபியிற சூல்க்குங்கொத் தோடுவிலை
யடியே னுனைநம்பி னேனம்பி னேனுன் னடைக்கலமே. (5)

மிடிமைக்கு நெஞ்ச மிடையாமல் வாழ்வு மிகும்பொழுது
கொடுமைக்கு நெஞ்சந் துணிந்துநில் லாதுய்யக்
[கொண்டருள்வாய்
நெடிமைக் குடையிற சூல்பாத நித்த நித்தநம்பு
மடிமைக்கு நீதுணையல்லா வுன்பக்க லடைக்கலமே (6)

நீளக் கடன்கொண் டடியே னின்பால்வந்து நின்றுசும்மா
மீளக் கடனல்ல வேயல்ல வேவினை மேலடியார்
தாளக் கடனது வெல்லாம் பொறுத்துன்ஷ பாஅத்திலே
யாளக் கடனினி அல்லா வுன்பக்க லடைக்கலமே. (7)

தேனாலுங் கொண்டையர் வாழ்வதி னாலுந் தினங்கலியிற்
போனாலு மாவி புகுந்திறந் தாலுமென் புத்தியற்று
நானாலு கோடி பிழைகள்செய் தாலுமென் னாட்டங்கள்வீ
ணானாலு நீதுணை யல்லா வுன்பக்க லடைக்கலமே. (8)

வாக்கிலு நீயென் மனத்திலு நீயென் மனமயலிற்
போக்கிலு நீகண் பொருந்திலு நீமனம் புண்படவே
தாக்கிலு நீயென் ஜடத்திலு நீயரு டந்துசொர்க்கத்
தாக்கிலு நீதுணை யல்லா வுன்பக்க லடைக்கலமே. (9)

நடக்கிலு நீதுணை யென்னுயி ரோடி நடுநடுங்கிக்
கிடக்கிலு நீதுணை யப்பாற் கபனைக் கிழித்துச்சுற்றி
மடக்கிலு நீதுணை எல்லோரும்கூடி மணலறையு
லடக்கிலு நீதுணை யல்லா வுன்பக்க லடைக்கலமே (10)

கடங்கா தமரு மகுமூதி லேறிக்கஸ் தூரிபொன்னூ
ரிடங்கா தம்வீச வருமிற சூலுக்கு மெவ்வுயிர்க்குந்
துடங்கா தமற்ற நபிமா ரறிவுக்குந் தொன்மறைக்கு
மடங்கா தமேலவ னேயடி யேனுன் னடைக்கலமே. (11)

ஈயேன் வணக்கஞ்செய் யேன்பெரி யர்சிச்சீ யென்றிகழு
நாயே னெவ்வாறுய்கு வேனறி யேன்வந்த நாண்முதலாய்த்
தாயே நகைக்கினு நீயே துணையென்ற னுக்குமுன்னின்
றாயே யெனதுகு தாயே யுன்பக்க லடைக்கலமே. (12)

செறிந்தேன் விரகக் கடலுக்குட் பாவச் சுமைசுமந்து
முறிந்தேனை ரட்சித்து முன்னிற்பை யேயுன்றன் மூதறிவா
லெறிந்தேன் கவலைக ளெல்லா முனையின்றி வேறிலையென்
றறிந்தே னுனையடைந் தேன்புகுந் தேனுன் னடைக்கலமே.
(13)

நோகாம லுள்ள நுடங்காம னான்மறை நூல்தவறிப்
போகாம லாவி புழுங்காம னாளைப் பொழுதிலங்கம்
வேகாமன் மூளை வெடித்துரு காமல்வெந் தீநரகி
லாகாமற் காத்தரு ளல்லா வுன்பக்க லடைக்கலமே. (14)

சிறியேன் கிருபைசெய் யேன்பெரி யோர்கண்முன் [சென்றுநில்லா
வெறியே னுன்பால்வந்து மீண்டுநின்றேனுன் றன் வேதமன்றிக்
குறியே னபிக்குங் குறைகள்செய் யேனுன்றன் கொள்கையன்றி
யறியேன் வினையறி யேனடி யேனுன் னடைக்கலமே (15)

பாருந் துணைமுலை மாதரும் பொன்னும் பழகின்வினை
யோருந் துணையென் றிருப்பதல் லால்க்கபு சோடறுஷிற்
சேருந் துணைப்பத நம்புமென் சிந்தைக்குன் சித்தமன்றி
யாருந் துணையில்லை யல்லா வுன்பக்க லடைக்கலமே. (16)

நானே நினைத்ததுஞ் சொன்னதுஞ் செய்தது நாளுமவம்
போனே னுன்பாதம் புகழ்ந்தறி யேனென்றன் [புத்தியென்னைத்
தானே நகைக்கி லுனக்காவ தெப்படித் தானென்றெஞ்ச
லானே னுனைநம்பி னேனடி யேனுன் னடைக்கலமே. (17)

காதாருங் கண்ணிய ராசையுண் மூழ்குங் கருத்தனையுன்
பாதார விந்தத்திற் காட்கொள்வை யேயெப் படியுமுன்றன்
தீதாறு காணச் சரண்புகும் பாவிக்குன் சித்தமன்றி
யாதாரம் வேறில்லை யல்லா வுன்பக்க லடைக்கலமே. (18)

பூலோ கமுற்றும் புரக்கினும் பொன்மாலை புக்கினும்வான்
மேலோக வாழ்வு லபிக்கினு மாமுன் விருப்பமில்லாத்
தீலோகம் புக்கினுஞ் சற்றே யுன்சித்தந் திரும்பினபேர்க்
காலோக மொன்றில்லை யல்லா வுன்பக்க லடைக்கலமே. (19)

கொஞ்சிய நெஞ்சுக்கும் பேராசை வெள்ளங் குதித்தெழுந்து
மிஞ்சிய நெஞ்சுக்கு மேலோ ரிரவில் விழித்தெழுந்து
கெஞ்சிய நெஞ்சுக்கு மென்போலப் பாவக் கிலேசத்தினா
லஞ்சிய நெஞ்சுக்கு நீதுணை யானுன் னடைக்கலமே. (20)

துயரிலு நீவந்து முன்னிற்க வேண்டுந்துன் பங்களன்றி
யுயரிலு நீவந்து முன்னிற்பை யேவுடல் விட்டுயிர்தான்
பெயரிலு நீவந்து முன்னிற்க வேண்டுமென் பேதைநெஞ்ச
மயரிலு நீவந்து முன்னிற்பை நானுன் னடைக்கலமே. (21)

கலிமாத் தொழுகையும் ஸக்காத்து நோன்புடன்
(ஹச்சுஞ்செய்மு
சிலிமா னவர்க ளுடனே றகுமத்துச் செய்தருள்வாய்
புலிமான் புகழு மலிமா முலையுண்ட புண்யசிங்க
அலிமாம னார்திரு வாணையி னானுன் னடைக்கலமே. (22)

ஊரா ரிருந்துநல் லுற்றா ரிருந்து முறமுறையின்
பேரா ரிருந்துமென் பெற்றா ரிருந்தும் பிழைபொறுக்கக்
காரா ரிடுங்குடை வேதாம்ப ரன்றிக் கடாட்சம்வைக்க
ஆரா ரிருந்தும் பலனில்லை யானு னடைக்கலமே. (23)

பெருமையு மன்புந் தயவுஞ்சிங் காரமும் பேரறிவு
மொருமையும் பெற்ற நபிமார் மயங்கையி லும்மத்தென்றே
யிருமையுந் தேடிநின் றீடேற்று வித்திடு மெங்கணபிக்
கருமையுங் வாழ்வுங் கொடுத்தவனேயு னடைக்கலமே. (24)

வாளாக் கியகண் மடமானும் வாழ்வும் வரிசைகளும்
வேளாக் கியமெய்யுந் தந்தனை யேவினை யேனுளத்துன்
தாளாக் கியென்றுந் தியானஞ்செய் யாத்தறு கண்ணனைநின்
னாளாக்கி யாண்டரு ளல்லா வுன்பக்க லடைக்கலமே. (25)

பொய்யோ தலைமரு ளோவிழி யோபுலை யோகளவோ
கையோ பழவினை யோசெவி யோகப டோவிருதா
மெய்யோ வவகடம் வாயோ துன்மார்க்கம் விதித்திருந்து
மையோ வெண்ணாம லடைந்தேனுன் பாதத்
தடைக்கலமே, (26)

நூறா யிரந்தரஞ் சொன்னாலுங் காதி னுழைந்து சிந்தை
தேறா தபாவியைத் தேற்றுவை யேயுன் றிருவுளத்தான்
மாறாத வல்வினை யெல்லா மகற்றி மனதில்வெப்ப
மாறாத பாவியை யாண்டருள் வாயு னடைக்கலமே. (27)

துலையாத வல்வினை யெல்லாந் தொலைக்கத் தொழுதறியாப்
புலையா ளனையெப் படிபொறுப் பாயெந்தன் புத்தியெல்லா
மலையாம னின்று மறுகாம னாளை மகுஷறிலே
மலையாமற் காத்தரு ளல்லா வுன்பக்க லடைக்கலமே. (28)

இடரான துன்பமு மின்பமுஞ் செய்திளைத் தேநரகிற்
றுடராமற் பாலத்திற் றுண்டி லடாமற் சுவர்க்கம்புகப்
படறா னதுவந்தென் சிந்தையுள் ளேபெரும் பாவவழி
யடராமற் காத்தரு ளல்லா வுன்பக்க லடைக்கலமே. (29)

தேடிப் பிறருக் களியாத லுத்தன் றினமுமுன்னைப்
பாடித் துதித்தறி யாப்பெரு மூடனைப் பார்த்தருள்வாய்
கூடிக் கதிர்விற் கிடைநின்று மூளை கொதிக்குமப்போ
தாடித் துரும்பி னலையாமல் யானு னடைக்கலமே. (30)

கான லவிக்கு முயிர்செல்லு நாள்கலி மாவுதவி
வேனல விக்குங் கசப்பட ராதுன் விருப்ப நல்காய்
கோல நபிக்குப் பிணைநின்ற கோசுமு கம்மதெங்க
ளால நபிக்கும்மத் தானே னுன்பக்க லடைக்கலமே. (31)

நீண்டருள் பாவக் கடலுக்குண் மூழ்கி நிலையழிந்து
தாண்டருள் பாவிக்குன் றஞ்சமல் லாற்றமி யேனையன்பான்
மீண்டருண் மீண்டரு ளெல்லா வினையும் விலக்கியென்னை
யாண்டரு ளாண்டரு ளாண்டவ னேயுன் னடைக்கலமே. (32)

வாடிய பூமங்கைக் காளாக் கினுமுயர் வானுலகங்
கூடிய மாதருக் காளாக் கினுங்கொடுந் தீநரகங்
காடிய வானவர்க் காளாக் கினுமுன் கடாட்சமென்னை
யாடிய கோலத்திற் காளாக் கினுமு னடைக்கலமே. (33)

கையம் புகுங்கண் மடவார் களாசைக் கவலைபுக்கு
மெய்யம் புகுந்தளிர்க் கேவிலை யாகி விடுத்தனன்றோ
வையம் புகும்பொன் னுலகோர் நகைக்க மறுகிநெஞ்ச
மையம் புகாம லருள்புரி வாயு னடைக்கலமே. (34)

குவ்வேழை வானக் குவடுக ளேழைக் குறுசறுவை
யிவ்வேழ் கடலைப் படைத்த பிரானென் றிறைஞ்சிநில்லா
வெவ்வேளை மூதேவி யெல்லா நரகில் விழுந்தழுகும்
அவ்வேளை காத்தரு ளல்லா வுன்பக்க லடைக்கலமே. (35)

சாம்வழி யுன்பதஞ் சாரா வழிவெந் தழனரகில்
வேம்வழி யுன்னை விரும்பா வழிவெய்ய பாலத்தின்மேற்
போம்வழி நின்று புகழ்ந்தோர் சுவர்க்கம் புகப்புகுத்து
மாம்வழி யால நபிவழி யானு னடைக்கலமே. (36)

இருளுங் குழலிய ராசையி னெஞ்ச மிடைந்திடைந்து
மருளுங் கொடியனெவ் வாறுய்கு வேனிந்த மண்ணுலகிற்
பொருளுங் கலையுந் தருவது போலுன்றன் பொன்னுலகி
லருளுங் கிருபையுந் தந்தருள் வாயு னடைக்கலமே. (37)

பெரும்பா தகனைக் கொடியேனை யாசைப் பிரபஞ்சனைத்
தரும்பா தகனைத் தளர்பா தகனையென் றன்னைநைய
வரும்பா தகனை மாபா தகனை மறைபயிலா
அரும்பா தகனை யடியேனை யாளு னடைக்கலமே. (38)

படையாளு மால்விழி யார்கொங்கை மீறு பதனம்புக்குந்
தடையாள னென்றெனைத் தள்ளாது சித்தஞ்சற் றேயிரங்கிக்
குடையாள ரெங்க ணபிநயி னார்தங் கொடிநிழலி
லடையாளந் தந்தெனை யாண்டருள் வாயு னடைக்கலமே (39)

சபையம் பலம்புக்கு மேலோ ரறிவு தனைப்படியா
துபையம் புகுஞ்சிந்தைக் கார்துணை யாமிற சூல்வழியி
னுபையம் புகாத செவியேன் புகலிட மொன்றுமில்லா
தபைய மபைய மென்றுவந் தேனு னடைக்கலமே. (40)

பொருடந்த வேதப் பொருளே யுன்பாதம் புகழ்ந்தறியா
மிருடந்த நெஞ்சிலுன் பேரொளி காட்டி மிகவிரும்பு
மருடந்த கண்ணிற் றிருக்காட்சி தந்து மறுமையினும்
அருடந்த சொர்க்கமுந் தந்தருள் வாயு னடைக்கலமே (41)

புலங்கா ரறிவு கல்லா ரிமைப்போதும் புகழ்ந்தொளிவு
துலங்கா ருளத்திடை தோன்றுவ தோதொழு தோதுகினுங்
கலங்கார் மறைவிலங் காரவ ராசைக் கருத்தில்நிற்கும்
அலங்கார வேதப் பொருளே யுன்ற னடைக்கலமே. (42)

பொன்னையுந் தந்தனை யெல்லாம் நகைக்கப் புகைக்குச்சிந்தை
தன்னையுந் தந்தனை யேவினை யேனைச் சழப்படுத்து
மின்னையுந் தந்தனை யெந்தனை நீயெவ் விதஞ்செயினு
மன்னையுந் தந்தையுந் தெய்வமு நீயு னடைக்கலமே. (43)

ஏவல் புகுந்தும் விலகலை நீக்கி யிகழ்ந்துமுன்றன்
காவல் புகுந்தறி யாருய்வ ரோமலக் கல்மவுத்தாஞ்
சேவல் புகுந்தென் னுயிருண்ணு நாளுன் றிருப்புகழ்மே:
லாவல் புகுந்த கருத்தருள் வாயு னடைக்கலமே. (44)

மாலைக் கரும்புங் கமலங்கொய் தேகல்லை வாழ்த்திநின்று
பாலைக் கரும்பைப் படைத்தோர்க்குச் சொர்க்கப்
பலனுமுண்டோ
வேலைக் கரும்பது நல்குமுன் வேத விதிநடந்தோர்க்
காலைக் கரும்பி னுழலாமல் யானு னடைக்கலமே. (45)

ஊரம் பலநம்பு நல்லார்பொல் லார்சொல்லு
(முண்மையெல்லாங்
காரம் பலம்புண்ணிற் பட்டதொப் பாமெனக் கருத்துமொரு
நேரம் பலகுண மானாலு முன்னை நினைப்பதல்லால்
ஆரம் பலாதிசொன் னாலும்வி டேனு னடைக்கலமே. (46)

மாக முழுதுங் கடந்தறு ஷேறி வசனித்துயர்
மேக முழுதுங் குடையிட மீண்டருள் வேதநபி
பாக முழுதுந் தெளிந்தோர்கள் பாதம் பணிந்தடியே
னாக முழுது நம்பிநின் றேனு னடைக்கலமே. (47)

இளைத்திடு மெய்யுங் களைத்திடு நெஞ்சுமென் றைக்கும்வினை
யுளைத்திடும் பாவிக் கெவருண்டு காணுள் ளுடைந்துருகிக்
களைத்து நகைத்துக் கிடக்குமந் நாளுன் கடாட்சத்தினா
லழைத்தெனை ரட்சிப்பை யல்லா வுன்பக்க லடைக்கலமே
(48)

நினைவோர்க்கு முன்னிற்கும் வேதாம்பர் பாத நினைத்தருளைப்
புனைவோர்க்கு மார்க்கம் புகுந்துவந் தோர்க்கும் புகழுநர்மேல்
மனைவோர்க்கு முன்னும் சலவாத்தை யோதி மனதினம்பு
மனைவோர்க்கு நீ துணை யல்லா வுன்பக்க லடைக்கலமே (49)

கதுக்கான வேதம் படித்ததுக் காகிலுங் காசியினிற்
புதுக்கார் கவிகை நபிக்கா கினுமுன் புகழ்துதிக்கு
மிதுக்கா கினுமப்துல் காதிறென் றேயெனைப் பேர்குறிக்கு
மதுக்கா கினுமென்னை யாண்டருள் வாயு னடைக்கலமே (50)

---

அடைக்கலமாலை முற்றிற்று.

---

* இவர் இந்நூலாசிரியரின் முப்பாட்டனார் ஆவார்.



# 16. ஜமால் முஹம்மது (ஒலி)

ஜமால் முஹம்மது (ஒலி) கீழக்கரை மேலத் தெருவில் பிறந்து வாழ்ந்து புதுப்பள்ளி முகப்பு திண்ணைக் குறட்டில் அடக்கமாகி யுள்ளார்கள்.

சின்ன சீறா பாடிய கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயரின் மகன் செய்யது அஹ்மது மரைக்காயர்புலவர். ஜமால் முஹம்மது (ஒலி)யின் பெயரில் பாடியிருக்கும் நூர் நாமாவில் காகிரி நாட்டு வளம் என்னும் 14 கண்ணிகளில் மூன்றாவது கண்ணியில் ஜமால் முஹம்மது (ஒலி)யின் சிறப்பையும், இவர்கள் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்ததாக ஐயமற கூறப்பட்டிருப்பதுடன், 10-வது கண்ணியில் கீழக்கரை புதுப்பள்ளி முகப்பு திண்ணைக் குறட்டில் நல்லடக்கமாகி இருப்பதாக எவ்வித சந்தேகமுமின்றி கூறப் பட்டிருக்கிறது.

இவ்வாறு இருக்க, காயல்பட்டணத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரிதிங்கள் 13, 14, 15 தேதிகளில் நடைபெற்ற அனைத்துலகு இஸ்லாமிய தமிழ் இலக்கிய 3-வது மாநாட்டில் வெளியான, இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைக் கோவை எனும் நூலில் பக்கம் 36-ல் சையிது அஹ்மது புலவர் என்னும் தலைப்பில் மேலே குறிப்பிடும் ஜமால் முஹம்மது (ஒலி) காயல்பட்டணத்தில் பிறந்தவர்கள் என்றும், காயல்பட்டணத்து புதுப்பள்ளி முகப்பு திண்ணைக்குறட்டில் அடங்கியிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. கட்டுரை ஆசிரியர் 6-வது கண்ணியில் 'காயல் வகுதை நன் நாடே' என்று இருப்பதை காயல்பட்டணத்தில் உள்ளவர்கள் என குறிப்பிடுவதுடன், நூர் நாமாவில் உள்ள ஒவ்வொரு அடியின் ஈற்றிலும் குறிப்பிட்டுள்ளதை ஜமால் முஹம்மது (ஒலி)யைப் புகழ்ந்து கூறுகிறார். 3-வது கண்ணியில்,

பிறந்து கீழக் கரையினில் வாழ்ந்து
பேரின் பான்பதி னாலு இல்மையும்
துறந்த றிந்தஅ றிவுகள் யாவர்க்கும்
சொல்லி தீனை தினம்வள ரச்செய்தோர்

மறந்தும் பொய்மை கனவினி லேனுநல்
வாக்கி லேஅணு காதநல் வள்ளலாம்
சிறந்த பேர்கொள் ஜமாலு முஹம்மதெம்
செம்மல் வாழும் வகுதைநன் நாடே

என வரும் 3-வது கண்ணியை கட்டுரை ஆசிரியர் பார்க்கத் தவறியது வியப்புக்குரியதே!

ஜமால் முஹம்மது (ஒலி)யின் கப்ருக்கு அருகில் தனது மகன் மீரா லெப்பை ஆலிம் (ஒலி) யின் கப்ரும் இருக்கிறது, மீராலெப்பை (ஒலி)க்கு ஆண் சந்ததி இல்லை. ஒன்னுமா என்ற முஹம்மதலி பாத்திமா ஒரே மகளாவார். ஒன்னுமாவின் குமாரர் முஹம்மது காசிம் மரைக்காயர். இவர்களின் மகன் ஹபீப் முஹம்மது மரைக்காயர். இவர்களின் மகன் அப்துர் ரஹீம் மரைக்காயர் ஆவார்.

ஒன்னுமாவின் மகள் வயிற்றுப் பேரர் ஜமால் முஹம்மது மரைக்காயர். இவர்களின் குமாரர் சின்ன மாமா என்ற செய்யிது அபூபக்கர் மரைக்காயர். இவரின் சகோதரியின் மகன் சதக் அப்துல்காதிர் மரைக்காயர். மேற்குறிப்பிட்ட அனைவரும் இரத்தினப் பரீட்சை வர்த்தகர்களாகவும், தனவந்தர்களாகவும் கீழக்கரை மேலத் தெருவில் வாழ்ந்து வருகிறார்கள். ஜமால் முஹம்மது (ஒலி) அவர்கள் சிஷ்தியா தரீக்காவைச் சேர்ந்த வர்கள் என நூர் நாமா பாடல்கள் மூலம் தெரிய வருகிறது. இவர்களின் வபாத்து ஹிஜ்ரி 1234.



கீழக்கரை புதுப்பள்ளி முகப்பு திண்ணைக் குறட்டில் அடங்கப் பட்டிருக்கும் ஜமால் முகம்மது ஒலியின் கப்ரும், அவர்கள் மகன் மீரா லெப்பை ஒலியின் கப்ருமாகும்.

"சின்ன சீறா" பாடிய கீழக்கரை பனீ-அகுமது மரைக்காயர்ப் புலவரின் குமாரரும் "நூறு நாமா" என்னும் பிரபந்தத்தை இயற்றியவருமான செய்யிது அஹ்மதுப் புலவர் அவர்களால் பாடப் பெற்ற

## காகிரி நாட்டு வளம்

கொச்சகக் கலிப்பா

ஆதி யாய்அஹ தாகி அனைத்தும்
அமைத்து நல்லர சாளும் இறைதிரு
சோதி தன்னிற் பிரித்தே அமைத்திற
ஸூலென் றெங்கும் ப்ரசங்கம தாகிய
நீதி வேத மறையின் பொருளதை
நித்தம் ஓதி நிசம்அறி வித்திட
வாதி யான ஜமாலு முஹம்மதாம்
ஆலிம் வாழும் வகுதைநன் நாடே. (1)

சுற்று வாருதி சூழ்புவி தன்னில்
துலக்க மாகவே நல்லறி வானதைக்
கற்று ணர்ந்திட வேண்டுமென் றுள்ளக்
களிப்பு டன்வந்த பேர்களுக் கெல்லாம்
சற்று மேகுறை யின்றிப் படித்துத்
தங்கள் ஊருக்கு வந்தவர் போகவும்
முத்தி யான ஜமாலு முஹம்மது
மூமின் வாழும் வகுதைநன் நாடே (2)

பிறந்து கிழக் கரையினில் வாழ்ந்து
பேரின் பான்பதி னாலு இல்மையும்

துறந்த றிந்தஅ றிவுகள் யாவர்க்கும்
சொல்லி தீனை தினம்வள ரச்செய்தோர்

மறந்தும் பொய்மை கனவினி லேனுநல்
வாக்கி லேஅணு காதநல் வள்ளலாம்

சிறந்த பேர்கொள் ஜமாலு முஹம்மதெம்
செம்மல் வாழும் வகுதைநன் நாடே (3)

அறபு மக்கம் மதீனம் பகுதாது
ஆன ஷாம்உடன் றூம்மிசு றாரும்

நறவு லாம்பொழில் அச்சபை கோவை
நல்ல சீனம் உடன்தில்லி மற்றுமே

பிரபல் யஒலி என்றும்ஆ லிம்என்றும்
பேர்வி ளங்கப்ர சங்கம தாகிய

அறிவு சேர்ந்த ஜமாலு முஹம்மது
ஆலிம் வாழும் வகுதைநன் நாடே, (4)

வான ளாவிய மாமரச் சோலையின்
மந்தி தாவி வருக்கையிற் பாய்ந்திடத்

தேன்க னிஉதிர்ந் தோடு நறாஅதில்
தினையும் சாலி வளர்ந்திடு நாடு

கான்பு குந்து நதிபரந் தோடிக்
கரைஎ லாம்நவ ரத்னம் கொழிக்கும்

வான்உ லாமதி யான ஜமாலு
முஹம்ம தாளும் வகுதைநன் நாடே, (5)

பள்ளி தோறினும் நம்இறை யோனைப்
பணிந்து மாந்தர் படித்தநல் வேதத்தைக்

கிள்ளை கேட்டுப் படித்திடும் சொல்லைக்
கேட்டு நங்கண மேகிளர்ந் தோதிடும்

தள்ளொ ணாச்சொல் இதென்று மூசிபத்துத்
தங்கி டாதகன் றேவிரைந் தோடிடும்

வள்ள லான ஜமாலு முஹம்மது
வாழுங் காயல் வகுதைநன் நாடே. (6)

அன்னம் ஆடை அரிசி கறியுடன்
ஆணி முத்தொடு அதிகநல் ரத்தினம்

நன்ன யம்தரும் தங்கம்பொன் வெள்ளியும்
நாளி டைவிடா தேகொடு வந்துதான்

இன்னல் சேர்ந்திடும் ஆதுலர் தேடி
எடுத்து மேகொடுத் தேகலி போக்கிடும்

சொன்ன மான ஜமாலு முஹம்மது
துய்யோர் வாழும் வகுதைநன் நாடே. (7)

தங்கு வானின் முகில்விரைந் தோடிச்
சமுத்தி ரத்தநல் தன்னை எடுத்துக்கொண்

டெங்கு மேநனி தேக்க வருந்தி
எழுந்து வான்முக டெங்கும் பரந்துநல்

திங்கள் தோறும்மும் மாரிகள் பெய்து
செழும் பயிர்வளர்ந் தோங்கிய நாடு

சங்கை யான ஜமாலு முஹம்மது
தங்கும் காயல்நன் நாடெங்கள் நாடே. (8)

வாசம் கஸ்தூரி வீசும் புயத்து
முஹம்மது ஆல நபிமரு கர்அலி
சீச ரான அசன்பச ரீஎனும்
சிஸ்தி யாகிய நன்முரீ தின்வழி
நேசம் உற்றதி லேவாசில் ஆகிடும்
நிச்சயக் குரு ஆகிய நாதராம்
தேசம் மெய்க்கும் ஜமாலு முஹம்மதெம்
செம்மல் வாழ்காயல் ஊர்எங்கள் ஊரே. (9)

அண்ணல் எங்கள் நபிகிசு றத்தது
ஆயிரத் திரு நூறுடன் முப்பதாம்
எண்ண நாலின் முஹர்றம் ஓர் மூன்றின்
இலங்கும் திங்கள் இஷாவகுத் தானதில்
நண்ணி யவெகு தானிய அற்பிசி
நாளும் பத்துடன் ஒன்பது தன்னிலே
விண்ணி லான ஜமாலு முஹம்மது
வீற்றி ருக்கும் வகுதைநன் நாடே. (10)

வள்ளல் ஆதி ஹலறத்தில் ஆகவும்
மக்கள் சீடரும் மற்றுள பேர்களும்
மெள்ள வேகுளிப் பாட்டிக் கபன் செய்து
வேதம் ஓதித் தொழுவித்து நற்புதுப்
பள்ளித் திண்ணைக் குறட்டில் அடக்கவும்
பாக்கி யப்பல னும்பெருத் தோங்கவும்
தெள்ளி தான ஜமாலு முஹம்மதாம்
செல்வர் வாழ்காயல் ஊர்எங்கள் ஊரே. (11)

கத்தன் தன்புறுக் கான்பாடம் இட்டிடும்
ஹாபி லாம் அப்துல் காதிர்லப் பைஆலிம்
புத்ர ரான முஹம்மதி லெப்பைநற்
பூபன் காதிறு சாமகு மூதொடும்
பத்தி சேர்செய்னுல் ஆபிதீன் என்னும்நல்
பார்த்தி பர்துணை மேல்வெகு நேசமே
நித்த முற்ற ஜமாலு முஹம்மது
நீதர் வாழ்காயல் ஊர்எங்கள் ஊரே. (12)

மஞ்சு வண்கை மகுதுமீ றான்லெப்பை
ஆலிம் உங்கள் மகவும் மருமகன்
செஞ்சொல் இப்பனு வல்செய் தகுமதும்
சீயம் அன்ன முஹம்மதி லெப்பையும்
கொஞ்சு மென்மொழி மாதரு மக்கள்தான்
கூண்ட சீடர்கள் ஆண்பெண் அனைவர்க்கும்
தஞ்ச மான ஜமாலு முஹம்மது
சாகிபு ஆள்காயல் ஊர்எங்கள் ஊரே. (13)

ஆதி நல்இற ஸூல்கிளை வாழ்கவே
அண்ணல் தீன்சுலுத் தான்களும் வாழ்கவே
சோதி தீன்முசு லிம்களும் வாழ்கவே
துய்ய நல்உல மாக்களும் வாழ்கவே
நீதிப் பேரரும் சீடரும் வாழ்கவே
நிச்சயக் கவிசெய் தோனுக் கும்துஆ
ஓதும் எங்கள் ஜமாலு முஹம்ம தெம்
ஒலி விளங்கும் வகுதைநன் நாடே. (14)

---

காகிரி நாட்டு வளம் முற்றிற்று.

# 17. கீழக்கரை தைக்கா ஸாஹிபு என்ற அஷ்ஷெய்கு அப்துல் காதிர் (ஒலி)

தைக்கா ஸாஹிபு (ஒலி) காயல் பட்டணம் கண்ணாப் பிள்ளை அப்பா அவர்களின் மகன். அவர்களது சகோதரியை காயல்பட்டணம் தைக்கா ஸாஹிபு என்ற அஷ்ஷெய்கு அப்துல் காதிர்(ஒலி) அவர்கள் திருமணம் செய்திருந்தார்கள்.

இவர்கள் இளம் வயதில் காயல்பட்டணத்திலிருந்து கீழக்கரை வந்து வள்ளல் சீதக்காதியின் வழித் தோன்றல் அவ்வாகாரு மரைக்காயரின் மகள் சாரா உம்மாவின் மகளாரும், மேலப் பண்டக சாலை லெப்பைத் தம்பி மரைக்காயரின் சகோதரியுமாகிய சேமுநாச்சி உம்மாவை திருமணம் செய் தார்கள். இவர்களுக்கு ஆண் சந்ததி இல்லை. ஐந்து பெண் மக்களை ஈன்றெடுத்தார்கள்.

(1) செய்யது உம்மா. இவரின் கணவர் லெப்பை சாஹிபு மரைக்காயர். இவர் பூவாற்றில் அடங்கியுள்ள நூஹு (ஒலி) யின் பேரர்.

(2) பெரிய அஸ்மா உம்மா. இவரின் கணவர் வாப்பா ஸாஹிபு மரைக்காயர். இவர் வள்ளல் ஹபீப் மரைக்காயரின் மகன்.

(3) உம்மச்சி. இவரின் கணவர் வருசை முஹம்மது தம்பி. இவர் இறந்த பின் உம்மச்சி கைம்பெண்ணாக இருந்தார்.

(4) சாரா உம்மா. இவரின் கணவர் மாப்பிள்ளைலெப்பை ஆலிம். சாரா உம்மாவும் இறந்தபின் கைம்பெண்ணாக இருந்த உம்மச்சியை இரண்டாம் தாரமாக மாப்பிள்ளை லெப்பை ஆலிம் மண்முடித்தார்கள்.

(5) கதீஜா உம்மா என்ற கஸ்ஸா உம்மா. இவரின் கணவர் செய்யது ஹுஸைன் ஸாஹிப். இவர் இறந்தபின் முஹம்மது சதக்கத்துல்லா ஸாஹிபை இரண்டாவதாக மணமுடித்தார்கள்.

கீழக்கரை தைக்கா ஸாஹிபு (ஒலி) அரபியிலும், தமிழிலும் எண்ணிலடங்கா மௌலூதுகளும், தமிழ் பாடல்களும் கோர்வை செய்திருக்கிறார்கள். ஷுஅபுத்தீன் எனும் மெஞ்ஞான தீன்விளக்கம் 40 மாலைகளை அரபுத்தமிழில்பாடியதில் 20 மாலைகளை தமிழில் மொழி பெயர்த்து அச்சிடும் பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது. அவர்கள் அரபியில் கோர்வை செய்தவைகளில் குறிப்பிடத்தக்கது நபிகள் நாயகம் ரசூல் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடிய ஷஃபஇய்யா வெனும் கஸீதாவாகும். இது சதக்கத்துல்லா அப்பா(ஒலி) கோர்வை செய்த வித்ரிய்யாவுக்கு சமமானது என அறிவாளிகளால் போற்றி புகழப்பட்டு வருகின்றது. இதை ஷவ்வால் பிறை மூன்றிலிருந்து பத்து நாட்களுக்கு அவர்கள் காலம் முதல் இன்று வரை அவர்கள் அடக்கமாகியிருக்கும் தைக்காவில் ஓதிவரப்படுகிறது.

கீழக்கரை மத்ரஸதுல் அரூஸியா எனும் தைக்காவை இன்றைக்கு சுமார் 190 ஆண்டுகளுக்கு முன் இவர்களே ஆரம்பித்து தலைமை உஸ்தாதாக இருந்து அவர்களின் அந்திய காலம்வரை நடத்தி வந்தார்கள்.

கீழக்கரை தைக்கா ஸாஹிபு(ஒலி)யின் மதரஸாவில் அவர்களிடம் கல்வி கற்ற சில மேதைகளை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வேலூர் மதரஸாவின் ஸ்தாபகர் அல்லாமா ஹஜ்ரத் அப்துல் வஹ்ஹாப் (ஒலி), அவர்களின் தகப்பனார் அல்லாமா ஆத்தூர் ஹஜ்ரத் அப்துல்காதிர்(ஒலி), அம்மாபட்டணம் ஹஜ்ரத் யூசுப் (ஒலி), குணங்குடி மஸ்தான் ஸாஹிப் என்ற ஹஜ்ரத் சுல்தான் அப்துல் காதிர் (ஒலி), புலவர் நாயகம் என புகழ்ப் பெற்ற ஹஜ்ரத் ஷெய்குனா லெப்பை ஆலிம்(ஒலி), வள்ளல்

ஹபீபு மரைக்காயர், ஹஜ்ரத் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ஒலி), கொழும்பு ஆலிம் ஸாஹிப் எனப் புகழ் பெற்ற ஹஜரத் செய்யிது முஹம்மது ஆலிம்(ஒலி), இவர்கள் தென்னகத்தில் பல நூற்றுக்கணக்கான அரபி மதரஸாக்களை ஏற்படுத்தியவர்கள்.

பல்லாக்கு(ஒலி), புகழ்ப் பெற்ற கல்வத்து நாயகம், ஜல்வத்து நாயகம், இன்னும் இவர்களைப் போன்ற அனேக சூபியாக்களும், ஆரிபீன்களும், ஷெய்குமார்களும், இம்மதரஸத்துல் அரூஸியாவில் தைக்கா ஸாஹிபு(ஒலி)யிடம் கல்வியும், தீட்சையும் (முரீது) பெற்று புகழ் பெற்ற நாதாக்களாக விளங்கினார்கள்.

தைக்கா ஸாஹிபு(ஒலி)யின் வபாத்திற்குப் பின் அவர்களின் மருகர் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் இம்மதரஸாவை மேலும் விரிவுபடுத்தி நடத்தி வந்தார்கள். அவர்களுக்குப்பின் அவர்களின் சந்ததியினர் இன்றும் சிறப்புடன் நடத்தி வருகிறார்கள்.

அரூஸியா அரபி மதரஸாவில் ஆரம்ப முதல் இன்று வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கு, உணவு தங்குமிடம் மற்றும் வசதிகளுடனும் எவ்வித தொய்வுமின்றி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சதக்கத்துல்லா அப்பா(ஒலி)கீழக்கரையில் கல்வி கற்ற தாருல் உலூம் எனும் மத்ரஸாவுக்குப் பின், தென்னகத்தில் மதரஸத்துல் அரூஸியாவே பழம்பெரும் மதரஸாவாகும்.

தைக்கா ஸாஹிபு (ஒலி) தாம் ஏற்படுத்திய மதரஸத்துல் அரூஸியா என்னும் தைக்காவில் நல்லடக்கமாகி இருக்கிறார்கள். அவர்களின் வபாத்து ஹிஜ்ரி 1276.

# 18. மூஸா லெப்பை ஆலிம் (ஒலி)

மூஸா லெப்பை ஆலிம் (ஒலி) சதக்கத்துல்லா அப்பா (ஒலி)யின் மகள் கதீஜா உம்மாவின் வயிற்று மகள் சொர்க்கத்துப் பெண் என்று அழைக்கப் பெற்ற ஆயிஷா நாயகியின் தவப்புதல்வ ராகிய அல்லாமா மலாக்கா அப்துல் காதிர் (ஒலி)யின் திருக்குமார ராகக் காயல்பட்டணத்தில் பிறந்தார்கள்.

இவர்களுடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரிகள் ஆவர். (1) ஆமினா உம்மா (2) ஆயிஷா உம்மா (3) சதக் உம்மா ஆகியோர் ஆவர்.

ஆமினா உம்மாவுக்கு வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் (ஒலி)யையும், ஆயிஷா உம்மாவுக்கு தொண்டி அபூபக்கர் (ஒலி)யின் மகன் லெப்பை கனி(ஒலி)யையும் மணமுடித்து இருவரும் கீழக்கரையில் வசித்து வந்தார்கள். சதக் உம்மா காயல் பட்டணத்தில் தங்கி விட்டார்.

மூஸா லெப்பை ஆலிம் (ஒலி)யும் தமது இரு சகோதரிகளும் சிறு பிராயத்திலேயே கீழக்கரைக்கு வந்து வசித்து வந்தார்கள். இவர்கள் தமிழிலும், அரபி இலக்கியங்களிலும், இஸ்லாமிய மார்க்க சட்டங்களிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள் என கூறப்படுகிறது. மார்க்க அனுஷ்டானங்களில் மிகவும் பேணுதல்களை கடைபிடித்து வந்த காரணத்தால், வரயி (பேணுதல்) மூஸா லெப்பை என பலராலும் போற்றப் பட்டு வந்தார்கள்.

இவர்கள் தனது அந்திய காலம் வரை கீழக்கரையில் தங்கி இறையடியேகி கிழக்குத் தெரு அப்பா பள்ளியில் நல்லடக்க மாகியிருக்கிறார்கள்.

# 19. வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் (ஒலி)

வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் (ஒலி) காயல்பட்டணம் மீரா லெப்பைஆலிம்(ஒலி)யின் தவப்புதல்வர். இவர்கள் மலாக்கா அப்துல் காதிர்(ஒலி)யின் மகள் ஆமினா உம்மா நாயகியை திருமணம் செய்தார்கள். இவர்கள் காயல்பட்டணத்திலிருந்து தன் குடும்பத்துடன் கீழக்கரை வந்து குடியமர்ந்தார்கள்.

இவர்களுக்கு ஒன்பது ஆண் மக்களும், மூன்று பெண் மக்களும் பிறந்தனர். சிறு பிராயத்திலேயே சில குழந்தைகள் இறந்து விட்டன. மீதமுள்ள பிள்ளைகளாவன: (1) முஹம்மது லெப்பை ஆலிம் (2) அல்லாமா மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (3) முஹம்மது அப்துல் காதிர் ஆலிம் (4) அப்துல் கபூர் ஆலிம் ஆகிய நான்கு ஆண் பிள்ளைகளாவார். நால்வரில் முஹம்மது லெப்பைஆலிம் காயல்பட்டணம் சென்று திருமணம் செய்து அங்கு தங்கிவிட்டார்கள்.

இவர்களுக்கு பெண் மக்கள் மூவர். (1) குணங்குடி உம்மா என்ற முஹம்மது பாத்திமா நாயகி. இவர்கள் என் தாயைப் பெற்ற பாட்டி (2) மரியம் உம்மா, இவர்கள் சில காலம் கீழக் கரையில் தங்கியபின் காயல்பட்டணம் திரும்பிச் சென்று விட்டார்கள். (3) கதீஜா உம்மா.

வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் எவ்வித பாவங்களும் செய்யாது பரிசுத்தமாக இருந்ததால் இவர்களின் இதயம் (கல்பு) கபடம்-சூது அற்ற பால்போல் உடைய இதயத்தை உடையவர் களாக இருந்ததால் இவர்கள் வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் என எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

இவர்களின் குடும்பத்தினர்களில் பலர் ஆலிம்களாகவும். ஷெய்குகளாகவும், பெரும் வர்த்தகர்களாகவும், தரும சிந்தனை

உடையவர்களாகவும் கீழக்கரையில் புகழுடன் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்களின் கை எழுத்து அச்சு எழுத்துப் போன்று இருந்த படியால் இவர்களின் திருக்கரத்தால் எழுதப்படும் பரிசுத்த குர்ஆன் ஷரீபை எழுதிக் கேட்டு பல பிரபுக்கள் கேட்டமையால் பலருக்கு பல குர்ஆன் ஷரீபுகளை எழுதிக்கொடுத்து அதற்கு சன்மானங்கள் பெற்று வந்தார்கள். சமீபகாலம் வரை அவர்களின் கையால் எழுதப்பட்ட குர்ஆன் ஷரீபை பலரும் போற்றி புகழ்ந்ததை யாவரும் அறிவர்.

இவர்களின் அந்திய காலம் வரை தம் குடும்பத்துடன் கீழக்கரையில் கண்ணியத்துடன் வாழ்ந்து வபாத்தாகி சதக்கத்துல்லா அப்பா அவர்கள் தர்காவுக்கு மேல்புறம் இருக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கு சொந்தமான அடக்க ஸ்தலத்தில் அடக்கமாகியிருக்கிறார்கள். இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1200. மறைவு ஹிஜ்ரி 1262.



# 20. சீனி முஹம்மது லெப்பை ஆலிம் (ஒலி)

சீனி முஹம்மது லெப்பை ஆலிம் (ஒலி) அதிராம் பட்டினத்திலிருந்து கீழக்கரை வந்து பழைய குத்பா பள்ளி வாசலில் அடக்கமாகியிருக்கும் அஷ்ஷெய்கு மகுதூம் சின்னெயினா (ஒலி) யின் மகன் மகுதூம் இஸ்மாயீல் (ஒலி)யின் சந்ததி. இவர்களின் தந்தை அஷ்ஷெய்கு முஹம்மது இப்ராஹீம் லெப்பை ஆலிம்' அரபியில் பாண்டித்தியம் பெற்றவர்கள். அனேக பைத்துகளும், மௌலூதுகளும் கோர்வை செய்திருக்கிறார்கள். முக்கியமாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெயரில் இயற்றிய மௌலூது ஹகாயிகு மிகவும் பிரபல்யமானது. இது அல்லாமல் மேலும், குத்பு நாயகம் ஷாஹுல் ஹமீது (ஒலி) ஷெய்கு அபூபக்கர் (ஒலி), சீனி அப்பா (ஒலி) இவர்கள் பெயரில் பல மத்தியாக்களைப் பாடியுள்ளார்கள்.

சீனி முஹம்மது லெப்பை ஆலிம்(ஒலி) கீழக்கரையில் ஜும்ஆ பள்ளியில் கீழ்புற முகப்பில் கல்மண்டபத்தில் அடங்கப் பட்டிருக்கும் அவ்வாகாரு மரைக்கார் என்ற அப்துல் காதிர் மரைக்காயர் (ஒலி) பெயரில் பாடியிருக்கும் மத்தியாவில் குத்பா ஓதப்படும் உங்களுடைய பள்ளிவாசல் முகப்பில் அடங்கப் பெற்றிருக்கிறீர்கள் எனவும், கப்ருக்கு வலபுறம், உங்கள் மனைவி ஆயிஷா நாயகியும், கப்ருக்கு இடபுறம் மனைவியின் சகோதரர் ஜமால் நைனா மரைக்காயரும் அடங்கியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

உங்களுடைய பள்ளி வாசல் எனக் கூறியிருப்பதால் அவ்வாகாரு மரைக்காயர் அவர்களே இந்த ஜும்ஆ பள்ளிவாசலைக் கட்டியிருக்கிறார்கள் என்பது ஐயமற தெரிவதுடன் மேலும் பல சான்றுகள் இவர்களின் மத்தியாவில் குறிப்பிடப்படுவதை உறுதிப் படுத்துகின்றன.

சீனி முஹம்மது லெப்பை ஆலிம் அவர்களிடம் அரபி மார்க்கக் கல்வி கற்றவர்களும், முரீதீன்களும் அனேகர் இருந்த

தாகத் தெரிகிறது. இவர்களின் சந்ததியினர் கீழக்கரை நடுத் தெருவில் ஆலிம்களாகவும், காழியாகவும், வர்த்தக மேதைகளாக வும் செல்வமுடன் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் கீழக்கரை பழைய குத்பா பள்ளிக்கு மேல்புறம் தென் வடல் பாதைக்கு மேற்கு, மீன் மார்க்கெட்டுக்கு கிழபுற கோடிக்கு வடக்காக உள்ள அளியில் (ஒதுக்கிடம்) அடக்கமாகியிருக்கிறார்கள். இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1194. இவர்களின் மறைவு ஹிஜ்ரி 1271.

இலங்கை அகமதுக் குட்டிப் புலவரின் இசுவா அம்மானை என்ற பாடலில் சீனி முஹம்மது லெப்பை ஆலிம் (ஒலி) அவர் களைப் பற்றிக் கூறுவதைக் காண்போம்:

தேமருவுஞ் சோலைசெறி தென்காயல் நன்னாட்டில்
காமருவுங் கீழக் கரையா மெனும்பதியில்
மிகுதி யிறையோனை மென்மேற் றவம்புரியும்
மகுதூம் கிளையில் மருவுதலாய் வந்துதித்தார்.

வேத நெறிதவறார் வேண்டுவதெல் லாமுணர்ந்தோர்
ஆதியரு ளிபுறாகீ மாலிமவர் தன்தவத்தால்
மானிலத்திற் தீனின் வழியை விளக்கிவைக்கும்
சீனி முஹம்மதென்னுஞ் சொந்தத்திரு நாமமுள்ள.



# 21. அஷ்ஷெய்கு இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ஒலி)

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ஒலி) வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் (ஒலி) க்கும், மலாக்கா அப்துல் காதிர் (ஒலி)யின் தவப்புதல்வி ஆமினா நாயகிக்கும் ஹிஜ்ரி 1232 முஹர்ரம் பிறை 18-ல் பிறந்தார்கள். இவர்கள் சிறு பாலகனாக இருக்கும் காலத்தில் தனது தாய் தந்தையருடன் காயல்பட்டணத்திலிருந்து கீழக்கரைக்கு வந்து நிரந்தரமாக குடியேறினார்கள்.

சிறு பிராயத்தில் தன் தகப்பனாரிடம் குர்ஆன் ஷரீபை ஓதி பத்தாவது வயதில் மனனம் (ஹிப்லு) செய்து முடித்தார்கள். அதன்பின் கீழக்கரை தைக்கா சாஹிப் (ஒலி) யின் மதரஸாவில் மார்க்கக் கல்வியைக் கற்று சனதும் தீட்சையும் பெற்றார்கள். இவர்கள் அரபி, உருது, பார்ஸி, தமிழ் இவைகளில் சிறந்த புலமை பெற்றவர்களாக இருந்தபடியால் இவர்களை தைக்கா சாஹிபு (ஒலி) தன் கலீபாவாகவும், காதிரியா தரீக்காவின் ஷெய்காகவும் நியமித்தார்கள்.

தைக்கா ஸாஹிபுக்கு ஆண் சந்ததி இல்லை. ஐந்து பெண் மக்கள் பிறந்தனர். (1) செய்யது உம்மா (2) பெரிய அஸ்மா உம்மா (3) உம்மச்சி (4) சாரா உம்மா (5) கதீஜா உம்மா. இந்த ஐவரில் சாரா உம்மாவைத் தவிர மற்ற பெண்கள் நால்வரை மணமுடித்த கணவர்மார்கள் பெருந்தனவந்தர்களாக உள்ளவர்கள். தனது கலீபாவாகிய மாப்பிள்ளை லெப்பை ஆலிம் தேர்ச்சியான ஆலிமாக இருந்தபடியால் அவர்களுக்கு தனது மகள் சாரா உம்மாவை மணமுடித்து வைத்தார்கள். அன்று முதல் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் என்று சிறப்புப் பெயரால் தைக்கா ஸாஹிபு அவர்கள் கூறி அழைத்து வந்ததனால் மற்றவர்களும் அவ்வாறே கூறி அழைத்தனர். மகளை மணமுடித்த மருமகனை 'மாப்பிள்ளை' என அழைப்பது ஊர் வழக்கம். இவர்களின் திருமணத்திற்குப் பின் தைக்கா ஸாஹிபு

வால் நடத்தி வரப்பட்ட மதரஸாவின் பொறுப்புகளை மாப் பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இம்மதரஸாவிற்கு மத்ரஸதுல் அரூஸியா (மாப்பிள்ளையின் மதரஸா) என பெயரும் சூட்டினார்கள். அரூஸ் என்பது அரபி யில் மாப்பிள்ளை.

இம்மதரஸாவை மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஒப்புக் கொண்டு சிறப்பாக நடத்தியதால் முன்பு இருந்ததைவிட பன்மடங்கு விரிவுடன் தென்னகம், இலங்கை, பர்மா, மலாயா முழுவதும் பெயரும் புகழும் பெருகிய காரணத்தால் நூற்றுக் கணக்கான மாணவர்கள் இம்மதரஸாவிற்கு வந்து கல்வி கற்று புகழ் பெற்ற ஆலிம்களானார்கள்.

இம்மதரஸாவில் ஆரம்பமுதல் இன்று வரை (சுமார் 200 வருடகாலம்) கல்வி கற்பவர்களுக்கு உணவும், தங்குமிடமும் மற்றும் வசதிகளும் குறைவில்லாமல் இன்றும் நடைபெற்று வருவது சிறப்புக்குரியதாகும்.

தைக்கா ஸாஹிபின் நான்கு பெண் மக்களை திருமணம் செய்த கணவர்களும் தனவந்தர்களாக இருந்தமையால் அவரவர் மனைவிமார்களுக்கு தங்கக் காசு மாலை செய்து கொடுத்திருந் திருந்தார்கள். இதைக் கண்ணுற்ற மாப்பிளை லெப்பை ஆலிமின் மனைவி சாரா உம்மா, ஒரு தங்கக் காசு மாலை தனக்கும் செய்து தரும்படி பல நாட்களாக கேட்டு வந்தார்கள். காசு மாலையை விட மேலான மாலையை நான் உனக்குத் தருவேன் என வாக்குக் கொடுந்திருந்தார்கள். 40 கண்ணிகள் கொண்ட 'ஹதியா மாலை'யை கோர்வை செய்து இது 'வைர

மாலை' என தன் மனைவி சாரா உம்மாவிடம் கொடுத்தார்கள் அதைப் படித்து அகமகிழ்ந்து சாரா உம்மா திருப்தியுற்றார்கள். மற்ற மாப்பிள்ளைகளெல்லாம் கொடுத்த தங்கக்காசு மாலைகள் இன்று அழிந்து விட்டன. ஆனால் இவர்கள் கோர்வை செய்து கொடுத்த 'ஹதியா மாலை' இன்றும் தென்னாட்டில் அனைவரின் உள்ளங்களிலும் நின்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

அக்காலத்தில் இஸ்லாமிய மார்க்க சட்ட நூல்களை அரபியிலும், அரபுத்தமிழிலும் அச்சிடுவதானால் ஹைதராபாத் அல்லது பம்பாய் சென்று அச்சிடவேண்டிய சிரமத்தைக் கருதி இவர்கள் தனது மதரஸாவின் ஒரு பகுதியில் பெரும் செலவில் 'பரக்காத்தியா லித்தோ பிரஸ்' என்னும் அச்சகக் கூடம் ஒன்றை நிறுவி, அரபி தெரியாத சாதாரண மக்களும் மார்க்கச் சட்டங்களை இலகுவில் தெரிந்து கொள்ள தமிழிலும், அரபுத் தமிழிலும் அச்சிட்டு அளித்தார்கள். இப்புனித மிக்க நற்காரியத்தை செய்த பெருமை இவர்களையே சாரும்.

இவர்கள் இயற்றி அச்சிட்ட நூல்கள் பின் வருமாறு: (1) மங்கானீ (2) பத்ஹுத்தையான் (3) பத்ஹுஸ்ஸலாம் (4) ஙனீமத்துஸ்ஸாலிகீன் (5) பத்ஹுல் மதீன் (6) ஹதியா மாலை (7) தலை பாத்திஹா (8) இமாம் ஹஸன்-ஹுஸைன் (ரலி) அவர்கள் பெயரில் மௌலிது இன்னும் அனேகம் நூல்கள் உள்ளன.

இவர்கள் இமாம் ஹஸன் (ரலி) இமாம் ஹுஸைன் (ரலி) இருவரின் பெயரில் மௌலூது கோர்வை செய்ததால் இவர்களை மாதிஹுஸ் ஸிப்தைன் என அழைத்து வந்தனர்.

இவர்களுக்கு இரு ஆண்மக்களும், மூன்று பெண் மக்களும் உள்ளனர். (1) கல்வத்து நாயகம் என்னும் புகழ் பெற்ற செய்யிது அப்துல் காதிர் (ஒலி) (2) ஜல்வத்து நாயகம் என்னும் ஷாஹுல் ஹமீது (ஒலி). பெண் மக்கள்: (1) மக்கத்து உம்மா என்ற பாத்திமா நாயகி (எனது தந்தையைப் பெற்றவர்கள்) (2) உம்மு ஸல்மா நாயகி (3) பாலாமினா உம்மா நாயகி.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ஒலி)யின் சந்ததிகளில் அனேகர் ஷெய்குகளாகவும், ஆலிம்களாகவும், வர்த்தக மேதைகளாகவும் புகழுடன் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா மற்றும் பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான முரீதீன்கள் உண்டு.

மதரஸதுல் அரூஸியாவில் தனது உஸ்தாது தைக்கா ஸாஹிபு (ஒலி)யின் கப்ருக்குப் பக்கத்தில் நல்லடக்கமாகியுள்ளார்கள். இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1232 முஹர்ரம் பிறை 18 மறைவு ஹிஜ்ரி 1316.

# 22. கல்வத்து நாயகம் எனும் செய்யிது அப்துல் காதிர் [ஒலி]

கல்வத்து நாயகம் இமாம் அஷ்ஷெய்கு மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ஒலி)யின் தவப்புதல்வர். பத்தாவது வயதில் குர்ஆன் ஷரீபு முழுமையும் மனனம் (ஹிப்ளு) செய்து முடித்த பின், நஹ்வு, பிக்ஹு அரபி சட்ட நூல்களை முதலில் தன் தாயைப் பெற்ற பாட்டனார் தைக்கா சாஹிபு (ஒலி) அவர் களிடமும், அதன் பின் மதரஸத்துல் அருஸியாவில் தன் தந்தை யாரிடம் மார்க்க சம்பந்தமான கிதாபுகளை பயின்று தீட்சை முரீது) பெற்று காமிலான ஆலிமானார்கள். தமிழிலும் நல்ல பண்டித்தியம் பெற்றவர்களாக இருந்தார்கள்.

இவர்கள் நாகப்பட்டினம் சென்று வர்த்தகத்தில் ஈடுபட்டு அதில் அதிக லாபம் கிடைத்தமையால், மேலும் ஈடுபட்டால், உலக மாயையில் மூழ்கிவிடுவோமோ என அஞ்சி வர்த்தகத்தை விட்டகன்று, தனது 34-வது வயதில் கல்வத்து எனும் தனிமையில் அமர்ந்து, தன்னிடம் வருபவர்களுக்கு சன்மார்க்க உபதேசங் களைக் கூறி நேர்வழி காட்டி, 33 ஆண்டுகள் தீன் சுடராக விளங்கி, தனது 67 வது வயதில் இறைவனடி சேர்ந்தார்கள். தென்னாட்டில் இவர்களுக்கு பல கலீபாக்களும் எண்ணற்ற முரீதீன்களும் இருந்ததுடன் இன்னும் இருந்து வருகிறார்கள்.

இவர்களால் நிறுவப்பட்ட தரீகத்துல் இலாஹியா எனும் காதிரியா தரீகாவை பல ஊர்களில் கல்வத்துத் தைக்காகளில் முரீதீன்களால் சிறப்புடன் நடத்தி வருவது யாவரும் அறிந்ததே. இவர்கள் பல பைத்துகளும், மர்தியாக்களும் கோர்வை செய்து இருப்பதுடன் உலூமுத்தீன் என்னும் மெய்ஞான நூலை எழுதிய வர்களும் இவர்களே. இவர்களுக்கு பிறந்த சில குழந்தைகள் சிறு வயதில் இறந்துவிட்டதால், ஆயிஷா பீவி எனும் மாதரசி மட்டும் நீண்டகாலம் ஜீவித்திருந்தார்கள்.

இவர்கள் அருஸியா மதரஸாவில் ஓதி வருங்காலை, மாணவர்கள் எல்லோரும் கூடி தொழுவதற்காக இருந்தசமயம் சிறுபாவம்-பெரும் பாவம் செய்யாதவர்களை இமாமாக நின்று தொழும்படி உஸ்தாது கட்டளையிட்டவுடன் யாரும் முன் வரவில்லை. இவர்களே இமாமாக நின்று தொழவைத்தார்கள். குத்புஜ்ஜமான் என இவர்கள் பலராலும் அழைக்கப்பட்டார்கள். தென்னகத்தில்இவர்களின் மகிமை அறியாதார் எவரும் இல்லை எனலாம். கீழக்கரை ஜமால் முகம்மது ஆலிம் புலவரும், சதாவதானி செய்கு தம்பி பாவலரும், காளை ஹஸன் அலி புலவரும் மற்றும் பலரும் இவர்கள் பெயரில் பல மாலைகள் பாடி இவர்களைப் போற்றி புகழ்ந்துள்ளார்கள்.

இவர்களின் தந்தை தாயைப் பெற்ற பாட்டனார் இருவரின் கப்ருக்குப் பக்கத்தில் மத்ரஸத்துல் அருஸியா தைக்காவில் நல்லடக்கமாயிருக்கிறார்கள். இவர்களின் பிறப்பு ஹிஜ்ரி 1263, மறைவு ஹிஜ்ரி 1331.

இவர்கள் எனது தந்தையைப் பெற்ற பாட்டியின் சகோதரர் ஆவார்கள்.

# 23. பல்லாக்கு ஒலி என்ற ஹபீப் முஹம்மது சதக்கத்துல்லாஹ் (ஒலி)

இவர்களின் தாயார் வள்ளல் சீதக்காதியின் இளைய சகோதரரின் பேரரான பட்டத்து சுல்தான் அப்துல் காதிர் மரைக்காயரின் சகோதரி சேமுநாச்சி உம்மாவுக்கும், நூகு சாஹிபு மரைக்காயருக்கும் பிறந்த மகனாவார்கள். இக்குடும்பத்திற்கு சொந்தமாக உள்ள மேல பண்டக சாலை, நடு பண்டக சாலை, கீழப் பண்டகசாலை இவைகளில் ஏறு வாகனமாகப் பல பல்லாக்குகள் இருந்தன. இவர்கள் சிறு வயதில் பல்லாக்குகளில் அதிகமாக போகவர விரும்பியவர்களாக இருந்தமையால், பல்லாக்குத் தம்பி என பலரால் அழைக்கப்பட்டு வந்தார்கள். இவர்கள் கீழக்கரை மதரஸத்துல் அரூஸியாவில் மாப்பிள்ளை லெப்பை ஆலிமிடம் மார்க்கக் கல்வி பயின்றார்கள்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களுடன் மக்கா சென்று புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய பின், பக்தாது, ஷாம் மிஸ்ரு போன்ற பல ஊர்களுக்குச் சென்று பல பெரியோர்களை சந்தித்ததுடன் இறை நேசர்களின் புனித அடக்கஸ்தலங்களையும் தரிசித்து வந்தார்கள்.

இவர்களின் ஜீவிய காலத்தில் தன்னைப் பார்க்க வருபவர்களில் தான் விரும்பியவர்களின் பெயரில் பைத்துகளை இயற்றி கொடுப்பார்கள். வருடத்தில் ஆறு மாதம் தன்னை மறந்த (மஜ்தூபான) நிலையில் இறை தியானத்தில் இருக்கும்போது, அவசியமின்றி யாருடனும் உரையாடமாட்டார்கள். இக்காலங்களில் பால் பழங்கள் அருந்துவார்கள். வருடத்தில் ஓரிரு முறை குளிப்பார்கள். அவர்கள் உடம்பில் எப்பொழுதும் நறுமணம் வீசிக் கொண்டு, மேனி பார்ப்பதற்கு அன்று குளித்தவர்கள் போல் காட்சி தரும்,

தன் ஜீவிய காலத்தில் கீழக்கரையிலும், அக்கம்பக்கத்து ஊர்களிலும் காலரா, வைசூரி போன்ற தொத்து நோய் ஏற்பட்ட காலங்களில் இவர்களை சாய்வு நாற்காலியில் அமர்த்தி வியாதி கண்ட இடங்களில் வலம் வந்தால், உடன் அவ்வியாதிகள் அகன்று சுகம் ஏற்பட்டதை யாவரும் அறிவர்.

மழை பொழியாமல் வறட்சி ஏற்பட்ட காலங்களில் இவர்களை அப்பகுதிகளுக்கு அழைத்துச் சென்று இறைவனிடம் பிரார்த்தனை புரிய வேண்டுவார்கள். உடனே கன மழை பொழிந்து செழிப்புற்றது யாவரும் தெரிந்ததே.

இவர்கள் பெயரால் கீழக்கரையிலும், தொண்டியிலும் வேறு பல ஊர்களிலிலும் இன்றும் விசேஷமாக கந்தூரி நடைபெற்று வருகிறது. இவர்களின் எண்ணிலடங்கா அற்புதங்களும், கராமாத்துக்களும் அனேகம் உண்டும்.

நேரம் கிடைக்கும்போதெல்லாம். பல வலிமார்கள் பேரில் பைத்துகள் எழுதியும் பாடியும் வருவார்கள். பிறப்பு ஹிஜ்ரி 1268 ரபீஉல் அவ்வல் பிறை 12. இறப்பு ஹிஜ்ரி 1360 துல்கயிதா பிறை 21. கீழக்கரையில் மதரஸதுல் அரூஸியா தைக்காவுக்கும் மேல்புறம் சற்று தொலைவில் அவர்களின் சொந்த இடத்தில் நல்லடக்கமாகியுள்ளார்கள்.

# 24. செய்கு அலாவுதீன் (ஒலி)

நா. செய்கு அலாவுதீன் (ஒலி) 1890-ல் பிறந்தார். தந்தையார் பெயர் நாகூரான். இலங்கை புத்தலத்துக்கு வடக்கே 16 மைல் தொலைவில் பொன் பரப்பியில் அமைந்துள்ள ஒரு கிராமம் கருத்தீவு. கரைத்தீவு என்றும் வழங்கப்படும்.

இவர் இளமைக் காலத்தில் பெற்றோரிடம் மனஸ்தாபப் பட்டு காட்டிலே அலைந்து திரிந்தார். அதன் பின்னர் நினைத் தவுடன் பாடல் இயற்றும் ஆற்றல் பெற்றார். வரகவி அல்லது கடாக்ஷ கவி என்றும் அழைக்கப்பட்டார்.

செய்கு அலாவுதீன் (ஒலி) இளம் வயதிலேயே இரு கண்ணையும் இழந்தவர். இவர் கீழக்கரை பல்லாக்கு வலியுல்லாஹ் பெயரில் பாடிய கீர்த்தனை.

கண்ணிகள்

பல்லாக்கொலியுல்லா நாயகமே
உங்கள் பாதாரம் நம்பினேன் பேர் ஜெயமே
நல்வாக்கருளும் என் தாயகமே
திருஞான தயாநிதி தூயகமே

தொகையறா

தவராஜ சிங்கமே சச்சிதானந்தமே
சற்குரு பதம் தங்கமே
சாலோப சாமீப சாரூப சாயுட்ச்ய
சது மாமறை பொருள் விளங்குமே

கண்ணிகள்

ஆளைத் தெரிந்திடும் காரணமே
திரு வாதி ரஹ்மானின் பூரணமே
கீழக்கரை நகர் ஆரணமே
என்னில் கிருபை செய்தாளும்
தராதரமே (பல்லாக்)

தொகையறா

மங்காத மாணிக்கமே மாசற்ற தீபமே
மதிக் கொணாத ஆணி முத்தே
மக்கள் பெரியாருடன் சொர்க்க வழிகாட்டவே
மாநிலத்தோர் புகழும் வித்தே

கண்ணிகள்

சாகரம் சூழ் புவியின் தீன் வழியே
யார்க்கும் தந்து கதி பெற செய்விழியே
செய் கலாவுதீன் பா மொழியே
எந்தன் சொந்த மனைக் குற்றே காண் விழியே
(பல்லாக்)



# 25. ஜல்வத்து நாயகம் என்ற ஷாஹுல் ஹமீது ஆலிம் (ஒலி)

ஜல்வத்து நாயகம் இமாம் அஷ்ஷெய்கு மாதிஹுர்ரஸுல் ஸிப்பைதன் மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் இரண்டாவது புதல்வரும் கல்வத்து நாயகத்தின் இளைய சகோதரருமாவர். தம் தந்தையாரிடம் மார்க்கக் கல்வியும், தீட்சையும் (முரீது) பெற்றார்கள். மார்க்கத்தில் எவ்வளவு பற்றுதலாக இருந்தார்களோ அதே போன்று வர்த்தகத்திலும் திறமை உள்ளவராக விளங்கினர். 250 ஆண்டுகளுக்கு முன் டச்சுக்காரர்களால் கீழக்கரையில் கட்டப்பட்ட பிரமாண்டமான வர்த்தக பண்டக சாலை இவர்களுக்கு சொந்தமானது. அப்பண்டக சாலையை நடு பண்டக சாலை என அழைப்பர். மதுரையிலும் இவர்களுக்கு சொந்தமான பண்டக சாலைகள் இருந்தன. இவ்வுலக வாழ்க்கையிலும், ஆத்மீக வாழ்க்கையிலும் சிறந்தவராக இருந்தனர். இவர்கள் குர்ஆனை மனனம் (ஹாஃபிள்) உடையவர்களாக இருந்ததினால் தஹஜ்ஜத்து தொழுகைக்குப் பின் இரவு படுக்கும் வரை குர்ஆன் ஷரீபு 30 ஜுஸ்வையும் பாராயணம் செய்து வந்தனர்.

இவர்கள் தமது தந்தையைப் போல் காதிரிய்யா தரீகாவின் ஷெய்காக விளங்கி வந்ததனால் இந்தியா, இலங்கை, பர்மா, மலாயா ஆகிய நாடுகளிலும் எண்ணிலடங்கா முரீதீன்கள் உண்டு. இவர்களின் தகப்பனார் நடத்திவந்த மத்ரஸத்துல் அரூஸியாவை திறம்பட நடத்தி வந்தார்கள்.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற திருமக்காவுக்கு சென்ற சமயம் ஆண்டவனின் கட்டளைப்படி அவன் அளவில் சென்று விட்டார்கள். அவர்களின் புனித உடல் மக்கத்தில் ஜன்னத்துல் முஅல்லாவில் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. பிறப்பு ஹிஜ்ரி 1271. வபாத்து ஹிஜ்ரி 1339.

# 26. தைக்கா ஷெய்கு நாயகம் என்ற அஹ்மது அப்துல் காதிர் ஆலிம் (ஒலி)

அஷ்ஷெய்கு இமாம் மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் தவப் புதல்வர் ஜல்வத்து நாயகம் ஷாஹுல் ஹமீது ஆலிம் (ஒலி) யின் இரண்டாவது புதல்வர். சிறிய வயதில் குர்ஆன் முழுவதையும் மனனம் செய்து முடித்ததும் தமது பெரிய தந்தை கல்வத்து நாயகம் அவர்களிடம் மார்க்கக் கல்வி பயின்றார்கள். தமது 18-வது வயதில் மார்க்க சம்பந்தமான மேற்படிப்புக்காக வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தில் அல்லாமா அப்துல் வஹ்ஹாப் ஹஜ்ரத்திடம் கல்வி கற்று, தீட்சையும் பெற்றார்கள்.

அதன்பின் பொதக்குடி மத்ரஸத்துந் நூரிய்யாவில் அல்லாமா அப்துல்கரீம் ஹஜ்ரத் அவர்களிடமும் மார்க்க மேல்படிப்புகளை யும் கற்று மாமேதையானார்கள். தம் தகப்பனாருக்குச் சொந்த மான நடுப் பண்டக சாலையில் வர்த்தகம் நடந்தி வந்த போது இவர்களை வர்த்தகத்தில் ஈடுபடும்படி முயற்சித்தும், வர்த்தகத்தில் ஈடுபட மனமில்லாமல் அரூஸியா தைக்காவில் மார்க்க சட்டம் பயிலும் மாணவர்களுக்கு கல்வி புகட்டி வந்தார்கள். இதையறிந்த இவர்களின் தந்தை தம் முன்னோர் களால் நடத்தப்பட்டு வரும் மதரஸதுல் அரூஸியாவின் பொறுப்பை இவர்களிடம் ஒப்படைத்து நடத்தி வரும்படி செய்தார்கள். மதரஸாவில் பல உஸ்தாதுகள் இருந்தும் தம் இறுதிக் காலம் வரை இவர்களை தலைமை நாஜிராக இருந்து, ஓதவருபவர்களுக்கு உணவு, உடை முதலானவைகளைத் தம் சொந்த செலவிலேயே கொடுத்து, காலையில் ஹிஸ்பும்,

வெள்ளி இரவு ராதீபு ஜலாலியாவும், திங்கள் இரவு ராத்திபுல் ஹத்தாதும் இவர்களே இருந்து தவறாது நடத்தி வந்தார்கள். தென்னாட்டு ஜமாஅத்துல் உலமா சபைக்குத் தமது ஆயுள் வரை தலைவராக இருந்து வந்ததுடன் இவர்களின் மூதாதையர் களைப் போல் காதிரியா தரீக்கின் ஷெய்காகவும் இருந்து வந் தார்கள். இவர்களுக்குத் தென்னகம், இலங்கை, மலேசியா, பர்மா ஆகிய நாடுகளில் அனேக முரீதீன்கள் இன்றும் இருந்து வருகிறார்கள். பிறப்பு கி. பி. 1891. மறைவு கி. பி. 1976.

# 27. மகானந்த பாவா எனப் புகழ் பெற்று விளங்கிய முஹம்மது அப்துல் காதிர் (ஒலி)

மக்தூம் சின்னெயினா (ஒலி) அவர்களின் வழித் தோன்றல் காழி கியாதுத்தீன் அவர்களின் பேரன் ஆவார்கள். இவர்களைக் கண்ணாடி ஒளலியா, திருப்பத்தூர் ஒளலியா எனக் கூறுவர். இவரின் குடும்பத்தினர்களே பாரம்பரியமாக டவுன் காழிகளாக இருந்து வருகிறார்கள்.

அரபி மார்க்கக் கல்வியில் தேர்ச்சி பெற்ற ஆலிமாவார்கள். இவர்கள் சிறிய வயதினராகயிருக்கும்போது, ஒரு பெரும் முஸ்லிம் ஜமாஅத்து கூட்டத்தில் இவர்களை இமாமாக இருந்து தொழுகையை நடத்தி வைக்கும்படி கல்வத்து நாயகம் பணித்ததாக என்னிடம் கூறியுள்ளார்கள்.

மதுரையில் ஒரு வணக்க ஸ்தலம் ஏற்படுத்தித் தம்மைப் பார்க்க வரும் சகல மதத்தினருக்கும் ஏக இறைக் கொள்கையை உபதேசித்து நல்லாசி கூறி வந்தார்கள். இவர்களிடம் தீட்சை பெற்ற பல பக்தர்களும், முரீதீன்களும் இன்றும் இருந்து வருகின்றனர். கீழக்கரை அரூஸியா தைக்கா வழியாக செய்யிது அப்பா தர்காவுக்குப் போகும் வழியில் இவர்களின் சந்ததியினரின் சொந்த இடத்தில் அழகு பொருந்திய தர்காவில் அடக்கமாகியிருக்கிறார்கள்.

# கீழக்கரையில் வாழ்ந்து மறைந்த மாதர் குல இறைநேசச் செல்வியர்

## 28. ஆமினா உம்மா

மாதிஹுர் ரசூல் சதக்கத்துல்லா அப்பா(ஒலி)யின் மகள் கதீஜா உம்மாவின் பேத்தி சொர்க்கத்துப் பெண் எனப் புகழ் பெற்ற ஆயிஷா உம்மாவின் மகன் மலாக்கா அப்துல் காதிர் (ஒலி)யின் மகளும், வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் (ஒலி)யின் மனைவியும், மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் தாயுமாவார்கள்.

ஆமினா உம்மா, ஒழுக்க சீலமுடைய சூபியாக இருந்ததாகக் கூறுவர். மேலும் எந்நேரமும் இறை ஞாபகமும், திக்ரும் உலக வாழ்வில் பற்றற்றவர்கள் எனவும், கஷ்பு, கறாமாத்து உடைய வர்கள் என்றும் கூறுவர்.

தமது கணவர் வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிமுடன் குடும்ப சகிதம் காயல்பட்டணத்திலிருந்து கீழக்கரையில் நிரந்தர மாகத் தங்கி வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் சந்ததிகளில் அனேகர் வலிமார்களாகவும், ஆலிம்களாகவும், பெரும் தனவந்தர் களாகவும் கீழக்கரையில் சிறப்புடன் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

ஆமினா உம்மா அவர்களின் அடக்கஸ்தலம் கீழக்கரை அரூஸியர் தைக்கா மதரஸாவுக்கு வட புறத்தில் அமைந்துள்ளது.

# 29. ஆயிஷா உம்மா

ஆயிஷா உம்மா மேற்குறிப்பிட்ட ஆமினா உம்மாவின் சகோதரி. சிறிய வயதில் காயல்பட்டணத்திலிருந்து கீழக்கரை வந்து தம் சகோதரியுடன் வாழ்ந்து வந்தார்கள். தொண்டி ஷெய்கு அபூபக்கர் (ஒலி)யின் மகன் லெப்பை கனி (ஒலி) ஆயிஷா உம்மாவைத் திருமணம் செய்தனர். இவர்களின் புதல்விகள் சாரா உம்மா, பாத்திமா உம்மா என்ற இரு சகோதரிகளில் ஒருவர் இறந்தபின் மற்றவரை கீழக்கரை கொடை வள்ளல் ஹபீபு அரசர் என புகழ்பெற்ற ஹபீபு மரைக்காயர் விவாகம் செய்திருந்தார்கள். ஆயிஷா உம்மாவும் கஷ்பு கறாமாத்து உடைய சூபியாக இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. தமது கணவர் லெப்பைக் கனி (ஒலி) கீழக்கரை கிழக்குத் தெரு, அப்பா பள்ளி வாசலின் தென்புறத்தில் அடக்கமாகியிருக்கும் சமாதிக்கு அருகில் ஆயிஷா உம்மா அடக்கமாகி இருக்கிறார்கள்.

# 30. குணங்குடி உம்மா என்ற முஹம்மது பாத்திமா நாயகி

சதக்கத்துல்லா அப்பாவின் பேத்தி சொர்க்கத்துப் பெண் ஆயிஷா நாயகியின் தவப்புதல்வர். மலாக்கா அப்துல் காதிர் (ஒலி)யின் மகள் ஆமினா உம்மா, வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிம் (ஒலி) ஆகியோரின் மகளும், மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ஒலி)யின் இளைய சகோதரியுமாவார்கள். குணங்குடி உம்மா என்ற முஹம்மது பாத்திமா நாயகி சிறந்த குணம் உள்ள தவசீலராக இருந்ததினால் குணங்குடி உம்மாவென அழைக்கப் பட்டு வந்தார்கள்.

இளம் பருவத்தில் தம் தந்தை வெள்ளை அஹ்மது லெப்பை ஆலிமிடமும் கல்விக்கடலாகிய கீழக்கரை தைக்கா சாஹிபுவிட மும் மார்க்கக் கல்வியைக் கற்று ஷரீஅத் சட்டதிட்டங்களில் நல்ல தேர்ச்சி உடையவர்களாக இருந்தார்கள். காயல்பட்ட ணம் புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் நயினார் லெப்பை ஆலிமும், குணங்குடி மஸ்தான் ஸாஹிப் என்ற சுல்தான் அப்துல் காதிர் ஆலிமும் குணங்குடி உம்மா கல்வி கற்ற காலத்திலேயே கீழக்கரை அரூஸியா தைக்காவில் தைக்கா ஸாஹிபு (ஒலி)யிடம் கல்வி கற்றதாகக் குணங்குடி உம்மா என்னிடம் பல முறை கூறியிருக்கிறார்கள்.

குணங்குடி உம்மா சூபியாகவும், விலாயத்து உடையவர் களாகவும் இருந்தார்கள். அவர்களின் ஜீவிய காலத்தில் பலர் குடும்ப வாழ்க்கைகளிலும், வழக்கு வம்புகளிலும் அல்லலுற்றவர் களும், பாய்மரக் கப்பல்களில் சென்றவர்கள் திசைமாறித் தகவல் இல்லாமல் தவிக்கும் குடும்பத்தினர்களும் இவர்களிடம் வந்து இறைவனிடம் பிரார்த்திக்கும்படி முறையிடுவார்கள். குணங்குடி உம்மா அதற்கு இசைந்து இரவில் விழித்திருந்து இறைவனிடம்

அல்லலுற்றவர்களின் துயர் நீங்க 'துஆ' கேட்பார்கள். அவர்களின் பிரார்த்தனை இறைவன் பால் அங்கீகரிக்கப்பட்டு, சந்தோஷமான செய்தி கிடைத்தும் பலர் நன்றி தெரிவிப்பதற்காக இவர்களிடம் வருவதை நான் நேரில் பல முறை பார்த்திருக்கிறேன்.

எனக்கு இளம் வயதில் புகட்டிய அறிவுரைகளும் ஞான உபதேசங்களும் இன்றும் எனது இதயத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளதை என்னால் என்றும் மறக்க வியலாது. இவர்கள் எனது தாயார் மைமூன் உம்மாவைப் பெற்ற பாட்டியாவார்கள்.

குணங்குடி உம்மாவின் சந்ததியினர் பெரும் ஆலிம்களாகவும், வர்த்தகர்களாகவும் தனவந்தர்களாகவும் சீரும் சிறப்புடன் கீழக்கரையில் இன்றும் புகழுடன் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் 95-வது வயதில் 1918-ல் இறையின் பக்கம் எய்தினார்கள். கீழக்கரை அருஸியா தைக்காவுக்கு வடபுறம், தனது தாயாரின் சமாதிக்குப் பக்கத்தில் அடக்கமாகியிருக்கிறார்கள்.



# 31. மக்கத்து உம்மா என்ற செய்யிது பாத்திமா நாயகி

மக்கத்து உம்மா என்ற செய்யிது பாத்திமா நாயகி தென்னாட்டில் காதிரியா தரீக்காவின் ஷெய்காகிய மாதிஹுஸ் ஸிப்தைன் மாப்பிள்ளை லெப்பை(ஒலி)யின் மூத்த மகளும் கல்வத்து நாயகம், ஜல்வத்து நாயகம் இருவரின் சகோதரியுமாவார்கள். வள்ளல் சீதக்காதியின் வழித்தோன்றல் பட்டத்து வள்ளல் சுல்தான் அப்துல்காதிர் மரைக்காயரின் குமாரர், பட்டத்து லெப்பை ஸாஹிப் மரைக்காயரின் பத்தினியும், எனது தந்தை அல்ஹாஜ் அதாவுல்லா ஸாஹிப் மரைக்காயரை ஈன்றெடுத்த பாட்டியுமார்கள்.

குர்ஆன் ஷரீபு முழுமையும் ஒன்பது வயதில் மனனம் (ஹிப்லு) செய்தபின், தம் தகப்பனார் மாப்பிள்ளை லெப்பை ஆலிமிடமும், தம் தாயைப் பெற்ற பாட்டனார் கீழக்கரை தைக்கா ஸாஹிபு அவர்களிடமும் அரபியில் நஹுவு, பிக்ஹு ஷரஹு மார்க்க சட்டங்களைக் கற்று தேர்ச்சியான ஆலிமா ஆனார்கள். அரபிப் பாஷையில் சரளமாக பேசும் தன்மையை உடையவர்களாக இருந்தார்கள்.

தம் இல்லத்தில் ஒரு சிறிய அரபி மதரஸாவை ஏற்படுத்தி சிறுவர்களுக்கும், மற்றவர்களுக்கும் கல்வியை கற்பித்து வந்தார்கள். மத்ரஸத்துல் அரூஸியாவில் தமது தகப்பனாரிடம் கல்வி பயிலும் மாணவர்களின் மார்க்க சந்தேகங்களை இவர்களிடம் கேட்டுத் தெளிவுற்றதை பலர் வாயிலாக நான் கேள்வியுற்றுள்ளேன்.

தஹஜ்ஜத்துத் தொழுகையை களா இல்லாமல் தொழுது வந்ததுடன், குர்ஆனை இரவு பகல் ஒரு நாளையில் முப்பது ஜுஸ்வையும் பாராயணம் செய்து வந்ததாகவும், எனது தந்தையும் மற்றவர்களும் கூறக் கேட்டிருக்கிறேன்.

புனித ஹஜ்கடமையை நிறைவேற்றுவதற்காகத் தமது மகனும், எனது தந்தையுமான அதாவுல்லா ஹாஜி மரைக்காயர் அவர்களின் 16-வது வயது பூர்த்தியானதும் அழைத்துக் கொண்டு, கி. பி. 1885-ல் புனித மக்கா சென்று ஹஜ் செய்து மேலும் பல வருடங்கள் மக்காவில் தங்கி ஹஜ் கடமைகளை நிறைவேற்றி விட்டு தாயகம் திரும்பினார்கள். மக்காவில் பல ஆண்டுகள் தங்கி விட்டு வந்ததால் இவர்கள் மக்கத்து உம்மா வென யாவராலும் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

மக்கத்தில் தங்கியிருக்கும் நாளில் அங்குள்ள மக்களுடன் அரபி பாஷையில் சரளமாகப் பேசி வந்ததாக என் தகப்பனார் வாயிலாகக் கேள்வியுற்றுள்ளேன்.

தமது 85-வது வயது வரை மக்களுக்கு மார்க்கப் பணிபுரிந்து கி. பி. 1901-ல் அல்லாஹ்வின் பக்கம் சுவனபதி சென்றடைந் தார்கள்.

# 32. கருத்த உம்மா என்ற முஹம்மது உம்மா

சின்ன சீறா பாடிய் கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயர் ரின் தவப்புதல்வர் நூறு நாமா பாடிய செய்ய துஅஹ்மது மரைக்காயரின் குமாரர் செய்யிது முஹம்மது மரைக்காயரின் புதல்வியும், ஹலரத்து மாப்பிள்ளை லெப்பை ஆலிமின் இளைய சகோதரர் முஹம்மது அப்துல் காதிர் ஆலிமின் மனைவியுமா வார்கள்.

எதையும் கருத்துப்பட இலக்கிய நயத்துடன் பேசக் கூடிய வர்களாக இருந்தமையால் இவர்களை கருத்த உம்மா என அழைத்து வந்தனர். மேலும், ஆழ்ந்த மார்க்க பக்தி உடையவர் களாக இருந்து வந்தார்கள். புனித ஹஜ் கடமையை உரிய காலத்தில் நிறைவேற்றிய பின், தமது சொந்த இடத்திலே ஒரு மதரஸாவை ஏற்படுத்தி சிறார்களுக்குக் குர்ஆன் மற்றும் மார்க்க சட்டங்களை போதித்து வந்தார்கள். இவர்களுக்கு செய்யிது முஹம்மது ஆலிம், ஜமால் முஹம்மது ஆலிம் என இரு மக்கள் இருந்தனர். கி.பி. 1924-ல் 87-வது வயதில் இறைவன் அளவில் சேர்ந்தார்கள்.

# 33. ஆமினாஉம்மா

கீழக்கரை தைக்கா ஸாஹிபு(ஒலி)யின் மகள் செய்யிது உம்மாவுக்கும், பூவாற்றில் அடக்கமாகியிருக்கும் பெரியநூஹ் (ஒலி)யின் பேரர்-வாணிபத்தில் புகழ் பெற்று விளங்கிய லெப்பை ஸாஹிபு மரைக்காயர் என்ற முஹம்மது யூசுப் மரைக்காயரின் பேத்தியும் மெஞ்ஞான ஜோதி இறைநேசர் கல்வத்து நாயகத்தின் பெரிய தாயாரின் புத்திரியுமாவார்கள்.

ஆமினா உம்மாவுக்குச் சிறுவயதில் திருமணமாகி, ஒரு பெண் மகவைப் பெற்றபின் இரண்டாவது ஆண்டில் விதவையாகி விட்டார்கள். பெற்றோர்கள் இவர்களுக்கு மறு விவாகம் செய்து வைக்க முயற்சித்தும் மறுத்து விட்டார்கள்.

விதவையான பின் உலக வாழ்வை வெறுத்து சூபியாகி இறை தியானத்தில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டிருப்பதையறிந்த கல்வத்து நாயகம் தமது தங்கை முறையாகிய ஆமினா உம்மாவுக்கு ஞானோபதேசங்களைப் புகட்டி தமக்குப்பணிவிடை செய்து கொண்டு சிஷ்யையாக இருக்கும்படி பணித்தார்கள்.

ஆமினா உம்மா எந்தப் பாடல்களையும் மூன்று முறை செவியுற்றுக் கேட்டால் மனனமாகிவிடும் சக்தியை இறைவன் இவர்களுக்கு அளித்திருந்தான். பல பைத்துகளும், ஞானப் பாடல்களும், திருக்குறளும் அப்படியே மனனமாகி ஒப்பிப்பதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

எங்களின் இல்லத்திற்கு அண்மையில் அவர்கள் வசித்து வந்ததனால், எனது சிறு வயதில் ஆமினா உம்மா அவர்களிடம் பல அறிவுரைகளை கற்றது இன்றும் என் மனதில் பதிந்திருக்கிறது. இக்காலத்தில் இப்பேர்ப்பட்ட பெண்மணிகளைக் காண்பது அரிது. இவர்கள் சுமார் 80-வது வயதில் இறையடி சேர்ந்து விட்டார்கள். பிறப்பு இறப்பு தேதி தெரியவில்லை.

# 34. சூபி செய்யிது ஆசியா உம்மா

செய்யிது ஆசிரியா உம்மா வள்ளல் ஹபீபு மரைக்காயரின் சகோதரர், நடுப் பண்டக சாலை மரைக்காயர் என்ற அப்துல் காதிர் மரைக்காயரின் மகன் முஹம்மது காசிம் மரைக்காயர் அவர்களின் மகன் ஹபீபு மரைக்காயரின் தவப்புதல்வி ஆவார்கள்.

தாய்வழியில் வள்ளல் ஹபீபு மரைக்காயரின் மகன் வாப்பா ஸாஹிபு மரைக்காயரின் மகள் முஹம்மது அபூபக்கர் நாச்சி உம்மாவின் மகள் உம்மு ஹபீபு உம்மாவின் மகள் ஆவார்கள்.

சிறுவயதிலேயே மெய்ஞ்ஞானப்பாடல்கள், முனாஜாத்துக்கள் இவைகளை சதா பாடிய வண்ணம் இருப்பார்கள். குத்புஜ்ஜமான் சூபி கல்வத்து நாயகம் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்து வந்ததுடன், அவர்களின் (முரீதாகவும்) சிஷ்யையாகவும் இருந்துவந்தனர். தம் வீட்டின் மேல் மாடியில் தனித்திருந்து பாமாலைகளையும், இறை வேட்டல்களையும் இயற்றுவதில் ஈடுபட்டிருந்ததால் இவர்கள் மேல் வீட்டு உம்மா என மக்களால் அழைக்கப்பட்டு வந்தார்கள்.

இவர்கள் இயற்றிய பாடல்கள் அனேகம் உண்டு.

இவர்கள் பாடியுள்ள அல்லாஹ்-ரசூல் மற்றும் இறை நேசர்களாகிய முஹ்யித்தீன் ஆண்டகை, நாகூர் ஷாஹுல்ஹமீது ஆண்டகை, சதக்கத்துல்லா அப்பா (ஒலி) தொண்டி அபூபக்கர் (ஒலி), கல்வத்து நாயகம் (ஒலி), பல்லாக்கு (ஒலி) வள்ளல் ஹபீபு மரைக்காயர் (ஒலி). இன்னும் இவர்கள் போன்ற அனேக ஒலிமார்கள். குத்புமார்கள், சூபியாக்கள் பெயர்களில் மெய்ஞ்ஞான தீப இரத்தினம் என்னும் தலைப்பில், 63 பாடல்களும், மாலிகா இரத்தினம் என்னும் தலைப்பில் 22 பாடல்களும் அரபுத் தமிழில் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன.

தென்னாட்டில் வாழ்ந்த முஸ்லிம் சூபி பெண்மணிகளுள் பெருமளவில் மெய்ஞ்ஞானப் பாடல்களை பாடிய பெருமை சூபி செய்யிது ஆசியா உம்மா அவர்களையே சாரும் என்பதில் சந்தேகமில்லை.

அரபுத் தமிழில் இருந்த பாடல்களில் சிலவற்றைத் தமிழில் அச்சிட்ட பாக்கியத்தை அல்லாஹ் எனக்கு தந்தமைக்கு, நன்றி செலுத்துகிறேன்.

கி. பி. 1865-ல் பிறந்த சூபி செய்யிது ஆசியா உம்மா அவர்கள் கி. பி. 1947-ல் இறையடி சேர்ந்தார்கள். வள்ளல் ஹபீபு மரைக்காயரின் சமாதிக்குப் பக்கத்தில் இவர்களின் பூதஉடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

# கீழக்கரையில் வாழ்ந்த, வாழும் புலவர்களும் அவர்கள் இயற்றிய காப்பியங்களும்

## 35. பல்சந்த மாலை :

பல்சந்த மாலை இன்றைக்குஎண்ணூறு ஆண்டுகளுக்கு முன் பாகக் கீழக்கரையில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் அரசனைப் புகழ்ந்து பாடியதாக ஆய்வாளர்களின் கருத்துகளிலிருந்து அறிய படுகிறது, அதற்கு சான்றாக கீழ்க்காணும் பாடல்களில் வச்சிர நாடன்,' 'கலுபாவழி வரும்', 'வகுதாபுரி', 'அஞ்சு வண்ணத்தார்,

'வானது நாணக் கொடையா லுலகை வளர்த்தருளும்

சோனகர் வாழும் செழும்பொழில் சூழ்அந்து பார்அனையார்,

இவ்வாறெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வானம் வெட்கப்படும் அளவிற்கு சோனகர்கள் கொடை கொடுப்பவர்கள் என்றும், வச்சிரநாடு, வகுதை, அந்துபார் என குறிப்பிடப்படுவது கீழக்கரை என்றும் வரலாற்று ஆசிரி யர்கள் கூறுகின்றனர். அக்கீழக்கரையைத் தலைநகராகக் கொண்டு செங்கோல் செலுத்திய சுல்தான் தகியுத்தீன் இதே காலத்தில் தான் கீழக்கரையில் வாழ்ந்துள்ளார். சுல்தான் தகியுத்தீன் ஐந்து பாண்டியர்களுடன் ஆறாம் பாண்டியனாக இருந்தார் என்றும், தென்பதிகடலாதிபதியாகவும், (மர்ஜபானே ஹிந்த்) இருந்தார் என சீதக்காதி திருமண வாழ்த்தில் கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலில் நமக்குக் கிடைத்திருப்பது எட்டு பாடல்கள் மட்டுமே. மேலும் சில பாடல்கள் கிடைத்திருந்தால் கீழக்கரை யின் சிறப்புகளையும், இப்பாடலைப் பாடியவர் இன்னார் என் பதையும் நாம் அறிந்திருக்க இயலும், இப்பாடலைப் பாடியவர் கீழக்கரையைச் சேர்ந்தவர் என நம்பப்படுகிறது.

# பல்சந்த மாலைப் பாடல்கள்

## 1. உயிரென வியத்தல்

கலைமதி வாய்மைக் கலுபா வழிவருங் கற்பமைந்த
தலைமைய ரேழ்பெருந் தேரங்கமும் பெற்ற நந்தசிர
மலையன மாமதில் வச்சிரநா டன்ன வாணுதல்தன்
முலையிணை தோய்ந்த தெல்லாம்கனவே என்று
முன்னுவனே

## 2. கண்புதைத்தானுக்குத் தலைமகன் கூறுவது

நாட்டம் புதைக்கின்ற தென்நீ மடந்தை நவகண்டமேல்
ஈட்டம் புகழ்வின்னன் மேவார் எனஇங்ஙன் யான் வருந்த
வாட்டம் பயின்றாங் ககிலின் குழம்பணிந்தாக மெங்கும்
வேட்டந் தெரிகின்ற கொங்கைகள் என்னைமிகை செய்தவே

## 3. தழைகொண்டு இரந்து நிற்றல்

நகுதா மரைமலர் சூழ்வாவிசூழ் வச்ர நாடர்தங்கள்
வகுதா புரியன்ன வாணுதலீர் மற்ற வார்தழையும்
மிகுநாண் மலர்களும் கொண்மின்கள் கொள்ளா
விடின்மதுவந்
தொகுகாமன் ஐங்கணை யாலெம தாவி துவக்குணுமே,

## 4. வேழம் வினாதல்

செம்முக மானதர் செங்குங்குமப் புயர் சீர்சிறந்த
மைம்மலி வாசப்பொழில் வாய் மதியன்ன வாணுதலீர்
மும்மத மாரி பொழியப் பொழிமுகில் போல்முழங்கிக்
கைம்மலை தான்வரக் கண்டதுண் டோநும் கடி புனத்தே

## 5. தினைமுதிர் வுரைத்தல்

இயவன ராசன் கலுபதி தாமுதல் எண்ணவந்தோர்
அயன்மிகு தானையர் அஞ்சுவன் னத்தர் அஞ்சலென்னாக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனங் காய்கொய்து போம்
பயன்விளை வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே.

## 6. ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி

பிறையார் நறுநுதற் பேதைதன் காரணத் தாற்பெரும
மறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிர நாட்
டிறையா கியகலு பாமுத லானவர் யானைகணின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழு மணிவரையே.

## 7. இயற் பழித்தில்-புள்ளொடு புலம்பல்

வானது நாணக் கொடையா லுலகை வளர்த்தருளும்
சோனகர் வாழும் செழும்பொழில் சூழ்அந்து பார் அனையாள்
தானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேடும் பறவைக டாமழிந்தே

## 8. பதியளா வுரைத்தல்

வில்லார் நுதலியும் நீயுமின் றேசென்று மேவுதிர்சூது
எல்லாம் உணர்ந்தவர் ஏழ்பெருந் தரங்கத் தியவனர்கள்
அல்லா வெனவந்து சத்திய நந்தாவகை தொழுஞ்சீர்
நல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே.

# 36. ஆயிரமசலாவெனும் அதிசய காப்பியம்

இந்நூலை இயற்றியவர் வண்ணப் பரிமளப் புலவர். இவரின் குறிப்பை கீழ்வரும் பாடலில் காணலாம்:

“புயலாய்ந்த மதுரை கீழ்பாற்
பொருந்திய சுலையு மானிற்
செயலாய்ந்த முல்லா மிய்யா
செயிதுரை செய்ய இந்நூல்
இயலாய்ந்த முதலி செய்கு
இசுகாக்கெனு வகுதை நாடன்
பயகாம்பர் அருள்சேர் வண்ணப்
பரிமளம் பகர லுற்றான்” 32

இப்பாடல் மூலம் நூலாசிரியரின் பெயர் செய்கு முதலி இஸ்ஹாக்கு என்றும், அவர் வகுதை நாடெனும் கீழக்கரையைச் சேர்ந்தவர் என்பதும் அறிய முடிகிறது.

“இயலிறசூல் திருவடி சார்ந்த தொள்ளா
யிரத்தினுடன் எண்ப தாண்டின்
முயலும்ப்ர மாதூதா வருடத்தில்
முழங்குபுளி யங்குளத்து முல்லா
மிய்யா சயிதுமகு தூம்
வயது முப்பத் தொன்பான் தன்னிலிந்நூல்
உரைத்திடமுத் தமிழாற் போற்றிப்
பயிலுமையே ழெனும்வாலப் பிராயந் தன்னில்
பரிந்துவண்ணப் பரிமளஞ்சொற்
பகர்ந்தவர்றே” 33

இப்பாடல் ஹிஜ்ரி 980-ல் பாடப்பட்டதாக மேற்கண்ட பாடல் மூலம் அறிய முடிகிறது.

"அந்தமுறு மதுரைதனிற் செந்தமிழோர்
சங்கத்தில் அரங்கம் ஏற்றி
சந்தமுறும் ஈமானும் இஸ்லாமும்
தழைத்தோங்கத் தகுதி பூண்டு
வந்துநெறி மனுநீதி வளர்ப்பவர்முன்
னுளப்பாவின் மகிழ்ந்து போற்றிக்
கொந்துலவும் எம்மிறசூல் நபிசொல் ஆ
யிரமசலாக் கூற லுற்றேன்" 34

இந்நூலை மதுரை தமிழ் சங்கத்தில் அரங்கேற்றியதா கூறப்படுகிறது.

"அடற்பாரில் ஆலநபி புகழ்கூறு காவியம்
தனைப்பேறோ டோது மெனவே
மடற்பாளை வீசுமது ரையிற்கோல வீதிதொறு
மகத்தாயு(ள்) ளோர் மகிழவே
உடற்பாரின் மேவுமணி யணித்தூசு மாகனக
முகட்டாழி போலருளினோர்
கடற்பாரி னேகனருள் புறுக்கானி னீதியுள
கறுப்பாறு காவலவரே. 35

இந்நூலுக்கு கொடை நாயகர் கறுப்பாறு காவலர் என குறிப்பிடப்படுகிறது.

சீதக்காதியின் திருமண வாழ்த்தில் குறிப்பிடுவதாவது:

"நிறை கொழிக்கும் முத்தும் நிதியும் திரைக் கரத்தால்
கரை கொழிக்கும் செல்வக் கறுப்பாறு காவலன்" 20

சுல்தான் தகீயுத்தீனுக்கு பாண்டிய மன்னர்களால் தென் பகுதி கடல் ஆதிக்க பொறுப்பு (கறுப்பாறு காவலர்) அவருக்குக் கொடுத்திருந்ததால் அவரின் வழித்தோன்றல்களுக்கும் அப்பெயர் வழங்கி வந்துள்ளது.

ஆயிரமசலா காப்பியத்துக்கு புரவலராக இருந்தவர் வள்ளல் சீதக்காதியின் தகப்பனைப் பெற்ற பாட்டனார் மலிக் மஹ்மூது நெய்னா மரைக்காயர் என்பவரை சீதக்காதி திருமண வாழ்த்து பாடல் 35-ல் கறுப்பாறு காவலர் என குறிப்பிடப்பட்டிருப்பது தெரிய வருகிறது,

இஸ்லாமிய தமிழ் காப்பியங்களில் மிஃராஜ் மாலை ஆதி நூல் எனவும், அதைப் பாடியவர் ஆலிப் புலவர் ஆதிப் புலவர் என்றும் கூறி வந்துள்ளனர். மிஃராஜ் மாலையை ஹிஜ்ரி 998-ல் ஆலிப் புலவர் பாடியிருக்கிறார். ஆயிரமசலா காப்பியத்தை ஹிஜ்ரி 980-ல் கீழக்கரை செய்கு முதலி இசுஹாக்குப் புலவர் பாடியிருக்கிறார். ஆயிர மசலா மிஃராஜ் மாலைக்கு 18 ஆண்டுகளுக்கு முன்பே பாடப்பட்டுள்ளதால் ஆயிரமசலாவே ஆதி நூலாக கருதவேண்டும்.

ஆயிரமசலா ஒரு நீதி இலக்கியம். இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இஸ்லாமிய மார்க்கப் போதனை, வாழ்க்கை நெறி முறையாகவும் உள்ளன. ஆயிரமசலாவின் விசேஷம் என்னவெனில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருக்கும் காலை, பக்கத்து ஊரில் கைபர் வாழும் யஹூதி களால் இவர்களுக்கு தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. வானவர் கோமான் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுகம் வந்து, யஹூதிகளின் மதத் தலைவரான அப்துல்லா இப்னு ஸலாமுக்கு இஸ்லாத்தில் வரும்படி அழைப்பு விடுமாறு கூறியதற்கு இணங்க, சஅதிப்னு உக்காசு (ரலி) அவர்களை ஓலை எழுதும்படி கூறிஅவ்வோ லையை ஒரு தூதரிடம் கொடுத்து அனுப்பி வைத்தார்கள்,

இவ்வேரலையக் கண்ணுற்ற அப்துல்லா இப்னு ஸலாம், "நானும் என்னைச் சேர்ந்த மதத் தலைவர்களும் உங்கள் நபியிடம் வந்து பல கேள்விகளை கேட்கிறோம். எங்கள் கேள்விகளுக்கு திருப்தியான பதில் அளித்தால் நாங்கள் இஸ் லாத்தில் சேருகிறோம்" என தூதரிடம் கூறியனுப்பினார்.

அவ்வூர் யஹூதிகளின் தலைவர்கள் இன்ஜீல், ஜபூர், தவ்றாத். ஆகிய மூன்று வேதங்களையும் கற்றுணர்ந்த அவர் வர்கள். இவர்கள் வருவதை உணர்ந்த நபிகள் நாயகம் (ஸல்) களுக்கு சற்று திகைப்பு ஏற்பட்டது. இதையுணர்ந்த ஜிப்ர யீல் (அலை) அவர்கள், "திகைப்பு வேண்டாம். யஹூதி களுக்கு ஜவாபு சொல்வதற்கு நான் உதவி புரிகிறேன்" என்று கூறினார்கள். குறிப்பிட்ட நாளில் அப்துல்லா பின் ஸலாமும், அவரைச் சேர்ந்த எழுபது மதத் தலைவர்களும் ஆயிரம் வினாக்களைத் தயாரித்துக்கொண்டு, மதீனா நகர் வந்து, மஸ்ஜிதுந் நபவியில்நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். முன்னிலையில் நகர மக்கள் குழுமியிருக்க, அப்துல்லா இப்னு ஸலாமும், அவருடன் வந்த ஏனைய மதத் தலைவர்களும் ஒருவர் பின் ஒருவராக சரமாரியாக கேள்விகளை கேட்டனர் அக்கேள்விகள் அத்தனைக்கும் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஜிப்ரயீல் (அலை) அவர்களின்உதவி கொண்டு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு கேள்விக்கும் திருப்தியான பதில் அளித்தார்கள். இதை செவியுற்ற அப்துல்லா இப்னு ஸலாமும், ஏனைய யஹூதித் தலைவர்களும் நபி முஹம்மது (ஸல்) அவர்கள் உண்மையான ரசூல்தான் என ஒப்புக்கொண்டு, வந்தவர்கள் அனைவரும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கையைப்பிடித்து இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். இக்கூட்டத்தார் இஸ்லாத்தில் வந்த பின்னர் யஹூதிகளின் தொல்லைகள் குறைந்து இஸ்லாத்துக்கு வலுவும் ஏற்பட்டது.

ஆயிர மசலா காப்பியம் இஸ்லாமிய பழம்பெரும் காப்பியம் மட்டுமல்லாமல் இவைகள் அனைத்தும் ஹதீதுகளில் கூறப்பட்ட வைகளே ஆகும். இதனை யாவரும் படித்துப் பயன்பெற வேண்டிய நூலாகும்.

# 37. சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவர்

நபிகள் நாயகம் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதமான வாழ்க்கை வரலாற்றினைப் புகழ்ந்து பாடிய தலை சிறந்த தமிழ் காவியங்களில் சிறப்பு வாய்ந்தது சீறாப்புராணமாகும். இதைப்பாடியவர் இன்றைக்கு சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் கீழக்கரையில் அதிபதியாக (காழி) இருந்த ஷெய்கு முதலி அவர்களின் செல்வகுமாரரான உமறுப் புலவர் ஆவார். இவரே சீறாப்புராணத்தைப் பாடியதற்கு பல உறுதி யான சான்றுகளால் ஐயமற அறியப்படுகிறது. உமறுப் புலவரின் மகன் கவிக் களஞ்சியப் புலவர் இயற்றிய நபி அவதார அம் மானையில் தன்னையும், தன் தத்தையையும், தந்தையைப் பெற்ற பாட்டனையும் இன்னார், இன்ன ஊர் என விவரித்துக் கூறுவதைக் கீழ்க்காணும் பாடல்களில் காண்க:

நுவலும் ஹிஜ்ரத்தாயிரத்தி நூற்றிருபத் தைந்ததனில்
மவுலும் விஜய வருடமதில் வாழ்த்துகிறேன் (6)

கொண்டாடும் தீனோர் குலங்கள் செழித்திருக்கும்
வண்டாடும் சோலை வகுதை நகராதிபதி (7)

சேகு முதலிதரும் செல்வர் உமறுப்புலவர்
வாகுபெறப் பெற்று வளர்த்தெடுக்க வந்தமுகில் (8)

எழுத்து முதற்பஞ்ச இலக்கணத்தை உட்பதித்து
வழுத்தும் சீறா உரையை வாகாய்க் கவிதை
செய்வோர் (9)

காரணப் பேரான கவிக் களஞ்சி நந்நபிமேல்
பூரணத்தால் அம்மானை போற்றிப் புகழ்வேனே (10)

உமறுப் புலவரின் மகன் கவிக் களஞ்சியப் புலவர், 275 ஆண்டுகளுக்கு முன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடிய நபி அவதார அம்மானைப் பாடல் மூலம் அறிவதில் வகுதை என விளங்கிய கீழக்கரையில் நகராதிபதி(காழியாக) இருந்த ஷெய்கு முதலி அவர்களின் மகன் உமறுப் புலவர் சீறாப்புராணம் பாடியதாக, அவரின் மகன் கவிக் களஞ்சியப் புலவர் கூறுகிறார்.

சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவரின் தகப்பனார் பெயர் ஷெய்கு முதலி என்றும், வகுதை என்னும் கீழக்கரையைச் சேர்ந்தவர் என்பதற்கு மேற்கண்ட பாடலைவிட வேறு சான்றுகள் தேவையில்லை.

பன்னூல் ஆசிரியர் எம். ஆர். எம். அப்துற் றஹீம் அவர்கள் பதிப்பித்த 'முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்' (இரண்டாம் பதிப்பு) என்னும் நூலில் பக்கம் 537-ல் அனுபந்தம் 4-ல் உமறுப்புலவரின் காலம் எனும் தலைப்பில் கூறுவதைக் காண்க.

உமறுப் புலவரின் மரபினர்களுள் ஒருவரான திண்டுக்கல் கா. பீ. அப்துல்கரீம் நாவலர் வீட்டிலிருந்த பரம்பரை வரலாற்று செய்யுட்களிலுள்ள உமறுப் புலவரைப் பற்றிய செய்யுள் இது. இறுதியாகத்தான் நம் கைக்கு கிடைத்தபடியால் இங்குப் பொறித்துள்ளோம் எனக் குறிப்பிடுகிறார்.

ஓராயிரம் ஹிஜ்ரி யைம்பத்திரண்டு ஷஅபான்
ஒப்பற்ற தேதி ஒன்பதில்
பாராரும் புகழுற்ற நாகலாபுரமதில்
பரிமளக் குறைஷி குலத்தில்
பேராளன் மாப்பிள்ளை முகம்மது நெயினார்
பிள்ளை யீன்ற கவிஞன்
சீராளன் உமறு அறுபத்து மூன்றெட்டில்
சேர்ந்தான் சுவர்க்க நலமே.

இச்செய்யுளிலிருந்து தெரிவதாவது நாகலாபுரத்தில் பிறந்து எட்டயபுரத்தில் சமாதியாகி இருக்கும் உமறுப்புலவரின் தகப்பனார் பெயர் மாப்பிள்ளை முகம்மது நெயினார் பிள்ளை எனக் குறிப்பிட்டிருப்பதாலும், சீறாப்புராணம் பாடிய கீழக்கரை உமறுப்புலவரின் மகன் கவிக்களஞ்சியப் புலவர் பாடிய நபி அவதார அம்மானையில் வகுதை நகராதிபதி ஷெய்கு முதலி தரும் செல்வர் உமறுப்புலவர், 'எழுத்து முதற் பஞ்ச இலக்கணத்தை உட்பதித்து வழுத்தும் சீறா உரையை வாகாய்க் கவிதை செய்வோர்' என்றும் கூறி இருப்பதிலிருந்தும் சீறாப் புராணம் பாடிய உமறுப் புலவரின் தகப்பனார் பெயர் ஷெய்கு முதலி எனக் குறிப்பிடுகிறார். நாகலாபுரத்தில் பிறந்து எட்டயபுரத்தில் சமாதியாகியிருக்கும் உமறுப்புலவரின் தகப்பனார் பெயர் மாப்பிள்ளை முஹம்மது நெய்னார் பிள்ளை என குறிப்பிட்டிருப்பதால் இரு புலவர்களின் தகப்பன்மார்கள் பெயர்கள் வெவ்வேறாக இருப்பதினால் சற்று முன்னோ பின்னோ அல்லது ஏக காலத்திலோ உமறு என்னும் பெயருடைய இரு வேறு புலவர்கள் இருந்ததாக ஐயமற அறிய முடிகிறது.

காயல்பட்டணம் புலவர் நாயகம் ஷெய்கு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் அவர்கள், சீறாப்புராணம் கையெழுத்துப்படியாக இருந்ததைப் பரிசீலித்து கி. பி. 1842-ல் அச்சிட்டு வெளியிட்டபோது, அச்சிற் பதிப்பித்த வரலாற்று பாயிரத்தில் சீறாப்பாடிய உமறுப்புலவர் கீழக்கரையைச் சார்ந்தவர் என குறிப்பிட்டுள்ளார்கள். சமீப காலத்தில் சீறாப் புராணத்தை அச்சிட்டவர்கள் என்ன காரணத்தினாலோ இம் முக்கிய வரலாற்றுப்பாயிரத்தை சேர்க்காமல் அச்சிட்டிருக்கிறார்கள்.

சமீபகாலத்தில் ஆய்வாளர்களுக்கு மத்தியில் சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவர் கீழக்கரையைச் சேர்ந்தவரா? அல்லது நாகலாபுரத்தைச் சேர்ந்தவரா? என்னும் குழப்ப நிலமை ஏற்பட்டு வருகிறது. இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்

புலவர் நாயகம் அவர்களுக்கு அத்தகைய நிலமை இல்லாமல் உமறுப்புலவர் கீழக்கரையைச் சேர்ந்தவர் என தெரிந்ததால், 1842-ல் சீறாப்புராணத்தை முதன் முதலில் அச்சிடும்போது இப்பாயிரத்தைப் பாடி சேர்ந்திருக்கிறார்கள். இப்பாயிரம் இம்மலரின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

பன்னூலாசிரியர் டாக்டர் கலைமாமணி கவி. கா. மு. ஷரீப் அவர்கள் எழுதிய வள்ளல் சீதக்காதி என்னும் நூலில் உமறுப் புலவர் என்னும் தலைப்பில் பக்கம் 118-ல் குறிப்பிட்டிருப்பதில், 'சீறாப்புராணம் பாடிய உமறுப்புலவர் என்பவர் வேறு. செய்தக் காதிறு மரைக்காயர் திருமண வாழ்த்து நூல் பாடிய உமறு கத்தாப் புலவர் என்பவர் வேறு என்று கொண்டால் வள்ளல் சீதக்காதி மரைக்காயர் காலத்திலேயே இரண்டு உமறுப்புலவர்கள் இருந்தார்கள் என்றாகிறது. இருநூற்களின் நடை பாநயம் ஆகியவற்றைக் கொண்டு நோக்கின் இருவரும் வெவ்வேறு புலவர்கள் என்று சுட்டவே தோன்றுகிறது.

சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவரின் ஊர் கீழக்கரை என ஐயமற உறுதிபடுத்துகிறது. பரம்பரை ஆலிம் குடும்பத்தில் உதித்தவர் என்றும் கொள்வதற்கான ஆதாரங்கள் உண்டு" இவ்வாறு டாக்டர் கலைமாமணி கவி. கா. மு. ஷரீப் அவர்கள் கூறுகிறார்கள்.

1953-ஆம் ஆண்டில் கழக வெளியீடான தமிழ்ப் புலவர் வரிசைப்பகுதி ஐந்தாம் புத்தகத்தில் அதன் ஆசிரியர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள் உமறுப் புலவரைப் பற்றி கூறுவதாவது,

உமறுப்புலவர் கீழக்கரையைச் சேர்ந்தவர். அவர் தகப்பனார் முத்து வியாபாரி எனக் குறிப்பிடுகிறார்.

உமறுப்புலவரைப் பற்றி Gazetteer of India குறிப்பிடுவதை பார்ப்போம்.

ஆயிரமசலா பாடிய இசுஹாக்குப் புலவரின் தந்தையின் பெயர் சேகுமுதலி என்றும், சீறாபாடிய உமறுப் புலவரின் தகப்பனார் பெயர் சேகுமுதலி என இருப்பதை கவனிக்குமிடத்து இருபுலவருக்கிடையே 100 ஆண்டுகள் இடைவெளியிருப்பதால் ஆயிரமசலா பாடிய இசுஹாக்குப் புலவரின் பேரனாக சீறாபாடிய உமறுப் புலவரின் தகப்பனாராக இருக்கலாம் என கருதமுடிகிறது.

---

1, Umar Pulavar of Keelakarari the author of Seerapuranam appears to have been a contemporary of PADIKASAN. Seerapuranam a work containing 5000 Stanzas in Tamil deals with the life of MOHAMED the Prophet. It is claimed as the first great Tamil work by a Muslim poet. Mention should me made of another famous figure of the period Periya Thambi Marakayar alias Seethakkath Marakayar who was a wealthy noble of Keelakarai.

Note; Gazetteer of India Tamil Nadu State, Ramanathapuram Dt., Page: 106.

2. Muslim Poet of renown. His patron and benefactor was one Seethakathi alias Periya Thambi Maraikayar who was a merchant of immense wealth and status at Keelakkarai A contemporary of Padikasu Pulavar was Umaru Pulavar a native of Keelakkarai who composed the master piece Seera Puranam. He was patronised by Syed Kader Maraikar and his merit was recogmisd by tha Sethupathi.

Note Gazeteer of India. Ramanthapuram (Dist), Page: 737.

உமறுப் புலவர் கீழக்கரையில் வசித்த வீட்டிற்கு முன் உள்ள வெளிப்பகுதியை 'சாந்து'க்கார வெட்டை என இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. (சாந்து என்பது சந்தனம்) கீழக்கரையில் நடைபெறும் திருமண வைபவங்களில் உமறுப்புலவருக்காக அக்காலத்தில் ஏற்படுத்திய மகமைப் பணம் இன்றும் நடந்து வருகிறது. உமறுப் புலவரின் சந்ததியினர் களஞ்சியம் என கீழக்கரையிலும், அதை அடுத்துள்ள சித்தார் கோட்டையிலும் இன்றும் செல்வத்துடனும், சிறப்புடனும் வாழ்ந்து வருகிறார்கள்.

மேற்கூறிய குறிப்புகளால் சீறாப்புராணம் பாடிய உமறுப் புலவரும் அவரின் மூதாதையர்களும் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்தவர்கள் என ஐயமற தெளிவாகிறது. ஆனதால், மேற்கண்ட குறிப்புகளை விருப்பு வெறுப்பின்றி படித்து உணர்ந்து சந்தேசத்தை நிவர்த்தி செய்து கொள்ளும்படி வாசகர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



# 38. திருமணக் காட்சி

அபூர்வமான இக்காப்பியத்தை பாடிய ஆசிரியர் வகுதை என பெயர் பெற்று விளங்கிய கீழக்கரையில் பிறந்து வாழ்ந்து மறைந்த ஷேக்காதி நெய்னா புலவர் ஆவார். ஷெய்கு அப்துல் காதிறு நெய்னா என்பது மருவி சேக்காதி எனவாயிற்று.

இந்நூலின் விசேஷம் என்னவெனில் மறுமை நாளில் சுவர்க்க லோகத்தில் நிகழும் புதுமையான கருத்துக்களை முஸ்லிம் களின் நம்பிக்கை பலவற்றை எடுத்துக் கூறுவதாகும். பிர்அவ் னின் மனைவி ஆஸியா (ரலி) அவர்களும், ஈஸா நபி (அலை) அவர்களின் தாயார் மரியம்(அலை) அவர்களும் சுவர்க்கத் தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுவார்கள். அதன் பின் அவர்கள் மஹ்மூத் என்னும் யானையின் மீது அமர்ந்து சுவர்க்கத்தின் வீதிகளில் ஊர்வல மாக பவனி வருவார்கள் எனக் கருதப்படுவதே மறுமை நாளின் நிகழ்ச்சியாகும்.

காலத்தால் இக்காப்பியம் பழமையானது. சதக்கத்துல்லா அப்பா அவர்களின் வபாத்திற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பின் ஹிஜ்ரி 1122.ல் இக்காப்பியம் பாடப்பட்டுள்ளதாக, இந்நூலின் பக்கம் 6-ல் பாடல் 25-ல் கூறப்பட்டுள்ளது.

அறைதரு சகாத்தமா யிரத்தறுநூற் றிருபானான்
    கதனிற் குன்றா
திறைதருநந் நபிஹிஜுறத் தாயிரத்தோர் நூற்றிருபத்
    திரண்டிற் பூவின்
முறைதரும் விசயவரு டம்மிந்நூலை யாதரவின்
    மொழிந்தேன் சீல
நிறைதருமே தாவியருக் கென்னாமென் றிங்கிதத்தி
    னினையா தென்றே.

இந்நூலுக்கு கொடை நாயகர் வள்ளல் சீதக்காதியின் தம்பி மாமு நெய்னா வென்ற பட்டத்து அப்துல் காதிர் மரைக்காயரின் மகன் பட்டத்து அபூபக்கர் மரைக்காயரின் மகன் கொடை வள்ளல் பட்டத்து லெப்பை நெய்னா மரைக்காயர். இவர்கள் எனது முப்பாட்டனார் ஆவார்கள்.

இக்காப்பியத்திற்கு கொடைநாயகர் இன்னார் என்பதை கீழ்வரும் பாடல்களில் காண்க.

கடையாலு முதலாலு மறியாத பொருளையுளங்
  கருதி மேகக்
கொடையாளர் நபியிறசூல் மன்றாடி யீடேற்றிக்
  கொள்வ ரென்றே
சடையாது நிதிவாரித் திருமணக்காட் சிக்களித்தான்
  றழைத்தா னல்லோ
ரடையாளன் கொடையாளன் லெப்பைநயி னான்வகுதை
  யரச ரேறே. 34

காருலவு நிழல்மேவு நபியிறசூல் மணக்காட்சிக்
  காதை நீர்சூழ்
பாருலகி லானவர்சொல் லறபுரை செந்தமிழ்விருத்தப்
  பனுவ லாகச்
சீருலவு செங்கனக மளவறநல் கினன்காயற்
  சீமான் செம்பொன்
மேருவரை யெனவோங்கும் லெப்பைநயி னானெனுமோர்
  வேந்தர் வேந்தே. 35

# 39. சின்ன சீறா

சின்ன சீறாப்புராணத்தைப் பாடியவர் கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயர் புலவர், கீழக்கரை உமறுப் புலவர்பாடிய சீறாப்புராணம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை முழுமையாகப் பாடி முடிக்கவில்லை. பெருமா னார் அவர்களின் வாழ்க்கையில் ஹுதைபிய்யா உடன் படிக்கை அதிமுக்கியமான நிகழ்ச்சியாகும். அதை உமறுப் புலவர் சீறாவின் ஹிஜ்ரத் காண்டத்தின் 45-வது உம்ராவுக்குப் போன படலத்தில் வர்ணித்திருக்கிறார். அதையடுத்து இரண்டு படலங்கள் மட்டுமே பாடி நிறுத்தியிருக்கிறார். அவைகள் சல்மா பொருத படலம் உறணிக் கூட்டத்தார் படலம்ஆகும். அதற்குப் பின் உள்ள வரலாற்றை பெருமானாரின் வபாத்து வரை சின்ன சீறாவில் பனீ அஹ்மது மரைக்காயர் பாடியுள் ளார். அவைகள் அரசர்களுக்கு நிருபங்கள் வரைந்த வரலாற் றிலிருந்து தொடங்குகிறது. இச்சின்ன சீறாவை நிறைவு செய்த புகழ் பனீ அமஹ்து மரைக்காயர் அவர்களையே சாரும்.

பனீ அஹ்மது மரைக்காயரின் சந்ததியினர் கீழக்கரையில் செல்வச் சிறப்புடன் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். இச்சின்னச் சீறா பாடுவதற்கு கொடைநாயகர் சீதக்காதியின் தம்பி மாமுநெய்னா வென்ற பட்டத்து முஹம்மது அப்துல் காதிர் மரைக்காயரின் மகன் பட்டத்து அபூபக்கர் மரைக்காய ரின் சிரேஷ்டப் புதல்வர் வள்ளல் லெப்பை நெய்னா மரைக் காயர் ஆவர். பனீ அஹ்மது மரைக்காயரின் கப்ரு கீழக்கரை கிழக்குத் தெரு அப்பா பள்ளியின் தென்புறம் உள்ளது.

கொடை நாயகர் இன்னார் என்னும் பாடல் ;

ஆதிநூல் உபநிடதம் தேர்சுலையு மான்இலப்பை
ஆலீம் செய்சொல்
போதம்உறு மெய்ஞ்ஞானச் சதக்கத்துல் லாஆலீம்
புதல்வி பாலன்
சாதிநாய கன்வகுதை இலப்பைநயி னான்இதயத்
தடத்திற் பூத்த
பாததாம ரைஇறசூல் புகழ்பாடக் கனகமழை
பரிவில் பெய்தான் 11

நிவவுமணிப் பரிட்சைஅறி பவர்கள்சிரோ மணிமாமு
நயினான் ஈன்ற
குவவுநெடும் தடம்புயமால் அபூபக்கர் இலப்பைதரு
கோமான் சீத
உவவுமதி நிகர்வதனன் இலப்பைநயி னான்மகிபன்
உவரி சூழும்
நவஉலகு தொழும்இறசூல் கதைபாட அளவறுசீர்
நல்கி னானே 12

ஆரணத்(து)உள் பொருள்தேரும் அப்துல்கா திர்நயினா
ஆலி முக்கும்
தாரணிக்கண் அறிவுசெறி செய்யிதுமு கம்மதென்போன்
தனக்கு முன்னோன்
பூரணத்தண் மதிமுகத்தான் இலப்பைநயி னான்மகிபன்
பொருவில் வெள்ளை
வாரணத்தின் நபிஇறசூல் காதைசொல வேட்டதெல்லாம்
வழங்கி னானே. 13

# 40. நூறு நாமா

நூர் நாமா பாடலைப் பாடியவர் கீழக்கரை செய்யிது அஹ்மது மரைக்காயர் புலவர். இவர் சின்ன சீறா பாடிய பனீ அஹ்மது மரைக்காயரின் புதல்வராவார்.

செய்யிது அஹ்மது மரைக்காயர் புலவர், தமிழில் பெரும் புலவராக இருந்ததோடல்லாமல் அரபியிலும் தேர்ச்சி பெற்ற ஆலிமாக இருந்ததாக தெரியவருகிறது. தமிழிலும், அரபியிலும் அனேகப் பாடல்களும், பைத்துகளும் பாடியுள்ளார். முக்கியமாக கீழக்கரை புதுப்பள்ளிவாசல் திண்ணைக் குறட்டில் அடங்கியிருக்கும் ஜமால் முஹம்மது (ஒலி) அவர்கள் பெயரில் காகிரி நாட்டு வளம் என்னும் தலைப்பில் நூறு நாமா என்னும் பாடலைப் பாடியிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. கீழக்கரை கிழக்குத்தெரு அப்பா பள்ளி வாசலில் இவரின் தகப்பனார் பனீ அஹ்மது மரைக்காயரின் கப்ருக்குப் பக்கத்தில் அடக்கமாகி இருக்கிறார்.

## நூறு நாமாவில் காகிரி நாட்டு வளம்

பிறந்து கீழக் கரையினில் வாழ்ந்து
பேரின் பான்பதி னாலு இல்மையும்
துறந்த றிந்தஅ றிவுகள் யாவர்க்கும்
சொல்லி தீனை தினம்வள ரச்செய்தோர்
மறந்தும் பொய்மை கனவினி லேனுநல்
வாக்கி லேஅணு காதநல் வள்ளலாம்
சிறந்த பேர்கொள் ஜமாலு முஹம்மதெம்
செம்மல் வாழும் வகுதைநன் நாடே (3)
பள்ளி தோறினும் நம்இறை யோனைப்
பணிந்து மாந்தர் படித்தநல் வேதத்தைக்

கிள்ளை கேட்டுப் படித்திடும் சொல்லைக்
கேட்டு நங்கண மேகிளர்ந் தோடிடும்
தள்ளொ ணாச்சொல் இதென்று முசீபத்துத்
தங்கி டாதகன் றேவிரைந் தோடிடும்
வள்ள லான ஜமாலு முஹம்மது
வாழுங் காயல் வகுதைநன் நாடே: (6)
வள்ளல் ஆதி ஹலறத்தில் ஆகவும்
மக்கள் சீடரும் மற்றுள பேர்களும்
மெள்ள வேகுளிப் பாட்டிக் கபன் செய்து
வேதம் ஓதித் தொழுவித்து நற்புதுப்
பள்ளித் திண்ணைக் குறட்டில் அடக்கவும்
பாக்கி யப்பல னும்பெருத் தோங்கவும்
தெள்ளி தான ஜமாலு முஹம்மதாம்
செல்வர் வாழ்காயல் ஊர் எங்கள் ஊரே (11)

பாடல் 3-ல் ஜமால் முகம்மது (ஒலி) அவர்கள் கீழக்கரையில் பிறந்து வாழ்ந்தவர்கள் என்றும், பாடல் 11,ல் கீழக்கரை புதுப் பள்ளி திண்ணைக் குறட்டில் அடக்கமாகியிருப்பதாக கூறப்பட்டிருந்தும், 1978-ம் ஆண்டு காயல் பட்டிணத்தில் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கிய கட்டுரைக் கோவை நூல் பக்கம் 36-ல், 3-வது பாடலை மட்டும் அச்சிட்டு, ஜமால் முஹம்மது (ஒலி) அவர்கள் காயல்பட்டணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஹிஜ்ரி 1230 முஹர்ரம் 3-ல் காலமாகி காயல் பட்டணம் புதுப்பள்ளி திண்ணைக் குறட்டில் அடக்கமாகியிருக்கிறார்கள் என்று கட்டுரையாளர் ஹாபிஸ் எம். கே. செய்யிது அஹ்மது குறிப்பிட்டிருப்பது வியக்கத் தக்கது.

இவர்களின் வபாத்து 1234. காகிரி நாட்டுப் பாடல் இந்நூலில் 76-ம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

# 41. அடைக்கல மாலை

அடைக்கல மாலையை பாடியவர் அப்துல் காதிர் (ஒலி) அவர்கள். மாதிஹுர்ரசூல் சதக்கத்துல்லா அப்பா அவர்களின் தவப் புதல்வி சாரா உம்மாவின் மகன். வள்ளல் பட்டத்து லெப்பை நெய்னா மரைக்காயரின் புதல்வராவார்கள். இவர்கள் பெயரில் பலரால் பைத்துகளும் பாடல்களும் சொல்லப் பட்டிருப்பதால் இவர்கள் கறாமாத்து உடையவர்களாகத் தெரிகிறது.

இவர்கள் அரபியிலும், தமிழிலும் பல பைத்துக்களும் பாடல்களும் பாடியுள்ளார்கள் அதில் முக்கியமானது, நம் நாட்டில் கஷ்டங்களும், இன்னல்களும் ஏற்படும் காலங்களில்,, இறைவனிடம் மன்றாடிக் கேட்கும் இறைவேட்டல் ஆன அடைக்கல மாலை ஆகும்.

இவர்களின் அடக்க ஸ்தலம் சதக்கத்துல்லா அப்பா அவர்களின் தர்காவுக்குப் பக்கத்தில் தன் குடும்பத்திற்கு சொந்தமான மைய அடக்க ஸ்தலத்தில் அடக்கமாகி இருக்கிறார்கள். அடைக்கலமாலை பாடலை இம்மலரில் 62-ம் பக்கம் காண்க.

# 42. ஷுஅபுத்தீன் மாலை

இம்மாலையைப் பாடியவர்கள் கீழக்கரை தைக்கா ஸாஹிபு (ஒலி) அவர்கள். அரபியிலும், தமிழிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாக விளங்கினார்கள். இவர்கள் ரசூல் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடிய ஷஃபஇய்யா என்னும் அரபி கஸீதா வானது சதக்கத்துல்லா அப்பா அவர்கள் பாடிய வித்ரிய்யாவுக்கு சமமானது என உலமாக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டது. தமிழில் இவர்கள் பாடிய பாடல்கள் அனேகம். அதில் முக்கியமானது ஷுஅபுத்தீன் என்னும் 40 மாலைகள் ஆகும். அரபுத் தமிழில் இருந்த முக்கியமான பாடல்கள் 25 ஐ தமிழ்ஆக்கம் செய்து அச்சிட்டுள்ளேன்.

கீழக்கரை மதரஸதுல் அரூஸியாவை சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபித்து நடத்தியது இவர்களேயாவர்.



# 43. கருத்த சதக் தம்பி புலவர்

புரவலர்களும் புலவர்களும் இடையறாது உற்பத்தியாகிக் கொண்டிருக்கும் நற்பதியாம் கீழக்கரையில் அம்பலகார தெருவில் கருத்த சதக்தம்பி புலவர் என்பவர் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் பிறந்தார் என அறியப்படுகிறது. இவரின் ஜீவிய காலத்தில் அனேகப் புலவர்களும், பண்டிதர்களும் இவரிடம் கல்வி கற்று வந்தனர். இவரின் வயோதிகக்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருக்கும் சமயம், தனது உற்றார்களும், மாணவர்களும், இவரைப் பார்க்கவந்த சமயம், தனக்கு அந்தியக்காலம் நெருங்கி விட்டதை உணர்ந்த புலவர், அருகிலிருந்தவரிடம் ஓலையும் எழுத்தாணியும் தரும்படி கேட்டு வாங்கி, அதில் எழுதி முடித்ததும், அவ்வோலையை தனது தலையணைக்குக் கீழே வைத்து விட்டு இரு கைகளையும் நெஞ்சில் கட்டி 'அல்லாஹு அக்பர்' எனக்கூறி உயிர் நீத்தார். அருகில் இருந்தவர்கள் அவ்வோலையை எடுத்துப் படித்துப் பார்க்கும் போது, கீழ்க்காணும் பாடல் எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்து பார்த்த அனைவரும் இவர் ரசூல்(ஸல்) அவர்களின் பேரில் கொண்ட பக்தியைக் கண்டு அதிசயித்தனர்.

இக்குறிப்பு பெரும் புலவர் மதுரை ம. கா. மு. காதிர் முஹிய்யதீன் மரைக்காயர் அவர்கள் எழுதிய 'ஆலிம் புலவர் ஆன்ற ஒழுக்கம்' எனும் நூலிலிருந்து நமக்குக் கிடைத்துள்ளது.

பல்லவி

தருணத்தில் என்முன் வந்து காப்பேன் எனும் வலக்கை
தருவது கடனாமே-எனும் வலக்கை
தருவது திடனாமே

அனுபல்லவி

ஒரு முத்தில் உதித்திந்த உலகம்மற் றுமெவையும்
ஒக்க ஒளிவாய்நின்ற மக்க மகுமூதரே! (தரு)

சரணம்

வாயும்நா வும்வரண்டு மனமெல்லாம் மெலிந்திட
மனுமுறை யுள்ளோர் கண்ணீர் மழையெனச் சொரிந்திட
சேயுந் துணைவர்களும் செல்வமும் பிரிந்திடச்
செய்த பழிபாதகச் செயல்பல தெரிந்திடச்
சிலிர்க்க, உடல்நரம்பு வலிக்க, மனதுவெகு
கலக்க முறஇறைவன் மலக்குல், மௌத்து வரும் (தரு)

விழியிரண் டும்சிவந்து வெகுகோப மாயடுத்து
மேனாள் அகன்றஉயிர் மறுத்துட லில்விடுத்து
மொழியும் மொழிக்குமறு மொழிகொடென் றேதடுத்து
முனிந்து சுக்குமாறென்னும் மூரித்தண் டம்எடுத்து
முப்புவி யும்குலுங்க, செப்பிய முன்கர்நக்கீர்
வெப்ப முடனேவெருண் டடிக்க அடர்ந்து வரும் (தரு)

மிகுதிநா ளில்மகுஷர் வெளியில் பொழுதுதாக்கி
வேகாமல் முன்செய்பாவ வினைத்தொட ரெல்லாம்நீக்கி
நியதித் தராசில்நன்மைத் தட்டில் நிரம்பத்தூக்கி
ரட்சித்தல் ஹம்துக்கொடி நிழல் தனிலுமாக்கி
நீலக் கரியரோமக் காலுக்கு நேர்மையான
வேலில்கூர் மைமுஸ்தகீம் பாலத் திடைநடக்கும் (தரு)

மருவலர்ச் சோலைசூழும் மதீனா நகரின்வாழ்வே
மாதவர் அப்துல்லாகண் மகவென் றுதித்தகோவே
தருமசற் குணமேரே சகலோர்க்கும் கற்பகாவே
சதுமறை யோர்புகழும் சய்யி தஹ்மதுவே
தன்னந் தனியேநின்று அன்னம்பா றுதல்கொண்ட
சின்னஞ் சிறியேன்சதக் கென்னும் பயலுக்கிந்த (தரு)

புலவர் கருத்த சதக் தம்பி பாடிய நூல்கள் அனேகம் கையேட்டுப் பிரதியாக இருந்தது மறைந்து விட்டது. அச்சில் வெளிவந்த பிரதிகளில் இது ஒன்றுதான் நமக்குக் கிடைத்துள்ளது

# 44. தமிழ்ச் சங்க வித்வான் செய்யிது முஹம்மது ஹா:பிலு ஆலிம் புலவர்

ஆலிம் புலவர் ஹாஃபில் முஹம்மது சதக் தம்பி மரைக் காயாருக்கும், முஹம்மது ஆயிஷா உம்மாவுக்கும் சீழக்கரை அம்பலக்காரத் தெருவில் ஹிஜ்ரி 1298-ல் (கி.பி. 1881) செல்வ குமாரராகப் பிறந்தார். சிறுவயதில் திருக்குர்ஆன் பூராவும் மனனம் செய்தப் பின், அரூஸியா தைக்காவில் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களிடமும், நடுத் தெருவில் உள்ள சீனி முஹம்மது லெப்பை ஆலிம் அவர்களிடமும் அரபி மார்க்கக் கல்விகளைக் கற்று தேர்ச்சிப் பெற்ற ஆலிம் ஆனார்கள்.

அக்காலை கீழக்கரையில் குத்புத்தீன் ஆலிம் புலவர் நடத்தி வந்த வித்யாலயாவில் சேர்ந்து தமிழ் கற்று பண்டிதரானார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து வித்வானாக ஆன துடன் தமிழ் சங்கத்தின் காரியதரிசியாகவும் இருந்ததாக அன் னாரின் சரித்திர வாயிலாக அறியப்படுகிறது.

இவர் தமிழ்ச் சங்கப் பெரும் புலவர். அரபியில் சனது பெற்ற ஆலிம். திருமறை குர்ஆன் முழுவதையும் மனனம் செய்த ஹாஃபில், புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய ஹாஜி, நல்ல வர்த்தகர் ஆக இந்த ஐவகையிலும் சிறப்புப் பெற்றவர்.

இந்நூற்றாண்டில் தென்னகத்தில் இவ்வைந்து வகையிலும் சிறப்புப் பெற்ற முஸ்லிம் புலவர் இவரைத்தவிர வேறு யாரும் இருந்ததாக இல்லையென சான்றோர் கூறுகின்றனர்.

கீழக்கரை சதக்கத்துன் ஜாரியாவெனும் உயர் நிலைப் பள்ளிக் கூடம் இவர்களின் பொருளுதவியுடன் அரும்பெரும் முயற்சியால் நிறுவப்பட்டது. ஆலிம் புலவர், ஒலிமார்கள் குத்புமார்கள் பெயரில் யாத்துள்ள முனாஜாத்துக்களும்

மௌலூதுகளும், பாடல்களும் அனேகம். செய்யதுற்றாத்தீப் என ஒரு மேலான றாத்தீபையும் கோர்வை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கீழக்கரை அரூஸியா மதரஸாவில் கல்வி கற்றவரும் தென்னகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மத்ரஸாக்களை ஏற் படுத்தியவரும், திண்டுக்கல்லுக்கு அருகாமையில் கோவிலூர் என்னும் ஊரில் அடக்கமாகி, கொழும்பு ஆலிம்சாவென பெயர் பெற்ற செய்யிது முஹம்மது ஆலிம் அவர்கள் ஏற்படுத்திய தர்பியத்துல் அத்பால் எனும் நிறுவனத்திற்கு, காப்பாளராக கீழக்கரை ஆலிம்புலவர் தனது அந்திம காலம் வரை இருந்து வந்தது இங்கே குறிப்பிடத்தக்கது.



# 45. அப்துல் மஜீது மரைக்காயர் புலவர்

வள்ளல் சீதக்காதியின் ஒரே மகளாகிய முஹிய்யதீன் நாச்சியாரின் கொள்ளுப் பேரனும் ஆசாரக் கோவை என்னும் அபூர்வ பிரபந்தத்தைப் பாடியவருமாவார். அக் காலை கீழக்கரையில் அரபி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற குத்புத்தீன் ஆலிம் புலவர் நடத்தி வந்த வித்தியாசாலையில் கல்வி கற்று, சிறு வயதிலேயே பெரும் புலவர்களுக்கு மத்தியில் புகழ் பெற்று விளங்கினார் அப்துல் மஜீது புலவர். இவர் பாடிய பாடல்களும், பிரபந்தங் களும் அனேகம் நம் கைக்கு கிடைத்தது ஆசாரக் கோவையும், மஜீது மஞ்சரி என்ற பாடலும் ஆகும். இவ் விரண்டினையும் நாம் அச்சிட்டுள்ளோம். ஆசாரக் கோவை அற்புதமான, மனித குலம் யாவரும் ஒழுக்கத்துடன் நடக்க வேண்டிய நீதி களஞ்சிய மாகும். இந்நூல் முதலில் 1902-ம் ஆண்டில் அச்சானதற்குப் யின் 1973-ஆம் ஆண்டில் அப்துல் மஜீது புலவரின் மருமகன் ஹாஜி அப்துல் முத்தலிப் மரைக்காயர் அவர்களால் அச்சிடப் பட்டது. நாம் ஒவ்வொருவரும் இந்நூலைப்படித்து பயன் பெறும் படிசேட்டுக் கொள்கின்றேன்.

அப்துல் மஜீது புலவர் சிறந்த வர்த்தக குடும்பதில் பிறந்தவர் வியாபார நிமித்தம் இலங்கை சென்றபோது கருப்பட்டி என்ற ஊரில் முஹம்மது தம்பி மரைக்காயர் என்னும் தனவந் தரின் உறவு ஏற்பட்டு, அவரின் உதவி கொண்டு ஆசாரக் கோவையை அச்சிட்டிருக்கிறார். இவர் இலங்கையில் இருக்கும் போது நோய்வாய்ப்பட்டு தனது 34 வயதிலேயே இறைவனடி சேர்ந்து தேளி என்னும் சிறிய ஊரில் நல்லடக்கம் ஆகி இருக் கிறார். இவரின் மறைவு கி.பி. 1904 எனத் தெரிகிறது.

# 46. அப்துல் ஹன்னான் புலவர்

அப்துல் ஹன்னான் புலவர் தனது 15-வது வயது பிராயத்திலிருந்தே கவிகளும், பதங்களும் இயற்றும் தகுதி உடையவராக இருந்தார். நானும், அப்துல் ஹன்னான் புலவரும் சிறுவயது முதல் நண்பர்களாக பழகி வந்தமையால், நாங்கள் இருவரும் பல சபைகளில் அவர் பாடிய பதங்களையும், பாடல்களையும் சேர்ந்து பாடி வந்துள்ளோம். அவர் சுமார் இருபது வயது பிராயமாக இருந்த சமயம் அவர் பாடிய பாடல்களை புகழ் பெற்ற சவ்வாது புலவரின் பேரனிடம் காண்பித்து தனது புலமைத் தனத்தை மேலும் விருத்தி செய்வதற்காக அப் புலவரிடம் சிறிது காலம் தங்கி கல்வி கற்று தகுதியுடைய புலவரானார். இவர் பாடிய பாடல்களும், இறை வேட்டல்களும் அனேகம் இருந்தும் அச்சிற் பதிப்பிக்க இருக்கும் சமயம் இறைவன்பால் சேர்ந்து விட்டார். அவர்களை அச்சிடுவதற்கு நான் முயற்சித்தும் கிடைக்காமல் அனைத்தும் கரையானுக்கு இரையாகி விட்டன. இப்பெயர் பெற்ற புலவரின் பாடல்கள் வெளிவராதது வருந்தத்தக்கது.

## 47. ஜமால் முஹம்மது ஆலிம் புலவர்

ஜமால் முஹம்மது ஆலிம் புலவர் பாடிய பாமாலைகளும், பைத்துகளும் அனேகம். முக்கியமாக கல்வத்து மாலை எனும் பாடல் யாவராலும் போற்றிப் புகழக் கூடியது. சின்ன சீறா பாடிய கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயரின் வழித் தோன்ற லாவார்கள். மாதிஹுர் ரசூல் சிப்தைன் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் தம்பி அப்துல் காதர் ஆலிம் அவர்களின் திருக் குமாரர் ஆவார்கள். அரபியில் நல்ல தேர்ச்சி பெற்ற ஆலிம் என புகழ் பெற்றவர்கள்.

## 48. K. T. M. S. அஹ்மது புலவர்

K. T. M. S. அஹ்மது புலவர் அவர்கள் சின்ன சீறா பாடிய கீழக்கரை பனீ அஹ்மது மரைக்காயரின் வழிதோன்றலும் மேற்குறிப்பிட்ட ஜமால் முஹம்மது ஆலிமின் மகள் வயிற்றுப் பேரனும் ஆவார்கள். இவரின் புலமைத் தன்மையை பல அறிஞர் கள் மிகவும் பாராட்டியுள்ளனர்; இவர்கள் பல கவிதைகள் இயற்றி இருப்பதுடன் 'நல்லறபோதனை' என்னும் நூலை இயற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் கண்டுள்ள அத் தனைப் போதனைகளும் இரத்தினம் என மதித்து நடப்பவர் களுக்கு வேறு நற்போதனை தேவை இல்லை.

இவர்கள் சென்னை ஜமாலியா மதரஸாவில் அரபி கற்ற ஆலி மாவார். இவர்கள் சிறுவயதில் வியாபாரத்தில் ஈடுபட்டு பம்பாயி லும், சிங்கப்பூரிலும் முத்து இரத்தின வர்த்தகத்தில் புகழ் பெற்றவர் K. T. M. S. அறக்கட்டளை என்னும் நிறுவனத்தின் தலை வராக இருப்பதுடன் பல நற்காரியங்கள் புரிந்து இன்றும் புகழுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

# 49. சேதுநாடும் தமிழும்

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான "சேதுநாடும் செந்தமிழும்" என்னும் நூலில் சேதுசமஸ்தான வித்வானும் நாடறிந்த மிகப்பெரும் தமிழறிஞருமான திரு. ரா. இராகவையங்கார் அவர்கள் எழுதியிருப்பதாவது:

"இனித் தண்டலையார் சதகம், தொண்டைமண்டல சதகம் முதலிய நூல்களையியற்றிப் புகழ் படைத்த படிக்காசன் என்னும் புலவர் அந்நாட்டுக் கீழக்கரையில் ஔரங்கசீப் முதலிய மகமதிய அரசர் மெச்ச வாழ்ந்த சீதக்காதி யென்று பெயர் சிறந்த பெரிய தம்பி மரக்காயரென்னும் பெருங் கொடைச் செல்வரை வாயார வாழ்த்திய இனிய பாடல்களும் அவ்வள்ள லிறந்ததற்கு ஆற்றாது உள்ளமுடைந்துருகிப் பாடிய பாடல்களும் ஈண்டுப் பலரும் அறிந்தனவே. யாதலானவற்றை யான் பெயர்த்துங்கூறேன். இச் சீதக்காதி வள்ளல் சேதுபதியாற் பெரிதும் அன்பு பாராட்டப்பட்டவரென்பது இவர் பேரானுள்ள நாடக நூலான் அறியப்பட்டது.

மற்றும், மகமதிய மதத்தினரெல்லாம் உச்சிமேற்கொண்டு போற்றும் நபிநயினார் சரிதமாகிய சீறாப்புராணத்தை அம் மதத்தினரல்லாத தமிழறிவாளரும் கல்வியின்பத்தால் விழைந்து கற்குமாறு அத்துணைச் சுவைத்தாக ஐயாயிரம் பாடலாற் பாடிய உமறுப்புலவ ரென்னும் தமிழ் நாவலர் இச்சேது நாட்டு கீழக்கரையிற் பிறந்தவராவார்."

(பக்கம் 19-20)

1-ல் காணப்படும் வாசகம் ;

கொல்லம் 458 பங்குனி மாதம் வெள்ளி, மாலிம் ரஷீது கலிபா மஹ்மூது-மரித்தார். (கி. பி. 1283)

2-ல் காணப்படும் வாசகம் :

கொல்லம் 469 புரட்டாசி மாதம் 27-ம் தேதி சேகு அப்துல்லா முதலியார்-வியாழக்கிழமை இரவு மரித்தார். (கி. பி. 1294)



கீழக்கரை 18 மொட்டையார் பள்ளிவாசலில்உள்ள
இரண்டு கப்ருகள். இதன் விளக்கம் பின்பக்கம் பார்க்க.



# திருப்புல்லாணிக் கோயில் கல்வெட்டு கூறும் பௌத்திர மாணிக்கப்பட்டினம் :-

## No. 402. Tiruppullani.

## (*A.R. No.* 116 *of* 1903).

ON A SLAB BUILT INTO THE FLOOR AT THE ENTRANCE OF THE FIRST GOPURA IN THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்திஸ்ரீ [||*] பூமலர்த் திருவும் பொருள்பட . .
2 . . ம் தாமரைக் குவி[மு]லைச் செயப்புயத் திருப்-
3 [ப வெ]வதரவில் வெ[ள்ளி]யதன் தாமரை [கா]தல்-
4 மாது கவின்பெறத் தனிப்ப வெண்டிரை உ-
5 டுத்த மண்[டி]ணியிடக்கை திருவிமடக்கை . .
6 . . சமையில் களிப்பச் சயமடந்தையும் தருமமு[ந்]
7 தழைப்ப இமையவர் விழாக்கொடி இடந்-
8 தொறும் எடுப்ப கருங்கலி கலங்கெட கடவுள்
9 வேதியர் அருந்தொழில் வெ[ழ்]வி செங்கோல
10 [வ]ளர சுருதியும் தமிழும் தொல்வளம் குலவ வெ-
11 [பா]குதிறலரசு பூசலிற் குழு ஒருகை இருசெவி
12 மும்மத நாட்கொட்ட(அ)யிரா[வ]த முதல் செய்தர
13 கொற்ற[த்*]தெண்டிசை சூழ்ந்த எருத்த மொழி என-
14 டசை வேந்தர் கலிங்கர் கோசலர் அ-
15 ஙவம் குச்சரம் போசள மகதம் போப்பளம் புண்-
16 டரம் ஈழங் கடாரம் தெலுங்கம் தெலிங்கம [சோ*]ன-
17 னகம் சின முதலாய் விதிமுறை [தழை] வெல்வே-
18 று வகுத்த முதலிலங் கிழமையில் முடிபுனை [ம]-
19 லர்தா[ர்*] தொருதனி நாயக[ன்] தென்று உலகேத்த [தி]-
20 ருமுடி சூடி செங்கோல் ஓச்சி கொற்றத்தாள குனி-
21 [ர்]வெண்குடை நிழல் கற்றைக்கவரி காவலர் வீச வி-
22 டைகலிர் நவமணி வீரசிங்காசனத்து உடன்-
23 முடிசூடி உயர்குலத் திருப்ப மங்கைய[ர்*] மலர்க்கங்-
24 [குவி]த்து பார்த்துஇவர் மங்கையர் இரண்டு வ-
25 ணங்கும் சென்னி சுடர் இளமதி சுடர் மணிமுடி

26 [கு]டன் சி[வந்த] விலை நெடியமலை மருகச் செய்[த*]ன வா-
27 னுருகும் உலகமுழுதுடையாரொடும் வீற்றிருந்தருளி
28 மாலூதல் மதிக்குலம் விளக்கிய கோமார (கௌமார)பன்ம-
29 ரான திரிபுவனச்சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டியதேவற்கு
30 யாண்டு எட்டாவது நாள் தொளாயிரத்து தொண்ணூற்-
31 [அ]ஞ்சினும் மறுசெலவையளகட்டு மாடக்கு[ள]க்கீழ் மது-
32 ரைக்கெ[ாயி]ல் பள்ளியறைக்[கூ]டத்துப் பள்ளிப்பீடமழவ-
33 [ரா]யனில் எழுந்தருளியிருக்க விட்செம்பினாட்டுப் பவித்தி[ர]-
34 மாணிக்க[பட்டின] திம்பால் சோனகச்சாமந்தபள்ளி-
35 யான பிழாரப்பள்ளி . . ழ்வார்க்கும் இவர் செய்[தி]-
36 ருவாய் மொழிந்தருளினபடிக்கு . . . முள்ளிட்டு வெ-
37 வண்டுவைக்கு பவித்திரமாணி[க்க]பட்டன் எந்தலைத்தம்-
38 ம்பக்கொ[க்கர்] காராண்மை காணியாகவந்த . . . .
39 . . . படைஇகாலமெல்லைக்குட்பட்ட நீர்[நிலமும்] கன்-
40 செய் புன்செய் . . . . . . .
41 பபு உட்பட்ட சுத்த . . . . . .
42 கிக்கி கிக்கிஉள்ள . . . . . . . யோகமும் .
43 வதானஅச்சம் [கொசிக்] . . . . ஞ்சிட்ட
44 பிசி சந்திவிக்கிரகப்பேறு உத்த மெப்பேர்பட்டனவு[ம்]
45 உட்பட எட்டாவதி னெதிரா மாண்டின் எதிராமாண்டுமு-
46 தல் சோனகப்பள்ளிச் ச[ந்தி] இறையிலியாக இருப்பதாக
47 இடப்பெறவேணு மென்று ஜயன் மழவராயர் கூ-
48 க்கு சொன்னமையில் இக்கன் திருப்பள்ளி உள்ளிட்டு வெண்-
49 டுவைக்கு பக . . செக்குக்கும் கா[ம்] காராண்மை
50 குடுத்த ஆம்புத்தூர் காலெல்லைக் குட்பட்ட நிலம் காணியாட்சி
51 கஞ்செய் புன்செய்யும் சுத்தமும் தோட்டமும் குளமும் [குளப்]-
51 பாப்பும் உட்பட்ட நில[த்தில்] பழந்தேவதானம் பள்ளி[ச்]-
53 சந்தம் கிக்கி கிகிஉள்ள நிலம் அந்தராயம் விளிஒகம் தரு-
54 வுதானஅச்சம் கா[ரியஆராட்சி] வெட்டிபாட்டம் பஞ்சபீ-
55 லி சந்துவிக்கிரகப்பேறும் தறிஇறை செக்கிறை தட்டாரபா-
56 ட்டம் மற்றும் எப்பேர்பட்டனவும் இவ்வாண்டுமுதல் சோ-
57 னகப்பள்ளிச்சந்தி இறையிலியாக இருப்பதாக இ[ட்]-

58 டு வரியிலார் எழுத்திட்ட உள(ள)வரியும் கம் நலையும் தா[க*]-
59 சொன்னோம் எதகொண்டு இப்படி சந்திராதித்தவத்
60 செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்து[க*]-
61 காள்க வென்று திருவாய்மொழிந்தருளி[னா]ர்[|*] இவை [திரு]-
62 மந்திரவோலை . . . . . . டையான உய[யின்]-
63 [று]வொன் விரசொழுவிவன்னன் குருகுலத[ர]ைய னெ-
64 ழுத்து[|*] இவை செவ்விருக்கைகாட்டு சக்கரபாணிகலது-
65 ரனையன் வீரமுடிதரான பல்லவராயன் எழுத்து[|*]
66 [திரிபுவ]னச்சக்கரவ[த்திகள்] கோனேரின்மைகொண்டான்
67 [இட்] செம்பினாட்டுப் பவித்திரமாணிக்கபட்டினத்து தி[ம்]-
68 பால் சோனக

69. லம் வுரத்துக்கும் பொத்தங்க .. .. ..... .....
70. வெண்டுவனவுக்கு இப்பவித்திரமாணிக்கப்பட்டினத்து
71. இருக்கும் மக்க ..........
72. மாக குடுத்தப(டி) மருதூர் நாங்கெல்லைக்குட்பட்ட
73. நிலமும் கருஞ்செய் புன்செய்யும் நத்த(மும்) (தொட்ட)-
74. குளமும் குளப்பருப்பும் உட்பட்ட நிலத்திலு
75. (ள்ள)தெவதானம் பள்ளிச்சந்தம் நிக்கி நிக்கி உள்ள
76. ...அந்தராயமும் வினியோகமும் தருவத(ான அச்)-
77. (சும் காரிய) ஆராட்சி வெட்டி பாட்டமும் பஞ்சு பிலி சந்
78. திவிக்கிரகப்பெறும் தறியிறை செக்கிறை தட்ட(ார்)ப்பா-
79. ட்டம் மற்றும் எப்பெயர்பட்டனவும் உட்பட எட்-
80. டாவதின் எதிராமாண்டின் எதிராமாண்டு முதல் சொ-
81. னகப்பள்ளிசந்(தி)இறையிலியாயிறுப்பதாகப்பெ
82. றவெணு மென்று ஐயன் மழவராயர் நமக்கு
83. சொன்னமையில் (த)ங்களுக்கு சிவனம் உள்ள-
84. வெண்டுவனவுக்கு இப்ப ..கைக்கு (நாங்கள்)
85. நாட்டிற் காணியாக குடுத்த (இம்மருதூர் நான்கெ)
86. லைக் குட்பட்ட நிர் நிலமும் கருஞ்செய் புன்செய்-
87. யும் நத்தமும் தொட்டமும் குளமும் குளப்ப(ரு)ப்பு
88, ம் உட்பட்ட நிலத்தில் பழந்தெவதானம் பள்ளிசந்த•
89. ம் நிக்கி நிக்கி உள்ள நிலம் அந்தராயமும் (வினியெ)-
90. ாகமும் தருவதான அச்சும் காரியவாராட்சியும் (வெட்)
91. டிபாட்டமும் பஞ்சு...
92. பள்ளிச்சந்த இறையிலியா யிறுப்பதாக ..
93, லார் எழித்திட்ட உள்வரியும் நம் ஓலை ..

94. ன்னொம் கைக்கொண்டு இப்படி(டி சந்திரா தித்த)-

95. ர்வரைக் கல்லிலும் செம்பிலும்...

96. க்கொள்க(*) இவை அரும்பொ...

97. ...குளத்து ஆழ்வான் ஆண்ட...

98. .. யபாண்டிய விழுப்பரைய நெழுத்து (*) (இ)-

99. .. ண்டநாட்டு பெருமணலூர் அரையன் அ-

100. ரும்பெருமாளான விக்கிரமபாண்டிய தெவ-

101. (ந்) எழுத்து (*) இவை செவவிருக்கை நாட்டு ..

102. நல்லூர் அரையன் விரதமுடித்தானான

103. ...ன் எழுத்து உ .......

104· ...த்தால் வாட்டரிக்கடமை(யி*)லெ செல்ல

—கல்வெட்டு எண் 402 A. R. No. 116 of 1903

Archaeological Survey of India. New Imperial Series Vol. LIV.

—South Indian Inscriptions (Texts) Vol. VIII. Ed. by. K. V. Subramanya Aiyer, B. A: 1937.

# கல்வத்து மாலை

*மேலப்பாளையம், காளை, ஹஸன் அலிப்புலவர் பாடியது.*

*கீழக்கரையின் மறுபெயர்களைக் குறிக்கும் கண்ணிகள்*

ஆம் ஹிஜ்ரி ஆயிரத்தோடு இரு நூற்றறுபத்தினா
லாம் வருடத்தில் றஜபி லம்மதிமு தற்புதனில் (37)

கல்வத்தொலி கீழக்கரைக் கல்வி நகரிற் பிறவிச்
செல்வத்துடன் சுந்தரமாய்ச் சேமமாய்ப் பிறந்தனர்
(காண். (38)

பௌத்திரமாணிக்க பதி பாக்கிய கீழக்கரையிற்
கௌத்துவ மணிநிகராய்க் கல்வத்தொலி தாம் பிறந்தார் (39)

இற்கறாப் பட்டணமாங் கீழக்கரை யானதிலே
நற்கருணையார் கல்வத்து நாயகம் பிறந்தனர்காண். (40)

கேலிக்கரை என்றுரைக்குங் கீழக்கரை நன்னகரிற்
சாலிக்கரை உட்பொருளைச் சாற்றுமொலி தாம்பிறந்தார்
(41)

அணுத்துகை மங்கலமாம் அன்புறுங் கீழக்கரையிற்
றுணுக்கம் வெளியிற் சிறக்குந் துய்யவொலிதாம்
(பிறந்தார். (42)

செம்பிநா டென்றுரைக்குஞ் சீர்நகர் கீழக்கரையில்
தம்பிநாமஞ் சிறக்குஞ் சாஹிபொலி தாம் பிறந்தார் (43)

பதிநினைத்தது முடித்தான் பட்டணங் கீழக்கரையிற்
துதிநிலைத்த நெஞ்சமுள்ள துங்கவொலி தாம்பிறந்தார். (44)

# மேற்கோள் - பார்வை நூற்பட்டியல்

## தமிழ்

1. தென்னிந்தியாவைப் பற்றிய வெளிநாட்டினர் குறிப்புக்கள். கே ஏ. நீலகண்ட சாஸ்திரி : தமிழில் மு. ரா. பெருமாள் முதலியார்
2. ஆலிம் புலவர் ஆன்ற ஒழுக்கம் மதுரை ம. கா. மு. காதிர் முஹ்யித்தீன் மரைக்காயர்
3. சீதக்காதி நொண்டி நாடகம்
4. சீதக்காதி திருமண வாழ்த்து-எட்டயபுரம் உமறு கத்தாப் புலவர்
5. நூறு நாமா—கீழக்கரை செய்யதகுமதுப் புலவர்
6. கல்வத்துமாலை-காளை அசனலிப் புலவர்
7. நாயக்கர் வரலாறு-அ, கி. பரந்தாமனார்
8. பாண்டியர் வரலாறு-டி. வி. சதாசிவப்பண்டாரத்தார்
9. சீதக்காதி வள்ளல்-டாக்டர் S. முஹம்மது ஹுஸைன் நயினார்
10. சின்னச்சீறா-கீழக்கரை பனீ அகுமது மரைக்காயர்
11. சித்திரக்கவி முதலான பல பாடற்றிரட்டு. காயல் பட்டணம் புலவர் நாயகம் எனும் செய்கப்துல்காதிர் நெய்னா லெப்பை ஆலிம்
12. மஜ்மு முனாஜாத்து-செய்யிது முகம்மது ஆலிம் புலவர்

13: வான்புகழ் காயல்பட்டணம் சரித்திரம்
ஹாபிஸ் M. K. செய்யது அகமது.

14. திருவாசகம்-மாணிக்கவாசகர்.

15, இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் 11 எம். ஆர். எம்.
அப்துற்றஹீம்.

16. சீறாப்புராணம்-கீழக்கரை உமறுப் புலவர்,
(புலவர் நாயகம் பதிப்பு கி. பி. 1842)

17. நபியவதார அம்மானை-கீழக்கரை கவிக்களஞ்சியப் புலவர்
(உமறுப் புலவரின் குமாரர்)

18. திருமணி மாலை-புலவர் நாயகம்.

19. இலங்கை அகமதுக் குட்டிப் புலவரின் இசுவா அம்மானை.

20; இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைக் கோவை
இஸ்லாமிய இலக்கிய கழகம், திருச்சி.

21. சேது நாடும் தமிழும்-திரு. ரா. இராகவையங்கார்.

## ஆங்கிலம்

1. South india and Her Muhammadan Invaders.
S. Krishnaswami Aiyangar, M. A.

2. Imperial Gazetteer of India.

3. Ramanathapuram District Gazetteer.

4. Arab Geographer's Knowledge of South India.
Dr. S. Muhammad Husayn Nainar.

5. Madras District Gazetteers Tinnevelly. Vol. I. 1917.

6. Political and General History of the District of Tinnevelly in the Presidency of Madras, Rev. R.Caldwell 1881.

7. The Delhi Sultanate R. C. Majumdar 1960.

8. The Travels of Marco Polo. Everyman's Library 1975.

9. Ibn Battuta Travels in Asia and Africa 1325-1354
Tr. and Selected by H.A.R. Gibb 1957.

10. Rise and Fall of the Poligars of Tamilnadu
Dr. K. Rajayyan 1974.

11. History of India as told by its own Historians
Vol. iii. Elliot and Dowson.

12: Archaeological Survey of India. New Imperial Series Vol. LIV South indian Inscriptions (Texts) Vol; viii Ed. by K. V. Subrahmanya Aiyar, B. A., 1937.

13. A Topographical List of the Inscriptions of the Madras Presidency Collected till 1915, by N. Rangacharya, vol II ; 1919.

14. The Book of the Pearl: George Frederick Kunz Charles Hugh Stevenson A. M. Ph. D.. LL.M., D. C. L.. New York. The Century Co. 1908.

15. South Asian Studies 43-Saints. Goddesses and Kings Muslims and Christians in South Indian Society. 1700-1900-Susan Bayly.

**அரபி :**

1. Tuhfathun Nuzzaar fi Gharaibil Amsar wa Ajaibil Asfar (Arabic) — Ibn Battuta.

**அரபுத் தமிழ் :**

1. காயல் பட்டணம் காரண சரித்திரம்-காயல் பட்டணம் பாளையத்து லெப்பை ஆலிம்.

2. ஸில்ஸிலத்துல் காஹிரத்துல் மிஸ்ரிய்யா -சுல்தான் ஜமாலுத்தீன் வரலாறு. காயல்பட்டணம் பிரபு செய்யிது முஹம்மது நைனா.

3. மாலிகா இரத்தினம்-கீழக்கரை சூபி மெய்ஞ்ஞானி செய்யிது ஆசியா உம்மா.

4. ஷு-அபுத்தின் மாலை-கீழக்கரை தைக்கா சாஹிபு வலியுல்லாஹ்

5. கல்வத் மாலை-கீழக்கரை ஜமால் முகம்மது ஆலிம்.

# கீழக்கரையின் மறுபெயர்கள் சான்றுகளுடன்

| | |
|---|---|
| (அ) கொற்கை ; | 1. Gazetteers-Tinnevelly Volume I 1917.<br>2. Indische Alter Thomskunde Volume II 1852 Von Lassen Christian.<br>3. இம்பீரியல் கெஜட்டீயர் ஆப் இந்தியா இரண்டாம்பதிப்பு தொகுதி 8;பக்கம் 216. 1.<br>4. S. ArunachalamThe History of Pearl Fishery of the Tamil coast.<br>5. சதாசிவப் பண்டாரத்தாரின் பாண்டியர் வரலாறு |
| (ஆ) அணுத்தொகை மங்கலம் | 1. கல்வத்து மாலை பாடல் 2<br>2. மெய்ஞான ரத்தின மாலை |
| (இ) நினைத்தது முடித்தான் பட்டணம்:- | 1, கல்வத்து மாலை. பாடல் 44<br>2. கல்வெட்டு, கீ ழ க் க ரை சொக்கநாத சுவாமி கோயில் (அரசு கல்வெட்டு தொகுப்பு A. R. 396 - 1907) |
| (ஈ) பௌத்திரமாணிக்கப் பட்டினம்:— | 1. கல்வத்து மாலை, பாடல் 39.<br>2. திருப்புல்லாணி கோயில் கல்வெட்டு No. 402; A. R. 116 of 1903. |
| (உ) வச்சிர நாடு: | 1. பல்சந்தமாலை 2, 5, 8<br>2. சீதக்காதி திருமண வாழ்த்து 66, 214. 156.<br>3. படிக்காசுப்புலவர் கையறு நிலைப்பாடல் 8. |
| (ஊ) வகுதை (வகுதாபுரி).- | 1. புலவர் நாயகம் நிருபச் செய்யுள் பாடல் 3. |

| | |
|---|---|
| | 2. நூறு நாமா-காகிரி நாட்டு வளம். |
| | 3, சீதக்காதி திருமண வாழ்த்து 15,158, 255, 280, 406 |
| | 4. பனீ அருமது மரைக்காயர் பாயிரப்பாடல் 11 |
| | 5. பல்சந்தமாலை. 2 |
| | 6. நபி அவதார அம்மானை. (கண்ணி 7) |
| | 7. ஆயிர மசலா 32. |
| (எ) தென்காயல் ;- | 1. சீதக்காதி திருமணவாழ்த்து 222. |
| | 2. காயல்பட்டணம் புலவர் நாயகம் நிருபச் செய்யுள் 4. |
| | 3. இலங்கை அகமதுக் குட்டிப் புலவர் இசுவா அம்மானை |
| (ஏ) செம்பி நாடு:- | 1. கல்வத்து மாலை: பாடல் 43 |
| | 2. சீதக்காதி திருமணவாழ்த்து 63. |
| (ஐ) கேலிக்கரை:- | 1. கல்வத்து மாலை பாடல் 41. |
| (ஒ) கிற்கிராப் பட்டணம் கிர்க்கிரி | 1. கல்வத்துமாலை பாடல்-40 |
| | அறபுத்தமிழ் நூல்கள். |
| (ஓ) காயல், காயல் நகர், காயல் துறை, | 1. நொண்டி நாடகம் 6, 9, 65, 157, 175, 195 221. |
| (ஔ) வலிமார் பட்டணம் | 1. மெய்ஞ்ஞான ரத்தின மாலை. ஆசியா உம்மா |

புலவர் நாயகம் ஷெய்கப்துல் காதிர் நயினார் லப்பை ஆலிம்
அவர்கள் முதன் முதலாக சீறாப்புராணத்தை
கி. பி. 1842-ல் பரிசோதித்து
வெளியிட்டபோது இயற்றிய

## அச்சிற் பதிப்பித்த வரலாறு
## (நேரிசையாசிரியப்பா)

திருமறைப் பொருளினுந் தெளிதரு மறிவினும்
அருமறைப் பொருளாய் அனைத்தினுந் தோற்றும்
பண்புந் தொழிலும் பெயரும் பயனும்
எண்படும் பேரும் இன்பமு மியல்பும்
வெவ்வேறு படினும் வேற்றுமைக் கெல்லாம்
அவ்வே றளித்தும் அமையாக் கருத்தனாய்
தன்னைத் தன்னாற் 'றனக்குத் தானே.
தன்னின் றன்கட் காணுந் தகையன்
காண்போன் காட்சிக் காணப் படுபொருண்
மூன்று மொன்றா முத்துறை யானோன்

நடுத்துறை யாகி யிருதுறை நயமும்
எடுத்தரு ளொளிவா யிருந்தமெய்ப் பொருளாய்
ஆல மனைத்து மகத்து ளமைத்துங்
கோல மனைத்துங் கொண்டவெம் பெருமான்
சோதியிற் சோதியாத் துலங்குமத் தன்மை
ஆதியா வெடுத்த அவதா ரத்தால்
உரித்தா மானிட வுருவங் கொண்டு
கருத்தா வாகிய காரணக் கடவுள்
முகம்மது நயினார் முதிர்புகழ்ச் சரிதையை
யகமிக மகிழ்கூர்ந் தரும்பலன் கருதித்

தேங்கனி மணமுந் தினந்தினம் பொழிலின்
பூங்கமழ் கீழக் கரையெனும் புரத்தில்
நெறியுந் தவமும், நீதியு மொழுக்கத்
தறிவுங் கோடா தமைதரு வாழ்க்கையர்

நற்குண நயினார் நனிகூர் காட்சிப்
பற்பல போதும் படைத்த வரத்தினர்
வழிபடு கலைஞர் வாழ்த்துதற் காய
வொழுகுடைக் கல்வியி னூங்கிய நாவலர்
ஐவகை யிலக்கணத் தாய்ந்து பயன்படு
மெய்வகை யிலக்கண மீறிய கருத்தினர்

அருளொடு தெய்வப் பத்தியு மரும்பொருட்
டெருளொடு நிலைத்த வுறுதிச் சிந்தையர்
துதிக்கத் துதிக்கச் சுகந்தருந் தவத்தின்
சதக்கத் துல்லா சாகிபைத் தொடர்ந்தவர்
அமரு முயிர்கள்பா லன்பா லுயர்ந்த
**வுமறுப் புலவரென் றோங்கிய** வள்ளல்
சுருங்கிய சொல்லும் விரிந்த பொருளுமாத்
தெரிந்த மொழியுஞ் செறிந்த நயமுமா
மலைவிலா விளக்கமு மதிபடு பாகமாக்
கலைவிலா நிலையுங் கனிந்த சுவையுமாச்

செவிக்கோ ரின்பமுஞ் சிந்தைக்கா நந்தமும்
எவர்க்கு நல்கு மிசையும் பேறுமா
நாளு நாளு நவநவ மாக
ஆளுந் தொடைபல அமைத்துத் திரண்ட
பாலொடு தேனும் பழமுங் கண்டு
மேலுள சுவையெலா மிகுத்தால் வெறுக்கத்
தகுவன வாமெனத் தனியே மதுரம்
உகுவன வாயின்ப மூறிய கவிகளாற்
சிதநூ லியல்பிற் சீறா வென்ன
முதனூ னாமமே நாட்டி முதுபயன்

அறம்பொரு ளின்பம்வீ டனைத்து மடங்கிய
திறம்பெறுங் காப்பியஞ் செய்தன ரஃதே
பலபல தேஎத்தும் பல்லோ ரிடத்தும்
பலபட வெழுதிப் பயின்று வருவதின்
எழுத்தினுஞ் சொல்லினும் பொருளினு மியாப்பினும்
வழுத்திய வணியினும் வழுசில கலத்தலால்
நலனுற வெவரு நனிபய னோர்ந்து
பலனுறத் தாங்கள் பரிசோ தித்துத்

துளக்கற வச்சிற் றுலங்கப் பதிப்பித்து
விளக்கவேண் டுமென விளைபுலன் மிகுத்த

பெரும்பதி காயலிற் பிரபல முடைய
அருந்தவத் தோர்களுக் கருமணி யாகிய
சால்புறு செய்கு சமுசுத்தீன் லப்பை
யாலி மீன்ற வழகிய செல்வன்
சேர்ந்தவர்க் காதரஞ் செலுத்து மனத்தன்
தேர்ந்தவர்க் குதவி செய்தய வுடையன்
இயலிற் சிறந்தோன் எனக்குறுந் துணைவன்
புயலிற் சிறந்தோன் புண்ணிய மதியினன்
நண்புறை உவைசு நயினார் லப்பை
யன்புடன் கேட்ட வருமை யுன்னி

அள்ளிய வமிர்தம் அருங்கர விரற்கிடை
துள்ளிய திவலையைத் துணைக்கையா லேந்தியுண்
டெள்ளலி லின்பநீ யெய்துக வென்றென
துள்ள முறுத்திய வோகையி னேவலால்
நாயகன் கருணையை நந்நபி யருளினைத்
தூயவ ருவப்பினைத் தொடர்ந்தவர் துவாவினைப்
பாடினோ ரன்பினைப் படிப்போர் பயனினை
நாடி நாடி நன்கென வியைந்து
பாவலர் கருத்தும் பாடலி னடையுந்
தாவிய பொருளின் முன்பினிற் சார்பும்

ஒழுங்கு முதனூல் உண்மையுந் தகுதியும்
அழுந்து முள்ளத் தறிவா லாய்ந்தும்
வேதம் பிறந்த மேன்மையம் பாடையிற்
பேதம் பிறவாது நன்குறப் பேணியும்
புகழணி வள்ளல் புனைந்த திருநாமத்
துகர மிருவகை யுகரமாக் கொண்டும்
பொதுவுஞ் சிறப்பும் பிறழ்ந்து புகுந்ததை
அதனத னெழுத்தே யமைத்தும் விகாரம்
படாதன வற்றைப் படுத்தியு மியல்பிற்
கெடாதன வற்றை அமைத்துங் கிளந்துந்

தபந்தவ மாதல்போற் றவழ்ந்த நபிநவி
நிபமொழி யனைத்தையும் வருக்கத்தி னிறுவியுஞ்
சிறப்பெழுத் துறழ்ந்து செலுமுறை யாக

அறபெழுத் தொலித்தல் ஆமெழுத் தியற்றியும்
பதங்களிற் பிறழ்ந்ததைப் பகுத்தும் பகாதும்
அதனத னமைதியே அமைத்துஞ் சிலசில
பாலுந் திணையும் இடனும் பயில்வினாக்
காலமும் வழீஇயவை மயங்காது காத்துந்
தொகாநிலைத் தொகைநிலைத் தொடர்களுட் சிதைந்தவை
பகாநிலை யாக்கி விளங்கவுரைப் படுத்தியும்

வேற்றுமைப் பொருள்கள் வேறுபா டவைகளைத்
தோற்றிய முறைபோற் றொகுத்தும் விரித்தும்
முற்று மெச்சமு முடியா தனவற்றை
முற்ற முடித்தும் மொழிபெயர்த் தடுக்கியும்
பொருட்டொடர் நோக்கி மொழித்தொடர் பொருத்தியும்
மருட்டுந் துறைகளின் மயக்க மொதுக்கியும்
புறமு மகமும் புணராத் துறையொரு
புறமு மகமும் புகுதப் புகுத்தியும்
எதுகை மோனை யியைபாற் றிரிந்தவை
எதுகை மோனையைத் திரித்தியல் பாக்கியும்

இசைகெடா தெழுத்தின் இயல்பு நிரைத்தும்
அசைகெடா தமைத்து மணிபெறப் பொருத்தியும்
உவமை முதலா வுள்ள வணிகளில்
நவநிலை பிறழா தவணிலைப் படுத்தியும்
இன்னமுஞ் சிதைந்தன வெவற்றையு மாய்ந்தாய்ந்
துன்னிய விதிபோல் ஒழுங்குறத் திருத்திப்
பலபல பாடத்தாற் பரிசோ தித்தும்
பலனுற வச்சிற் பதிப்பிக்கச் செய்தனன்
காவலர் மாளிகை கடிகமழ் நாகையின்
காவலர் சரிதையின் காரணப் புராணமும்

பாமா தவத்தினர் பணிபகு தாதின்
கோமான் சரிதையின் குத்புநா யகமும்
புகழ்கசு பாவும் புரமு மியற்றினர்
திகழ்தரு சரிதையின் றிருமணி மாலையும்
அருந்திற னபிமுத லஸ்கா பிகளாற்
பொருந்திறல் வாகையின் புத்தூகுச் சாமும்
ஈகையது பயத்த தேக முகத்தது

நாகை யமைத்தது நாகையந் தாதியும்
உள்ளமைப் பொருளா யொன்றாய் வெளிப்படைக்
கெள்ளருந் துறைகளாய்ச் சித்திர மியைந்ததாய்

நலம்புனை நபிகளி னாயக ரதுமக்காக்
கலம்பக மொன்றுங் கனசொர்க்க நீதியும்
குரிசிற் பெருங்கிளை கோத்திர மாலையும்
வரிசையி னெழுத்தான் வருக்க மாலைகள்
சித்திரக் கவிபல சிறந்தன வெல்லாங்
கத்த னருளால் புனைந்த கருத்தினன்
பவத்தடை யறுத்துப் பலன்றரு நெறியின்
றவத்துறை பயிலுஞ் சான்றவர் வாழும்
வகுதையம் பதியான் வர்த்தகர் சிரோமணி
பகுதகு மிரத்தினப் பரிச்யைர் குலாதிபன்

மாமு நயினார் மரைக்கார் பேரன்
தேமறை யரும்பொரு டெளிந்துணர் சிந்தையின்
பேறுறை மானாப் பிள்ளையி லப்பை
வீறுடை யாலிம் விரும்பிய கண்மணி
முழுமதி கபீபு முகம்ம திலப்பை
செழுமணி தவத்தாற் றோற்றிய செல்வன்
ஆதி செய்கு அப்துல்
காதி றென்று கருதுநா வலனே

அச்சிற் பதிப்பித்த வரலாறு முற்றிற்று.

# எமது வெளியீடுகள்

1. **சீறாப்புராணம்**
(பாட்டு முதற்குறிப்பு அகராதியுடன்
கூடிய முழு நூல்) ரூ. 70-

2. **ஆயிர மசலா**
(முதல் இஸ்லாமியத் தமிழ்க் காப்பியம்) ரூ. 15-

3. **திருமணக் காட்சி**
(இஸ்லாமியத் தமிழ்க் காப்பியம்) ரூ. 15-

4 **கீர்த்திமிகும் கீழக்கரை** ரூ. 10-

5 **ஷுஅபுத்தீன் மாலைகள்·20** ரூ. 10-

6. **தமிழகத்தில் மார்க்கோபோலோ
இப்னு பத்தூத்தா** (வரலாற்றாய்வு) ரூ. 5-

7. **சூபி ஞானி செய்யிது ஆசியா
உம்மா பாடல்கள்** ரூ. 5-

8. **ஆசாரக்கோவை**
(கீழக்கரை மு. க. அ. அப்துல் மஜீது புலவர்) ரூ. 5-

9. **கீர்த்தன மஜீது**
(ஆசாரக்கோவை பாடிய
அப்துல் மஜீதுப் புலவர்) ரூ. 3

10. **நபியவதார அம்மானை**
(கீழக்கரை தைக்கா சாஹிபு (ஒலி) பாடியது) ரூ. 2-


## மரைக்காயர் பதிப்பகம்

"மரைக்காயர் மஹால்"
3, ரட்லன்ட் கேட் இரண்டாம் தெரு,
நுங்கம்பாக்கம், சென்னை-600 006.

Printed at : Emkay Prints
2, 1st Lane Angappa Naicken Street, Madras-1. Phone : 517830